மில்க் வைற்
நீல சோப்
10 சதம்
கட்டியை வாங்கி
அதிக லாபமடையுங்கள்

Registered as a Newspaper in Ceylon விலை சதம் 20

# ஈழநாடு

THE EELA NADU
தேசிய தினசரி National Tamil Daily
மலர் 8 (19-2-66) இதழ் 11
மாசி 8 ஷவ்வால பிறை 27 சனிக்கிழமை

பாலக்காடு ஆர் வி. ஜி. பீடிகள்
தரத்திலும், மணத்திலும், குணத்திலும் சிறந்த ஆர். வி, ஜி. பீடிகளைக் கேட்டு வாங்கி உபயோகியுங்கள்.
முக்கிய கவனிப்பு: சிலர் போலி பீடிகளை ஒறிஜினல் ஆர். வி. ஜி. பீடிகள் என விற்பனைசெய்கிறுர்கள். எங்கள் வான் மூலம் மட்டுமே நாம் ஆர். வி. ஜி. பீடிகளை விநியோகம் செய்கிறேம். ஆதலால் வேறுகார்களிலோ பைசிக்கிள்களிலோ சிலர் விநியோகம் செய்யும் போலி பீடிகளை வாங்கி ஏமாருதீர்கள்.

குழப்பத்துக்குக் காரணமாயிருந்த

## மாணவர் மீது நடவடிக்கை

### பல்கலைக் கழகத்திலிருந்து சிலர் வெளியேற்றப்படலாம்

வெள்ளவத்தை, வெள்ளி

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் சென்ற டிசம்பர் மாதம் நடைபெற்ற கலவரம் சம்பந்தமாக விசாரணைசெய்த தனிநபர் கமிஷன் தனது அறிக்கையில், கலகத்துக்கு முக்கிய காரணமாக இருந்தவர்கள் என சில மாணவர்கள் மீது குற்றம் சாட்டியிருக்கிறது, இந்த மாணவர்கள் மீது எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைபற்றி இப்போது பரிசிலனை செய்யப்பட்டு வருவதாக அறியப்படுகிறது.

குறிப்பிட்ட இந்த மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் இருந்து நீக்கப்படக்கூடுமென்றும் மற்றும் சிலர் சில வாரங்களுக்கு பல்கலைக் கழகத்திலிருந்து நிறுத்தி வைக்கப்படக்கூடுமென்றும் மற்றும் சிலருக்கு அபராதம் விதிக்கப்படக்கூடுமென்றும் அறியப்படுகிறது.

வவுனியாவில்

## நவீன வசதிகளுடன் புதிய சந்தை

வவுனியா, வெள்ளி

வவுனியாவில் சுமார் நான்கு லட்சம் ரூபா செலவில் கட்டப்படவிருக்கும் புதியசந்தையின் அத்திவாரக் கல்லை, வவுனியா பட்டன சபைத்தலைவர் திரு. ம. பொன்னையா நேற்றுக்காலை, குத்துவிளக்கேற்றி, தமிழ் முறைப்படி நாட்டினுர்,

அத்திவாரக் கல் நாட்டு விழா நடைபெற்ற போது, பட்டனசபைஊழியர்களும், பொதுமக்களும் திரண்டு நின்ருர்கள்.

ஒரு லட்சத்து 56 ஆயிரம் ரூபா செலவாகும் மாதிரிச் சந்தையின்முதலாவதுவடிவ வேலைகள் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது. முதலாவது வடிவம், அநேகமாக ஆறு மாத காலத்திற்குள் முடிவடைந்துவிடுமென எதிர் பார்க்கப்படுகிறது.

முதலாவது வடிவம் முடிவடைந்ததும் பொதுமக்கள் பாவிப்பதற்கு விடப்படுமென்றும் அதன்பின் மற்ற வடிவத்தில் வேலைகள் தொடர்ந்து நடைபெறும் என்றும் கூறப்படுகிறது.

## பகைநாகர்களுடன் பிரதமர் பேச்சு நடத்தினர்

புதுடில்லி, பெப். 18

இங்கு வந்திருக்கும் பகைநாகர்கள் கோஷ்டியினர் இன்று காலை இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்து பேச்சுகள் நடத்தினர்.

இந்தப் பேச்சுகளின் போது அஸாம் முதன்மந்திரி, சலிகாரும் அமைதிக் குழு உறுப்பினரான ஜெயப்பிரகாஷ் நாராயணும் மற்றும் சிலரும் கலந்துகொண்டனர்.

பேச்சுகள் சுமார் ஒன்றரை மணி நேரம்வரை சுமுகமாக நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. பிரச்னைகளைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு இருதரப்பினரும் உடன்பட்டதாகத் தெரியவருகிறது.

இருதரப்பினருக்குமிடையே பேச்சுகள் மீண்டும் நாளை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 8000 அங்கத்தவர்

வெள்ளவத்தை, வெள்ளி

யு. என், பி. யின் கட்டுப்பாட்டிலுள்ள தேசிய தொழிற்சங்கத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையைச்சேர்ந்த எண்ணுயிரம் தொழிலாளர் சேர்ந்துள்ளனராம்.

### தேசிய சுவீப் முடிவுகள்

பம்பலப்பிட்டி, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசியசுவீப்முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
05 E 0021 ரூ 51,030

இரண்டாவது பரிசு
07 P 0248 ரூ 20,412

மூன்ருவது பரிசு
01 D 0627 ரூ. 5,103

(5-ம் பக்கம் பார்க்க)

### விக்கிரகம் கிடைத்த விந்தை!

யாழ்ப்பாணம், சனி

கொக்குவில் கிழக்கிலுள்ள பொற்பதிவிநாயகர் ஆலயத்தில் காணுமற்போனதாகக் கருதப்பட்ட, வெள்ளியால் செய்யப்பட்ட, விநாயகர் விக்கிரகம் சிவராத்திரி தினமான நேற்று ஆலயத்தில் அர்த்தமண்டப வாசலில் இருக்கக் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆலயத்தின் மேற்பார்வையாளரும், அர்ச்சகருமான திரு. ந தியாகராசஐயர் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

காணுமற் போனதாகக் கருதபபட்ட விநாயகர் விக்கிரகம் ரூபா 1500 பெறுமதியானதென்றும் இது எப்படிப் போனது, எப்படி வந்தது என்பது பெரும் அதிசயத்தை ஏற்படுத்தியுள்ளதென்றும், ஆண்டவன் திருவிளையாடல்தானென்றும் திரு. ந தியாகராசஐயர் தெவித்தார்.

### சந்திரன் போன்று காட்சியளித்த சூரியன்

அநுராதபுரம், வெள்ளி

அநுராதபுரத்தில் நேற்று நடைபெற்ற 'ரணவெட்டா' அத்திவாரக்கல் நாட்டு வைபவத்தில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான பௌத்த யாத்திரிகர்கள் நேற்றுக் காலை 8-17க்கும் 8-20 மணிக்குமிடையில் உள்ள மூன்று நிமிஷ நேரம் கூச்சமின்றிப் பார்த்ததாகவும் அப்போது சூரியன் சந்திரனைப் போன்று வட்டவடிவமாகத் தெரிந்ததாகவும், சூரிய கிரணங்கள் பல வர்ணங்களாகக் காட்சியளித்ததாகவும் யாத்திரிகர்கள் தெரிவித்தனர்.

### அந்தஸ்து

வெள்ளவத்தை, வெள்ளி

கொழும்பு மாநகரசபைக்குக் 'கோர்ப்பரேஷன்' அந்தஸ்து இன்னும் சில மாதங்கள் [illegible] டப்படுமெனத் தெரிகிறது.

## அணுகுண்டுகள்கொண்டுசெல்வது தடைசெய்யப்படவேண்டும்

### படைகுறைப்பு மகாநாட்டில் அமெரிக்காவுக்கு ரஷ்யா கோரிக்கை

ஜெனிவா, பெப். 18

அமெரிக்க விமானங்கள் எதுவும் அணுகுண்டுகளை ஏற்றிக்கொண்டு தனது எல்லையைக் கடந்து செல்லக் கூடாதென்று சோவியத் யூனியன் தெரிவித்துள்ளது

ஜெனிவாவில் நடைபெற்றுவரும்படைகுறைப்பு மகாநாட்டில் சோவியத் பிரதிநிதி பேசுகையில் தான் மேற்கண்டவாறு கூறினுர்.

அண்மையில் அணுகுண்டுகளை ஏற்றிக் கொண்டு சென்ற அமெரிக்க விமானம் ஸ்பெயின்மீது விழுந்து நொறுங்கியதுபற்றிக் குறிப்பிட்ட ரஷ்யப் பிரதிநிதி, இந்தச் செயல் மாஸ்கோ உடன்பாட்டை மீறுவதாக இருக்கிறது என்று குற்றம் சுமத்தினுர்.

அணுகுண்டுகளை ஏற்றிச் செல்வதை அமெரிக்கா நிறுத்த வேண்டுமென்றும் இப்படியான மீறல்களை தொடர்ந்து செய்வது மற்றைய நாடுகளின் பாதுகாப்பைப் பலவீனப்படுத்துவதாக இருக்கும் என்றும் அவர் கூறினுர்

### கி. ச. தலைவர்கள் தெரிவு

திருகோணமலை, வெள்ளி

நான்கு கிராமசபைகளுக்கான தலைவர் தெரிவு நடைபெற்றது.

உப்புவெளி கிராமசபைத் தலைவர் தெரிவில் திருவாளர்கள் எஸ். கதிர்காமத்தம்பியும், சி. சிவலிங்கமும் முறையே மூன்று வாக்குகள் பெற்றதைத் தொடர்ந்து திரு எஸ். கதிர்காமத்தம்பி திருவுளச்சீட்டின் மூலம் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

சாம்பல்தீவு கிராமசபைத் தலைவராக திரு. ஆர். தங்கராசா ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நிலாவெளி கிராமசபைத் தலைவராக திரு. ஜே எம். செறிவ் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

குச்சுவெளி கிராமசபையின் தலைவராக திரு. எம். கண்ணுசாமி ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்

### பிரதமர் நாளை அமெரிக்கா பயணம்

பம்பலப்பிட்டி, வெள்ளி

பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவுக்குப் பயணமாகிறுர். இவர் அங்கு வைத்திய சிகிச்சையும் பெற்றுக்கொள்வார்.

பிரதமர் வெளிநாட்டில் இருக்கும்போது ராஜாங்க மந்திரி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன அரசாங்கத் தலைவராகப் பணியாற்றுவார். பதில் திட்டப் பொருளாதார மந்திரியாகவும், பதில் பாதுகாப்பு வெளிவிவகார மந்திரியாகவும் திரு. ஜெயவர்த்தன கடமையாற்றுவார்.

யாழ் மாநகரசபை

### ஊழியர்கள் தாக்கப்பட்டார்கள்?

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாநகரசபை ஊழியர்கள் சிலரை அவர்களது கடமை நேரத்தில் தாக்கியதாகச் செய்யப்பட்டபுகாரைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பொலிஸார், ஒருவர் மீது நடவடிக்கை எடுத்துள்ளனர்.

யாழ்ப்பாண மாநகர சபைக்கு உட்பட்ட வீதிகளில் போக்குவரத்துக்கு இடையூருக இருக்கும் கட்டாக்காலிமாடுகளை பிடிக்கச் சென்றபொழுதே மாநகர சபை ஊழியர்கள் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மேற்படி சம்பவம் யாழ்ப்பாணமேயர், ஆணையாளர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

(ந. நி.)

### எட்டுப் பிள்ளைகளின் தந்தை மரணம்

யாழ்ப்பாணம், சனி

எட்டுப் பிள்ளைகளுக்குத் தந்தையான ஒருவர் வீடு சென்று மனைவியுடனும் பிள்ளைகளுடனும் வாக்குவாதப்பட்டபின் அவர்களைத் தாக்கிவிட்டு, நித்திரைக்குச் சென்ருர். மறுநாள் காலை அவர் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

கொழும்புத்துறையைச் சேர்ந்த 45 வயதான ஜேக்கப் ஜோசப் மரண விசாரணையின்போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ்ப்பாணம்நகரப்பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் மரணவிசாரணைநடத்தினுர். காலஞ்சென்றவரின் மனைவி சாட்சியமளிக்கையில், தனது கணவனின் சடலத்தின் அருகில் சிறுபோத்தல் ஒன்று காணப்பட்டதாக தெரிவித்தார்.

பிரேத சோதனை நடத்துமாறு மரணவிசாரணை அதிகாரி உத்தரவிட்டு தீர்ப்பு வழங்குவதை பின்போட்டார்.

### புதிய தலைவர்

வவுனியா, வெள்ளி

மாந்தை தெற்கு (உயிலங்குளம்) கிராமச் சங்கத்தின் தலைவர் தெரிவு நேற்றுக் காலை வடபிரதேச உள்ளூர் ஆட்சி உதவி ஆணையாளர் திரு. கனகநாயகம் நல்லநாதன் தலைமையின்கீழ் கிராமச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது திரு சவிரிகிளமென்ட் அதிகப்படி ஒரு வாக்கினுல் புதிய கிராமசபைத் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

விளக்குகள் பலவற்றைப் பெற்றிருந்தாலும் விழியற்றவன் அவைகளால் ஒரு பயனும்அடைய முடியாதது போல. செல்வங்களை நிரம்பப் பெற்றிருந்தாலும் அன்பு கனியும் உள்ளம் இல்லாதவர்கள் அவைகளால் ஒரு பயனும் அடைவதில்லை.

— திரு. பெ. விசுவநாதம்


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone [illegible]

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆ மாசி 8உ (19-2-66)


## நகர அபிவிருத்தி

வீட்டுத் தட்டுப்பாட்டை நீக்கவும் சேரிப் பிரச்னையை ஒழிக்கவும் மாதிரி நகரமொன்றை நாற்பது ஏக்கர் நிலத்தில் கொழும்புக்குச் சமீபத்தில் அமைப்பதற்கு உதவி ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. பிரேமதாசா யோசனை தெரிவித்திருக்கிறார். சேரி ஒழிப்பு, நகரத்திட்டம்பற்றி ஐ. நா. நிபுணர் தெரிவித்துள்ள ஒரு திட்டத்தையும் திரு. பிரேமதாசா தெரிவித்திருக்கிறார். இந்த யோசனைகளையும் திட்டங்களையும் அரசாங்கம் பரிசீலனை செய்து விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதேசமயம் கொழும்பு நகரின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு மட்டுமல்லாது யாழ்ப்பாணம் போன்ற நகரின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும் இந்த யோசனைகள் பயனளிப்பதாயிருக்க வேண்டும்.

கொழும்பு நகரில் வீடில்லாப் பிரச்னையும் சேரிப் பிரச்னையும்பெரும் பிரச்னையாக வளர்ந்துள்ளதென்பது உண்மையே. இப்பிரச்னைகளுக்கு உடனடியாகத் தீர்வுகாணமுடியாதென்பதும் உண்மையே. சரியான திட்டமில்லாமல் இப்பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பது சுலபமல்ல. புதிய வீடமைப்புத் திட்டங்கள் பல உருவாக்கப்பட்டு சேரி மக்களுக்குக் குடியிருப்பு வசதியளிக்கப்பட்டு வந்துள்ளது. எனினும் வீடு கிடைத்தவர்கள் வீடுகளில் குடியேறியதும் வீடில்லாத மற்றும் பலர் புதிய புதிய சேரிகளை உருவாக்கி வருகின்றனர். எனவே புதிய வீடமைப்புத் திட்டங்களின்மூலம் சேரிப் பிரச்னையைத்தீர்ப்பது சுலபமல்ல. சேரிவாசிகளின் தொகைக்கேற்ப வீடமைப்புத்திட்டங்களை உருவாக்கவேண்டும். இதற்குச் சரியான முறையில் திட்டமிட வேண்டியதும் மாதிரி நகரம் அமைக்க வேண்டியதும் அவசியமாகும். இதர நாடுகள் பலவற்றில் இதேமுறை பின்பற்றப்பட்டிருக்கிறது. இந்தியாவிலும்கூட இந்தமுறை பின்பற்றப்பட்டு நல்ல பலனளித்திருக்கிறது. உதவிமந்திரியின் இந்த யோசனையும் நற்பயனளிக்கக் கூடியதே. ஆனால் கொழும்பு நகருக்குச் சமீபத்திலுள்ள நாற்பது ஏக்கர் நிலப்பரப்பில் மாதிரி நகரம் அமைக்க வேண்டுமென்ற யோசனையைவிட கொழும்பு நகருக்கு தூரத்தே புதிய மாதிரி நகரம் அமைக்க யோசனை தெரிவித்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் வீடில்லாப் பிரச்னையும் சேரிப் பிரச்னையும் இப்பொழுதுதான் தலைதூக்கியுள்ளது. இந்த இருபிரச்னைகளுக்கும் தீர்வு காண்பது இப்பொழுது சுலபம். ஆனால் சரியான திட்டமில்லாமல் கட்டிடங்களும் வீதிகளும் தினம் தினம் உருவாகி வருவதாலும் வடிகால்வாய்த்திட்டம் சரியான முறையில் இல்லாததாலும் நகரிலுள்ளவர்களும் வெளியூர் மக்களும் வீண் சிரமத்துக்குள்ளாகின்றனர். யாழ்ப்பாண நகரத்தில் நவீன மாதிரிச்சந்தை அமைப்பதற்கும் பஸ்நிலையம் அமைப்பதற்குட நடவடிக்கை எடுக்கப்பட்டபோதிலும் திட்டமோ, ஒழுங்கோ இல்லாத காரணத்தால் இன்னும் அது உருப்படாமலேயே இருந்து வருகிறது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் உதவிமந்திரியின் யோசனையைப் போன்று புதிய மாதிரி நகரம் அமைக்க வேண்டியது அவசியமில்லையெனினும் பஸ்நிலையம், நவீன சந்தை, மத்தியதர வகுப்பினருக்கான வீடமைப்புத்திட்டம் முதலியவைகளை நகர நிர்மாண நிபுணர்களின் ஆலோசனையுடன் திட்டமிட்டு நகரின் அமைப்பையே திட்டமிட்ட முறையில் மாற்ற வேண்டும். வெளிநாட்டு நிபுணர்களினது உதவியையும் ஆலோசனையையும் முடிந்தால் வெளிநாட்டு நிதிஉதவியையும் பெற்றும் நகருக்கு வடிகால்வாய்த் திட்டமொன்றையும் உருவாக்க வேண்டும். இதற்கு நமது மாநகரசபை உறுப்பினர்களுக்குள் ஒற்றுமை அவசியம். நமது மாநகரசபை உறுப்பினர் ஒன்று சேர்ந்து யாழ்ப்பாணப் பிரதிநிதியுடனும் ஸ்தலஸ்தாபன அமைச்சருடனும் கலந்தாலோசனை செய்து இலங்கையின் இரண்டாவது பெரிய நகரமான யாழ்ப்பாண நகரை புனரமைப்பதற்கான திட்டமொன்றை விரைவில் தயாரித்தால், உதவிமந்திரி தமது யோசனையைத் தெரிவித்துள்ள இச்சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தின் உதவியைப் பெறுவது கஷ்டமாகாது.

## கேவலசிங

புதுடில்லி, பெப். 17

பாகிஸ்தானிலுள்ள இந்திய ஹைகமிஷனர் திரு. கேவல்சிங் நேற்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராவைச் சந்தித்தார். உத்தேச இந்தியா - பாகிஸ்தான் மந்திரிகள் மகாநாடு சம்பந்தமான பாகிஸ்தான் கருத்தை திரு. கேவல்சிங் வெளியிட்டதாகத் தெரிய வருகிறது.

## கூட்டுறவு வங்கி கலைக்கப்படுகிறது

மட்டக்களப்பு, வியா.

மட்டக்களப்பு கூட்டுறவு மாகாண வங்கி கலைக்கப் படவிருக்கிறது

இதற்குப் பதிலாக மக்கள் வங்கியின் கிளையொன்று இங்கு நிறுவப்படுமெனத் தெரிகிறது.

# கம்பனை புதுநோக்கில் காட்டும் ஞானக்கவிஞன்

யாழ்ப்பாணம், சனி

''ஞானக் கவிஞன்' ஈழத்தில் மட்டுமன்றி தமிழ்நாட்டிலும் கம்பனை புதுநோக்குடன் வெளிக்காட்டுகிறது. உண்மை நிகழ்ச்சி, உணர்ச்சித் துடிப்பு, உயர்ந்த எண்ணம் இருப்பதுதான் இலக்கியமாகும். இம்மூன்றையும் இந்நூலில் காணமுடிகிறது.''

நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் 'சொக்கன்' எழுதிய 'ஞானக் கவிஞன்' வெளியீட்டு விழா நேற்று முன்தினம் மாலை நடைபெற்றபோது, வித்துவான் க. வேந்தனார், அறிமுகவுரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார்.

கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக்கலாசாலை அதிபர் திரு. சி. விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வித்துவான் க. வேந்தனார் மேலும் கூறியதாவது:-

ஈழத்தமிழகம் தென்னாட்டிற்கு கலைத்துறையில் அடிமை என்ற எண்ணம் 50 வருடகாலமாக இருந்து வந்துள்ளது. ஆனால் ஈழத் தமிழர்கள் தனித்தன்மையுடன் வாழ்ந்துவந்தார்கள்.

கடைச்சங்க காலத்தில் ஈழத்திலிருந்து ஒரு புலவர் தென்னாட்டிற்கு அழைக்கப்பட்டிருக்கிறார். சைவசமயமும் ஈழத்தில் தனிச் சிறப்புடன் ஓங்கிவளர்ந்தது. பொருளாதார நெருக்கடியால் தமிழ் மொழியை மறந்த ஒரு நிலை உருவாகியது. இதனால் பண்டிதர்கள் புதிய படைப்பு படைக்கும் நிலை ஏற்படவில்லை. பண்டிதன்தான் இலக்கியம் படைக்க வேண்டுமென்பதில்லை.

கம்பன், தமிழர் பண்பாட்டிற்கு அமைய, எதிர்காலத்தை நண்குணர்ந்து, தமிழர் எக்காலத்திலும் ஏற்கக் கூடியவகையில் இராமாயணத்தைப் பாடியுள்ளார். இராவணன் சீதையைத் தனது தொடைமீதுவைத்து சென்றான் என்று வால்மீகி இராமாயணத்தில்உள்ளதை மாற்றி, சீதையை புஷ்பவிமானத்தில் தூக்கிச் சென்றான் எனக் கம்பர் கூறியுள்ளது சிந்தனைக்குரியது. வில்லை வளைத்தபின்தான் இராமன் சீதையைப் பார்த்தான் என்ற நிலையை மாற்றி வில்வளைக்கச் செல்லும் வழியில் மேல்மாடியில், இராமன் சீதையைப் பார்த்ததாகவும். அதேநேரம் சீதையும் இராமனைப் பார்த்து விரும்பியதாகவும் கம்பன் கூறியிருப்பது, தமிழர் பண்பாட்டிற்கு அமைய தனது படைப்பு இருக்கவேண்டுமென்பதற்காகவே. கம்பன் தன் வாழ்வில் ஏற்பட்ட இன்பதுன்பங்களையெல்லாம் இராமாயணத்தில் வெவ்வேறு இடத்தில் புகுத்தியுள்ளார் என்பதைச் சொக்கன் தெளிவாகவிளக்கியுள்ளார்.

நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. சி. விஸ்வலிங்கம் தலைமையுரையில் கூறியதாவது:-

தமிழ்மொழியை நன்றாகப் பயின்றவர்கள் ஈழத்தில் மிகக் குறைவு. அப்படிப் பயின்றவர்களில் எழுதக் கூடியவர்கள் மிக மிகக் குறைவு.

இப்பொழுது அங்குமிங்குமாகப் பல தமிழ் நூல்கள் வெளியிடப்பட்டு வருவது மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. 'ஞானக்கவிஞன்' ஒரு சிறந்த படைப்பு. சொக்கன் சிறந்த எழுத்தாளன்என்பதற்குஇதுஒருஎடுத்துக்காட்டு. மக்கள் மனதைக் கவரக் கூடியவிதத்தில் நல்ல தமிழில் எழுதியுள்ளார். கட்டுரை, விமர்சனம், சிறுகதை கவிதை, நாடகம் ஆகிய பல படைப்புக்களை அவர் தமிழ் [illegible] எழுத்தாளன் மாத்திரமல்ல, அவர் ஒரு நாடகாசிரியர், நடிகனும் கூட. அவரிடம் எல்லா ஆற்றலும் உண்டு. கவிதைக்கு இலக்கணம் கூறி, இலக்கணத்துக்கு அமைய கவிதை பாடியுள்ளார்.

டாக்டர் செ. சிவஞானசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்துகையில் கூறியதாவது;

சொக்கன் ஒரு வித்துவான். தமிழை நன்றாகப் பயின்றவர் அவர் ஒரு சிருஷ்டிகர்த்தா. இவரை பண்டிதர் கூட்டத்தில் சேரவிடாது எழுத்தாளர்கள் ஒருபக்கத்திலும் எழுத்தாளர்கள் கூட்டத்தில் சேரவிடாது, பண்டிதர்கள் ஒரு பக்கத்திலும்இழுக்கிறார்கள்.

நன்றாக தமிழ் படித்தவர்கள் இலக்கியம் படைக்க முன்வருவதில்லை. மற்றப் பக்கத்தில், எழுத்தாளர்கள் இலக்கியம் படைக்கின்றார்கள். இந்த இரண்டும் சேர்ந்தால்தான் நவீன இலக்கியம் தோன்றமுடியும். தமிழை நன்றாக பயின்ற சொக்கன் இலக்கியம் படைப்பதால் அவரின் படைப்புகள் சிறந்தவையாக இருக்கின்றன.

திரு. அ. சண்முகதாஸ் அறிமுகவுரை நிகழ்த்துகையில் கூறியதாவது:-

நாவல்வடிவம் மேலைத் தேசத்தவர்களால் அளிக்கப்பட்ட இலக்கியவடிவமேயாகும். கதை கூறுகின்ற வழக்கம் உலகிலுள்ள எல்லா மக்களிடமும் இருந்துவந்தது. அதனை இலக்கிய வடிவமாக அமைத்தபெருமை ஐரோப்பியரையே சாரும்.

பிரம்மஸ்ரீ சோ. இ. சந்திரஐயர் அறிமுகவுரைவழங்கும் போது கூறியதாவது:-

தமிழில் உள்ள இனிமைகளை அடுக்குமொழி வசனங்கள் மூலம் எடுத்துக் காட்டும் காலமிது. கம்பனின் வாழ்க்கை அடிப்படைத்தத்துவங்களை மிகச் சிறப்பாக சொல், பொருள், நயத்தோடு சொக்கன் கூறியுள்ளார். தற்பொழுது கம்பராமாயணத்தைப் படித்துமுடிப்பது மிகவும் கஷ்டம். அவற்றில் உள்ள சாரங்களை, சொக்கன் சுருக்கம் சுருக்கமாகத் தந்துள்ளார்.

திரு. க. சிவராமலிங்கம், திரு. அ. சரவணமுத்து, ஆகியோரும் அறிமுகவுரை வழங்கினார்கள்.

திரு. தி. ச. வரதராசன், ஞானக்கவிஞன் முதற் பிரதியை வாங்கினார். 'கம்பன் கவியமுதம்' என்னும் பொருள்பற்றி வித்துவான் பொன். முத்துக்குமாரன் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

## இந்திய-பாக் தபால் விநியோகம்

ராவல்பிண்டி, பெப். 18

பாகிஸ்தானும், இந்தியாவும் நேற்று மீண்டும் தபால் விநியோகத்தை ஆரம்பித்தன. இந்தியா 124 தபால்களை இந்தியாவிடம் ஒப்படைத்தது. பாகிஸ்தான் 4 தபால்களை இந்தியாவிடம் ஒப்படைத்தது.

## "யூலியசீசர்" நாடகம்

யாழ்ப்பாணம், சனி

இன்று மாலை யாழ்ப்பாண நகர மண்டபத்தில் குருநகர் நாடக மன்றத்தாரால் 'யூலி[illegible]ர்' என்னும் நாடகம் [illegible] திரு. சி. நாகராசா தலைமையில் நடைபெறும்.

## நாட்டிலும் நகரிலும்

ஐம்பது லட்சம் ரூபாய் கொஞ்சநஞ்சமான காசு அல்ல! தாய்லந்து தேசத்திலிருந்து இலங்கை அரசாங்கம் வாங்கிய சுமார் பத்தாயிரம் தொன் அரிசி வரும் வழியில் கடலுக்குள் மூழ்கி விட்டது. அரிசிக்கப்பல் இன்னொரு கப்பலுடன் மோதியதால் உண்டான விபத்தில் கப்பலும் அரிசியும் ஒருங்கே பாதாளத்தை அடைந்துவிட்டன. அரிசியின் விலை ஐம்பது லட்சம் ரூபாய் என்று மதிப்பிடுகிறார்கள். இந்த விபத்துக்குப் பொறுப்பாளி யார் என்பதிலோ, நஷ்டத்துக்கு பாத்திரவாளி யார் என்பதிலோ எமக்கு அக்கறையில்லை. ஐம்பதுலட்சம் ரூபாய் யாருடைய தலையில் சுமத்தப்படப்போகிறதென்று தான் கவலையாயிருக்கிறது.

கப்பல்களில் ஏற்றப்படும் சரக்குகள் எல்லாம் பொதுவாக இன்ஷூர்செய்யப்பட்டே இருக்கும். ஆனால் அரசாங்கம் வாங்கிய இந்த அரிசிக்கு அப்படியான உத்தரவாதம் எதுவும் இல்லையென்று தெரியவருகிறது. ஆகவே இலங்கை அரசாங்கத்துக்கு ஐம்பது லட்சம் ரூபாய் துண்டுவிழுந்திருக்கிறது. பச்சையாகச் சொல்லப்போனால் வரியிறுப்பவர்களாகிய உங்களுக்கும் எங்களுக்கும்தான் தொப்பி!

அரசாங்கம் இந்தப் பணத்தைக் கப்பல் கொம்பனியிடமிருந்து அறவிட முடியுமா? தெய்வாதீனமாக நடந்த விபத்தென்று அவர்கள் சொன்னால் என்ன செய்வது? தேசிய சேமிப்புப் பத்திரங்களை நிறைய வாங்கி உங்களுடைய பிற்கால வாழ்க்கையை உத்தரவாதம் செய்துகொள்ளுங்கள் என்று எமக்கு இடித்து இடித்துப் புத்திமதி கூறும் அரசாங்கம் இந்த விஷயத்தில் ஏன் தவறிவிட்டதென்பது பெரும் ஆச்சரியமாய் இருக்கிறது.

பல வருடங்களுக்கு முன்பு வடமத்திய மாகாணத்தில் ஓர் அரசாங்க அதிபர் இருந்தார். அவருடைய நிர்வாகத்தைப் பற்றி ஏராளமான குற்றச்சாட்டுகள் கிளம்பின. அவற்றை விசாரிப்பதற்காக அரசாங்க 'பைல்' கட்டுகளை எடுத்துக்கொண்டு கொழும்புக்கு வரும்படி கட்டளை வந்தது. அதிபர் ஒரு நிமிஷம் தன் கலங்கிப்போனார். அடுத்த நிமிஷம் 'பைல்' கட்டுகளை லொறியில் ஏற்றிக்கொண்டு கொழும்புக்குப் புறப்பட்டுவிட்டார். போகும்வழியில் நடுக்காட்டுக்குள் லொறியில் தீபற்றிக்கொண்டது. அவரைக் காட்டிக்கொடுக்கக்கூடிய 'பைல்'கள் எல்லாம் சாம்பலாயின. சமயோசித புத்தியுடன் சாதுரியமாய்க் காரியங்கள் நடத்துவதற்குப் பேர்போன அந்த அரசாங்க அதிபர் 'தெய்வாதீனமாக லொறியில் தீபிடித்து 'பைல்'கள் எல்லாம் எரிந்து சாம்பலாகிவிட்டன' என்று மேலிடத்துக்குத் தெரிவித்துவிட்டுக் 'கம்'மென்று இருந்துவிட்டார்.

கப்பல்காரர் சதிசெய்து அரிசியைக் கடலுக்குள் ஆழ்த்திவிட்டார்கள் என்று நாம் கூறவில்லை உண்மையாக விபத்து ஏற்பட்டால் அவர்கள் என்ன செய்ய முடியும்? முன்னெச்சரிக்கையாக அரசாங்கம் ஏன் தனது சரக்குகளை இன்ஷூர் செய்யவில்லை என்பதுதான் மர்மம்.

ஃ ஃ ஃ

அமெரிக்க 'கெயர்' ஸ்தாபனம் அளிக்கும் பால் பவு

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்திய கைத்தொழில் விருத்திக்கு அமெரிக்கா 10 கோடி டாலர் கடனுதவி

## பிரதமர் இந்திராவுடன் பேச்சு நடத்திய ஹம்ப்ரி கான்பரா பயணமானர்

## உணவு நெருக்கடியைத் தீர்க்க காமன்வெல்த் நாடுகள் கூட்டுமுயற்சி

புதுடில்லி, பெப். 17

**அமெரிக்க உபஜனதிபதி ஹம்ப்ரி புதுடில்லிக்கு விஜயம் செய்திருந்ததைத் தொடர்ந்து இந்தியாவுக்கு அமெரிக்காவின் பத்துக் கோடி டாலர் கடனுதவி கிடைக்க விருக்கிறது. இங்கு இரண்டுநாள் விஜயம் செய்த திரு. ஹம்ப்ரி நேற்று இரவு கான்பராவுக்குப் பயணமானர்.**



நேற்றுமுன்தினம் இங்கு விஜயம் செய்த அமெரிக்க உபஜனதிபதி திரு. ஹம்ப்ரி, இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி உள்ளிட்டு பல தலைவர்களுடனும் பேச்சுக்கள் நடத்திவிட்டு நேற்று ஆஸ்திரேலியாவுக்குப்பயணமானர்.

நேற்றுக் காலையில் அவர் இந்திய வெளிநாட்டு மந்திரி சர்தார் சுவர்ண்சிங்குடன் பேச்சுக்கள் நடத்தினர். இந்தப் பேச்சுக்களின் போது வியட்னம் நெருக்கடி பற்றியும் பரிசீலனை செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

### இந்திராவைச் சந்தித்தார்

நேற்றுமாலை அவர் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திடன் பேச்சுக்கள் நடத்தினர். இந்தியாவின் உணவு நெருக்கடி குறித்தும் அமெரிக்காவின் "வியட்னம் சமாதான நடவடிக்கைகள்" பற்றியும் அவர்கள் ஆலோசனை நடத்தியிருந்தனர்.

வியட்னம் நெருக்கடி பற்றிய பேச்சுக்களின் போது, உப அதிபர் ஹம்ப்ரி ஜனதிபதி ஜோன்ஸனின் சமாதானத் திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துக் கூறியதாகவும் அதற்கான இந்தியாவின் உதவியை நாடியதாகவும் தெரியவருகிறது.

வியட்னம் நெருக்கடியைத் தீர்க்கமுயலும் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ள இந்தியா தயாராக விருப்பதாக திருமதி இந்திரா காந்தி உறுதி தெரிவித்திருந்ததாகக் கூறப்படுகிறது.

### அமெரிக்கா உதவி

இந்தியாவின் உணவு நெருக்கடி பற்றி ஆராயப்பட்ட பொழுது, இந்தியாவுக்கு அமெரிக்கா மேலதிகமான உதவிகளை அளிப்பது பற்றிக் கூறப்பட்டதாகவும் இதனை உப அதிபர் ஹம்ப்ரி ஏற்றுக்கொண்டதாகவும் தெரியவருகிறது.

நேற்று நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் திரு ஹம்ப்ரி பேசுகையில், இந்தியாவுக்கு அமெரிக்கா உடனடியாக பத்துக்கோடி டாலர் கடனுதவி அளிக்கும்என்று தெரிவித்தார்.

இந்தியாவின் பொருளாதாரக் கஷ்டங்களை அமெரிக்கா நன்கு உணர்ந்துள்ளதென்றும், இந்தியாவின் கைத்தொழில் அபிவிருத்திக்காக இப்பணம் வழங்கப்படுகிறதென்றும் அவர் கூறியிருந்தார்.

---

### வியட்னம் பற்றி இந்திரா

புதுடில்லி, செப். 18

வியட்னம் நெருக்கடியைத் தீர்த்துவைக்க உதவும் சமாதான யோசனை எதையும் பரிசீலனை செய்ய இந்தியா தயாராக இருக்கிறது என்று பிரதமர் திருமதி இந்திராகாந்தி தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இன்று லோகசபையில் பேசுகையில் தான் மேற்கண்டவாறு கூறினர்.

வியட்னம் யுத்தம் பரவும் அறிகுறிகளை நாம் காணக் கூடியதாகவிருக்கிறது. இது சம்பந்தமாக அமைதித் தீர்வு எதுவும் கூறப்பட்டால் அதனை இந்தியா பரிசிலனை செய்யும் என்றும் பிரதமர் இந்திரா தெரிவித்தார்.

---

லாகூர், பெப் 18

டாஷ்கண்ட்பிரகடனத்தை எதிர்த்துப் பிரசாரம் நடத்தியதன்பேரில் லாகூரில் 6 எதிர்க்கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## இந்தியாவுக்கு உதவியளிக்க பலநாடுகள் கூட்டு முயற்சி

இதற்கிடையில் இந்தியாவின் உணவு நெருக்கடியைத் தீர்த்து வைப்பதற்கு பரவலான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரிட்டிஷ் காமன்சபையில் பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்ஸன் நேற்றுப் பேசுகையில், இந்தியாவுக்கு உதவியளிக்க பல காமன்த் வெல்த் நாடுகள் கூட்டாக முயற்சித்து வருகின்றன என்று தெரிவித்தார்.

இந்தியாவில் உணவு நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறதென்றும் அங்குள்ள மக்களுக்கு உடனடியாக உதவிகள் அளிப்பது மற்றையநாடுகளின் முதற் தடவையென்றும் கூறிய வில்ஸன், பிரிட்டன், கனடா, நியுஸிலாந்து, ஆஸ்திரேலியா உள்ளிட்டு பல காமன் வெல்த் அல்லாத நாடுகளும் கூட்டாக உதவியளிக்க முன் வந்திருப்பதாகத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஹீத் உள்ளிட்டு பல தலைவர்களும் இந்தியாவுக்கு விரைவாக உணவு தானியங்கள் ஏற்றுமதி செய்ய வேண்டும்என்று வற்புறுத்தியிருந்தனர்.



### பர்மிய அரிசி

5000 தொன் பர்மிய அரிசியை ஏற்றிக்கொண்டு வந்த கப்பல் நேற்றுக் கொச்சி துறைமுகம் வந்து சேர்ந்தது.

### கனடா உதவி

கனடா ஒருகோடி டாலர் பெறுமதியுள்ள உணவு தானியங்களை இந்தியாவுக்கு அனுப்பியுள்ளது ஆஸ்திரேலியா 40 லட்சம் தொன் பால்பவுடரை இந்தியாவுக்கு அனுப்பியிருக்கிறது.

## சீனவில் கடும் வறட்சி

### அதிகமானவர்கள் பாதிப்பு

பீகிங், பெப் 18

கம்யூனிஸ்ட் சீனவின் வடகிழக்கில் கடுமையான வறட்சி நிலவுகிறதென்றும் இது விவசாய உற்பத்தியை அதிகமாகப் பாதித்திருக்கிறதென்றும் இங்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இதுபற்றி 'பீகிங் தினசரி' தெரிவிக்கையில் கடுமையான வறட்சி காரணமாகக் குளங்களில் நீர்மட்டம் குறைந்துகொண்டு வருகிறதென்று குறிப்பிட்டுள்ளது கடந்த செவ்வாய்க்கிழமை பீகிங் மக்கள் கமிட்டி (நகரசபை) கூடி இதுபற்றி ஆராய்ந்தது. வறட்சிக்கு எதிராகச் சகல மக்களும் போராடவேண்டும் என்று இக்கமிட்டி முடிவுசெய்தது. விவசாய நிலங்களுக்கு வேறுவிதமாக நீரைத் திருப்பவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

## 'உமது தொடர்பும் வேண்டாம் உதவியும் வேண்டாம்'

### ஸ்மித்துக்கு அமெரிக்கா அறிவிப்பு

ஸாலிஸ்பரி, பெப். 17

"தென்வியட்னமிலிருந்து கம்யூனிஸ்டுகளை விரட்டியடிப்பதில் உங்களுக்கு பூரண ஒத்துழைப்புத் தருகின்றோம். வேண்டுமென்றல் துருப்புகளைத் தந்துதவவும் தயார்!" என்று ரொடீஷியப் பிரதமர் திரு. அயன்ஸ்மித் அனுப்பிய செய்தியை அமெரிக்காநிராகரித்திருக்கிறது.

"நீரும் வேண்டாம் உமது உதவியும் வேண்டாம்" என்று அமெரிக்கா பதிலளித்திருக்கிறது!

ரொடீஷிய பிரதமர் திரு. அயன்ஸ்மித், அமெரிக்க ஸ்தாபனமொன்றுக்கு அனுப்பிய செய்தியில், இந்த உதவி விபரங்களைத் தெரிவித்துள்ளார். அமெரிக்காவுக்கு பூரண ஒத்துழைப்பு அளிப்பதாகவும் தென் வியட்னமுக்கு துருப்புகளை அனுப்பவும் தயார் என்றும் அனுப்பிய செய்தியில் அவர் குறிப்பிட்டிருந்தார்

வாஷிங்டனில், அமெரிக்க ராஜாங்கப் பகுதியினர் அயன்ஸ்மித்தின் செய்தியை அசட்டை செய்துள்ளனர்,

ராஜாங்க பகுதியைச் சேர்ந்த திரு. ருெபர்ட் மக்குளோஸ்கி பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் இது பற்றித் தெரிவிக்கையில், ஸ்மித்தின் செய்தி ஏற்றுக்கொள்ள முடியாது; ஏற்றுக்கொள்ளப்படவுமில்லை என்று கூறினர்.

"அமெரிக்காவைப் பொறுத்தமட்டில் ஸ்மித்தின் ஆட்சி சட்டவிரோதமானதென்றே கருதப்படுகிறது. ஸ்மித் ஆட்சியுடன் எமக்கு ராஜீயத் தொடர்பு இல்லை. அப்படியான உடன்படிக்கையொன்றில் ஈடுபடவும் நமக்குச் சந்தர்ப்பம் இடமளிக்காது" என்றும் அவர் சொன்னர்.

(பி.டி.ஸி.)

### ரஷ்ய மொழியில் மகாபாரதம்

மாஸ்கோ, பெப். 17

மகாபாரதத்தின் மூன்றுவது, நான்காவது தொகுதிகள் விரைவில் ரஷ்ய மொழில் வெளியாகவிருக்கின்றன. முதலிரு தொகுதிகள் ஏற்கனவே ரஷ்ய மொழியில் வெளியாகிவிட்டன.

## மிகப்பெரிய ரஷ்ய விமானம் விழுந்து நொறுங்கியது!

### 50 பேர் மாண்டனர்

மாஸ்கோ, பெப். 17

உலகிலுள்ள மிகப் பெரிய விமானங்களில் ஒன்றுன சோவியத் யூனியன் "ரீயூ 114" என்ற விமானம் நேற்று மாஸ்கோ விமான நிலயத்தில் விழுந்து நொறுங்கியதில் ஐம்பதுபேர் பலியானர்கள் என்று முதலில் கிடைக்கப் பெற்ற செய்திகள் கூறுகின்றன.

இதுபற்றி சோவியத் செய்தி ஸ்தாபனமான "டாஸ்" தெரிவிக்கையில், விமானமொன்று மாஸ்கோ விமானநிலயத்தில் விபத்துக்குள்ளானது என்று மட்டுமே கூறியிருந்ததே தவிர விபத்துக்கான காரணங்கள் பற்றியோ அல்லது சேத விபரங்கள்பற்றியோ அறிவிக்கவில்லை.

மாஸ்கோவிலிருந்து வெளியான ஏஜன்ஸி செய்திகளின் படி இந்த விமானத்தில் 50 முதல் 70 பேர்வரை உயிரிழந்திருக்கலாம் என்றும் பலர் எரிகாயங்கள் அடைந்திருக்கின்றனர் என்றும் தெரியவருகிறது.

மாஸ்கோவுக்கும்காங்கோ பிரேஸிலுக்குமிடையே விமானப் போக்குவரத்து ... ஆரம்பிக்கும் முகமாக இந்த விமானம் நேற்று முதற்தடவையாக அங்கு புறப்படவிருந்தது. மாஸ்கோ விமானநிலயத்திலிருந்து புறப்படக்கிளம்பியதுமே அது விழுந்து நொறுங்கியதாக அறிவிக்கப்பட்டது

மாஸ்கோவுக்கும்காங்கோ பிரேஸிலுக்குமிடைய ஒழுங்கான விமானப் போக்குவரத்துச் சேவையை ஆரம்பிக்கும் பொருட்டு அங்கு பேச்சு நடத்தும்முகமாக ரஷ்ய உயர்தர தூதுக்குழுவொன்றும் இந்த விமானத்தில் இருந்தது. இவர்களின் நிலைமைபற்றி விபரம் தெரியவில்லை. ஆனல் இத்தூதுகோஷ்டியின் தலைவர் மோசமான எரிகாயங்களுடன் மாஸ்கோ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### மலேசியா செல்வார்

கோலாலம்பூர், பெப். 17



திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களில் ஒருவரான திரு. மு. கருணநிதி அண்மையில் மலேசியா வரவிருக்கிறர்.

மலேசியாவிலுள்ளமலாயாதமிழ் இளைஞர் மன்றத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பை ஏற்றுக்கொண்டு இவர் இங்குவருகிறர். அநேகமாக திரு. கருணநிதி, இங்கு மே மாத ஆரம்பத்தில் வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திரு. கருணநிதி இங்கு வருவதற்குமலேசிய அரசாங்கம் விசா முதலியவற்றை அனுமதித்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

தி. மு. க. தலைவர் திரு. ஸி. என். அண்ணுதுரை அண்மையில் இங்கு விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. திரைப்பட நடிகர் எம். ஜி. இராமச்சந்திரனும் இங்கு விஜயம் செய்யவிருக்கிறர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அராலி வழக்கு

# 'எக்ஸ்ரே' நிபுணர்களின் முரண்பட்ட சாட்சியம்!

## பிரதம நிபுணரை அழைக்க மாஜிஸ்திரேட் உத்தரவு

மாவிட்டபுரம், வெள்ளி
தலையில் காயமடைந்த ஒருவரின் தலைக்காயத்தை 'எக்ஸ்ரே' பிடித்த வெவ்வேறு இடங்களிலுள்ள ஒரே தராதரமுள்ள இரு சத்திர சிகிச்சை நிபுணர்கள் அவர்கள் பிடித்த ஐந்து 'எக்ஸ்ரே' படங்களையும் மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. ஜி எவ். எச். அத்துறுபாளு முன்னிலையில் வைத்து அதைப்படங்களில் உள்ளபடி காயமடைந்தவரின் தலையில் 'உடைவு இருக்கிறதென்றும் உடைவு இல்லையென்றும்' ஒருவருக்கு ஒருவர் முரணுக சாட்சியமளித்தனர்.

இவ்வழக்கில் அராலியைச் சேர்ந்தவர்களான தருமலிங்கம் தியாகராசா, தருமலிங்கம் மகேந்திரன், தருமலிங்கம் நடராசா, பொன்னையா தருமலிங்கம் ஆகிய நால்வரும் அவ்வூரைச் சேர்ந்த கந்தையா கனகசபையைக் கத்தியால் வெட்டிப்படுகாயம் ஏற்படுத்தியதாகவும் கந்தையா சுப்பையா என்பவருக்குச் சிறுகாயம் விளைவித்ததாகவும் சங்கானை பொலிசாரால் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. ஆர்.ஜே.செல்வரத்தினம் ஆஜராளுர். காயமடைந்தவரின் தரப்பில் சங்கானைப் பொலிஸாரின் உதவியுடனும் வழக்கறிஞர் திரு. சி. வி. பாலசிங்கத்தின் அனுசரணையுடனும் திரு. ஆர். கண்ணுத்துரை வழக்கை நடத்தினர்.

சென்றமுறை இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுப்பிரமணியம் யாழ்ப்பாணம் சத்திரசிகிச்சைநிபுணர் டாக்டர் எஸ். ஜே. சீவரத்தினம் ஆகியோர் சாட்சியமளிக்கையில் "கந்தையா கனகசபையின் தலையில் உள்ளகாயம் படுகாயமல்ல" என சாட்சியமளித்தனர்.

இதனைத் தொடர்ந்து எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் திரு. செல்வரத்தினம் சாட்சியமளித்த இரு டாக்டர்களும் கந்தையா கனகசபையின் தலையிலுள்ள காயம் படுகாயமல்லஎன்று சாட்சியமளித்துள்ளார்கள் என்றும் ஆனல் பொலிசார் படுகாயம் எனக்கூறி 317-ம் பிரிவில் குற்றம்சாட்டியுள்ளார்கள் என்றும் இப்போது உள்ள டாக்டர்களின் சாட்சியத்தின்படி இக்குற்றச் சாட்டை நிரூபிக்கமுடியாதென்றும்ஆகையால் 315-ம் பிரிவிற்கு மாற்றும்படியும் வாதித்தார். இதனை ஆட்சேபித்த வழக்கறிஞர் திரு.கண்ணுத்துரை, நீதிபதியிடம் முதலில் காயமடைந்தவரின் காயத்தைப் பரிசோதித்த டாக்டர் கொடுத்த அறிக்கையின் படிதான் பொலிசார் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்துள்ளார்கள் எனவும் காயமடைந்தவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியை விட்டு விலகிய பின் கொழும்பில் உள்ளமற்றோர் சத்திரசிகிச்சை நிபுணரான டாக்டர் வைமனைக்கொண்டு தலையில் உள்ள காயத்தைப் பரிசோதித்ததாகவும் அவர் தலையில் உள்ள காயம் படுகாயம் என அறிக்கைஅனுப்பியுள்ளதாகவும் கூறி அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

இதனைத் தொடர்ந்து மாஜிஸ்திரேட் ஒரே தராதரமுள்ள இரு சத்திரசிகிச்சை நிபுணர்களையும் ஒரே தினத்தில் சாட்சியமளிக்கக் கூடிய விதத்தில் வழக்கை ஒத்திவைத்திருந்தார்.

முதலில் தலையில் உள்ள காயம் படுகாயம் என அறிக்கை அனுப்பியிருந்த கொழும்பு பெரியாஸ்பத்திரியைச் சேர்ந்த சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் வைமன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

இலங்கையில் மூளை சம்பந்தமான சத்திரசிகிச்சை செய்ய இரு சத்திரசிகிச்சை நிபுணர்கள் மாத்திரம் இருக்கிறார்கள். அவர்களில் நான் ஒருவன். நான் கந்தையா கனகசபையை 4-1-66 ல் பரிசோதித்தேன். அவரின் தலையில் ஐந்து அங்குல நீளத்திற்கு காயமேற்பட்ட அடையாளம் இருந்தது. நான் அதைப் பார்த்த போது அவரின் தலையில் உடைவு இருக்கிறதாக சந்தேகப்பட்டு டாக்டர் சுலைமனின் 'நேர்சிங்ஹோம்'மில் 'எக்ஸ்ரே' பிடித்துப் பார்த்தேன். அங்கு பிடித்தமூன்று எக்ஸ்ரே படங்களிலும் அவரின் தலையில் உடைவு இருக்கிறது என்பது தெளிவாகத் தெரிந்தது. இவரை நான் பரிசோதித்த போது அவர் சுயநினைவில் இருக்கவில்லை.

இக்கட்டத்தில் மற்ற சத்திரசிகிச்சை நிபுணரான டாக்டர் சீவரத்தினம் பிடித்த இரு 'எஸ்க்ரே' படங்களும் சாட்சிக்குக் காட்டப்பட்டன. அதனைப் பார்வையிட்ட டாக்டர் வைமன் அப்படங்களிலும், தலையில் உள்ள வெடிப்புத் தெளிவாகத் தெரிவதாகக் கூறினர்.

இதனையடுத்து யாழ்ப்பாணம் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் சீவரத்தினம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"காயமடைந்தவரின் பேச்சு இப்போது சாதாரண நிலையில் இருக்கிறது. நான் பிடித்த இரு படங்களிலும் டாக்டர் வைமன் பிடித்த மூன்று படங்களிலும் காயமடைந்தவரின் தலையில் வெடிப்பு இருப்பதாகத் தெரியவில்லை" என்றும்டாக்டர் வைமன் சத்திரசிகிச்சையில் நிபுணரேதவிர 'எக்ஸ்ரே' படம் பார்ப்பதில் நிபுணர் அல்லவென்றும் கூறினர்.

இக்கட்டத்தில் டாக்டர் வைமனை மாஜிஸ்திரேட் இதுபற்றி கேட்டபோது டாக்டர் வைமன் தான் தலையில் உள்ள காயத்தில் பிடிக்கப்படும் 'எக்ஸ்ரே' படங்களைப் பார்த்துக் கூறுவதில் இலங்கையிலுள்ள எந்த 'எக்ஸ்ரே' படம் பார்த்துச்சொல்லும் நிபுணர்களுக்கும் குறைந்தவனல்ல எனச் சொன்னர்.

மாஜிஸ்திரேட், எதிரிகள் தரப்பு வழக்கறிஞரை சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யும்படி கேட்டபோது, எதிரிகள் தரப்பு வழக்கறிஞர், இன்னும் 317-ம் பிரிவிலா அல்லது 315-ம் பிரிவிலா விசாரிப்பது என்று தீர்மானிக்கப் படவில்லையென்றும் ஆகையால்தான் சாட்சிகளைக் குறுக்குவிசாரணை செய்யப்போவதில்லையென்றும் கூறினர்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைச்சேர்ந்த எக்ஸ்ரே படம் பார்த்துச் சொல்லும் நிபுணரானடாக்டர் திருமதி எஸ். துரைராசசிங்கம் சாட்சியமளிக்கையில், டாக்டர் வைமனும், டாக்டர் சீவரத்தினமும கோர்ட்டில் சமர்ப்பித்த ஐந்து 'எக்ஸ்ரே'படங்களையும் தாம் பார்த்ததாகவும், டாக்டர் சீவரத்தினம் சமர்ப்பித்த இரு 'எக்ஸ்ரே' படங்களில் உள்ளபடி காயமடைந்தவரின் தலையில் உடைவு இருக்கமுடியாது என்றும், டாக்டர் வைமன் சமர்ப்பித்த மூன்று எக்ஸ்ரே படங்களில் இரண்டில் ஒரு கோடு இருக்கிறதென்றும் அக்கோடு தலையில் உள்ள உடைவைத்தான் குறிக்கிறதென்று திடமாகக்கூறமுடியாதென்றும் கூறினர்.

இந்நிலையில் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் திரு. ஆர் ஜே செல்வரத்தினம் மாஜிஸ்திரேட்டிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஐந்து'எக்ஸ்ரே' படங்களையும் பார்த்துச் சொல்வதற்கு கொழும்பில் உள்ள பிரதம 'எக்ஸ்ரே' பார்த்துச்சொல்லும் நிபுணரை சாட்சியாக அழைக்கும்படி கேட்டுக்கொண்டார்.

இதனை ஏற்ற நீதிபதி பிரதம 'எக்ஸ்ரே' பார்த்துச் சொல்லும் நிபுணருக்கு 'சமன்ஸ்' அனுப்ப உத்தர[illegible] 28-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## மாதர்சங்கக் கூட்டம்

உடுப்பிட்டி, வெள்ளி
"நமது நாட்டில் பெண்கள் மன்றங்கள் அமைப்பதும், பொதுநலத் தொண்டுகளில் ஈடுபடுவதும் மிகவும் குறைவாக இருக்கிறது. வடமராட்சிப் பகுதியில் பெண்கள் மத்தியில் சமீப காலமாக விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. பொதுநலத்தொண்டு செய்வதில் ஆண்களுக்குப் பெண்கள் எந்தவிதத்திலும் குறைந்தவர்களல்ல என்பதை இம்மாதர் சங்கத்தினர் உணர்த்த வேண்டும்."

அல்வாய் வடக்கு மாதர் முன்னேற்றச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமைவகித்த வடமராட்சி கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. கே. என். பி. நவரத்தினராசா பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

மேற்படி சங்கத்தின் நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவி: திருமதி க. நாகம்மா, காரியதரிசி: செல்வி செ. இராஜேஸ்வரி, தனதிகாரி: திருமதிமுருகேசன். நிர்வாக சபை உறுப்பினர்களாகத் திருமதிகள் க. நாகமுத்து, க. சாரதாமணி, பா. இரத்தினம், சி. மகேஸ்வரி, த கமலாவதி, ச. இராசேஸ்வரி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்,

## 'பாரபட்சம் காட்டமாட்டேரம்'

--சுகாதார மந்திரி

தெரணியகலை, வியாழன்
'தேசிய அரசாங்கம் எந்தத் தொகுதிக்கும் பாரபட்சமின்றிஉதவக்கடமைப்பட்டுள்ளது. இடதுசாரிக் கட்சிகளின் தொகுதிகளின் தேவைகளையும் தேசிய அரசாங்கம் பூர்த்திசெய்ய ஒழுங்குகள் மேற்கொள்ளும்.'

இவ்வாறு சுகாதார மந்திரி திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன தெகியோவிட்ட தொகுதியில் மருந்துச்சாலையொன்றை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் கூறினர்.

மந்திரிமேலும்பேசுகையில், தாம் சுகாதாரமந்திரி என்ற நிலையில் நாடு பூராவும் நல்ல சுகாதாரசேவையைப்பெறுவதற்கானஒழுங்குகளை மேற்கொள்ளக் கடமைப்பட்டவர் எனக் கூறினர்.

## தேசிய அரசாங்கத்துக்கு தேரோ பாராட்டு

பண்டாரவளை, வியாழன்
'முந்திய அரசாங்கம் ஆட்சிசெலுத்தியபோது பொருள்களின் விலை ஏறிக் கொண்டிருந்தது. ஆனல் வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் முயற்சியில் தேசிய அரசாங்கம் வெற்றியடைந்து வருகிறது எனலாம்.'

இவ்வாறுவண. பண்டித மிரிசி சமிதருன்சி தேரோ பண்டாரவளையில் புதிய மொத்த விற்பனவுஸ்தாபனமொன்றின் திறப்பு விழாவின்போது தெரிவித்தார். பட்டாரவளை நகரசபைத் தலைவர் திரு சி. கே. லியனகே புதிய ஸ்தாபனத்தைத் திறந்துவைத்தார்.

## தமிழரசுக்கட்சி காரியக்கமிட்டி

### 20-ந் திகதி கொழும்பில் கூடும்

பம்பலப்பிட்டி, வியாழன்
தமிழரசுக்கட்சியின் காரியக் கமிட்டி இம்மாதம் 20-ந் திகதி காலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கூடி இலங்கைக்கான புதிய அரசியல் அமைப்பு சட்டம் பற்றியும் இதில் தமிழரசுக் கட்சியின் நிலை என்ன என்பதுபற்றியும் ஆராயும்.

ஏப்ரல் மாதம் நடைபெறவிருக்கும் கட்சியின் வருடாந்த மகாநாடு பற்றியும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படும்.

## ஸ்தலஸ்தாபன மந்திரி நடவடிக்கை

நுவரேலியா, வியாழன்
நுவரேலியா மாநகரசபையில் நடைபெற்றுள்ள சில ஒழுங்கீனங்கள் பற்றி விசாரணைசெய்ய விசேஷ உத்தியோகஸ்தர் ஒருவரை ஏன் நியமிக்கக்கூடாது என்பதற்கான விளக்கத்தை இன்னும் 16 நாட்களில் தருமாறு ஸ்தலஸ்தாபனமந்திரி திரு எம். திருச்செல்வம் நுவரேலியா மேயரையும் அங்கத்தவர்களையும் கேட்டுள்ளார்.

## ஆண்டு விழாவும் நாவலர் நினைவுதினமும்

யாழ்ப்பாணம், சனி
அரியாலை அருணுதய வாசிகசாலையின் 6-வது ஆண்டு விழாவும், நாவலர் நினைவுதினமும்நாளையதினம் மாலை திரு. செ. சிவபாதவிருதய ஐயர் தலைமையில் நடைபெறவிருக்கிறது. திரு. சு. பரநிருபசிங்கம் 'நாவலர் காட்டிய வழி' என்னும் பொருள்பற்றியும், திரு. வீ. கதிரவேற்பிள்ளை 'நாவலரும் சமயமும்' என்னும் பொருள்பற்றியும் உரை நிகழ்த்துவர். 'நல்லை நகர் நாவலன்' என்னும் நாடகமும் இடம் பெறும்.

## நூல் நிலையத்தில் லெனின் சிலை

பெர்லின், பெப். 18
லெனின் காலமாகி 42 ஆண்டு பூர்த்தியானதை முன்னிட்டு பெர்லின் அரசாங்க நூல்நிலையத்தில் லெனின்சிலை ஒன்று வைக்கப்பட்டது. 1895ம் ஆண்டு ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் லெனின் இந்த நூல் நிலயத்தில் புத்தகங்கள் வாசிப்பதில் ஈடுபட்டிருந்தார். 'ரஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி' என்ற நூலில் முதல் அத்தியாயத்தின் சில பக்கங்களை இந்த நூல்நிலையத்தில் வைத்துத்தான் அவர் எழுதினர்.

## வர்த்தகச் சந்தை

லயிப்சிக் பெப். 27
மிக முக்கியமான ஒருசர்வதேச வர்த்தகச் சந்தை மார்ச் 6-15-ந் திகதிவரை லயிப்சிக் நகரில் (ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு) நடைபெறும். 90 நாடுகளைச் சேர்ந்த சுமார் 600,000 பார்வையாளர்கள் இச்சந்தைக்கு வருவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடல்கடந்த நாடுகளில் இச்சந்தையில் பெருமளவு பொருட்களை காட்சிக்கு வைக்கும் நாடு இந்தியா தான், இப்பொருட்காட்சியில் 240 இந்திய வர்த்தக ஸ்தாபனங்கள் பங்குபற்றும்.


## இராணுவஒத்துழைப்பு

பொன், பெப். 27
ஜனதிபதி ஜோன்ஸனின் ஆலோசகரான டாக்டர் ஹோர்நிங் இங்கு ஒருவாரகாலமாக நடத்திய பேச்சு வார்த்தைகளின் விளைவாக அமெரிக்காவுக்கும் மேற்கு ஜெர்மனிக்கும் இடையிலுள்ள இராணுவ ஒத்துழைப்பு புதிய கட்டத்தை அடைந்துள்ளது.

சில ராக்கட்டுகள்பற்றிய ஆராய்ச்சி, புதியரக விமானங்கள். அணு ஆராய்ச்சி இராணுவக் காரணங்களுக்காக வானவெளியை உபயோகித்தல் ஆகிய விஷயங்கள்பற்றி அந்தப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றதாகத் தெரிகிறது.

நியுயோர்க், பெப். 17
வியட்னும் நெருக்கடி சம்பந்தமாக ஜப்பான் புதிய யோசனையொன்றை வெளியிட்டுள்ளது. இந்நயோசனை ஐ. நாவில் பரிசீலனை செய்யப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.


யானை மார்க்



அஸ்பெஸ்டஸ்
கூரை சீற்றுக்கள்
( 5' 7' 8' 9' 10' அளவுகள் )
பிளேன் சீற்றுக்கள்
( 4'×4', 6'×4' அளவுகள் )
எம்மிடம் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்.
சண்முகம் ஸ்ரோர்ஸ்
( யாழ். நகரின் பிரபல இரும்பு வியாபாரிகள் )
222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
போன்: 697



வடமாகாணத்தில்
இரவு - பகல் சேவை செய்யும்
ஒரே ஒரு
ஸ்தாபனம்
உவாட் அன் டேவி
( ஆங்கில மருந்துச்சாலை )
148, நாவலர் வீதி, — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஈழநாடு வார மலர்.

[கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்கள் இவ்வுலகை விட்டு மறைந்ததினம் இம்மாதம் 22-ந் திகதி வருகிறது. அன்னாரை நினைவு கூருமுகமாக இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.]



## கலைப் புலவர் அவர்கள்

-ச. அம்பிகைபாகன்-


தமிழ் மக்களுக்குப் பல்வேறுதுறைகளிலும் தொண்டாற்றிய கலைப்புலவர் நவரத்தினம் அவர்களை தக்க முறையில் ஞாபகப்படுத்த வேண்டியது தமிழ் மக்கள் கடனாகும். எக்கருமத்தை ஆற்றும்போதும் சிறப்பாகச் செய்வது அவர்களது இயல்பாகும். ''செய்வன திருந்தச் செய்'' என்னும் முதுமொழிக்கு அவர்கள்ஓர் உதாரண புருஷராக விளங்கினார்கள். அவர்கள் தொட்டதெல்லாம் பொன்னாகும். கலைப்புலவரவர்களோடு நெருங்கிப்பழகி அன்னார் எடுத்துக்கொண்டபணிகள்பலவற்றில் ஒத்துழைக்கும்பாக்கியம்எனக்குக்கிடைத்தது. ஒரு விளம்பரத்தை அச்சடிப்பதெனாலும் அது பூரண அமைவுடையதாக இருக்கவேண்டும் என்று விரும்புவர். ஒருமுறை ஒரு விழாவுக்கு அழைப்பிதழ் ஒன்றை சிறந்த அச்சகத்தார் தயார் செய்து அதன் ''புறாவ்''வை அவருக்குக் காட்டியபொழுது அது அமைந்த முறை அவருக்கு மிக்க கோபத்தை உண்டாக்கிவிட்டது. உடனே அதைக் கிழித்து அவர்கள் முன்னே எறிந்துவிட்டார். ''இந்த அழைப்பிதழ் இம்மாதிரி வெளிவந்தால், தமிழன்னைக்கு நாம் செய்யும் பெரும் இழுக்காகும்'' என்று கூறினார். இந்தச் சந்தர்ப்பத்தில் காந்தியடிகள் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது. ஒரு முறை ஒரு அன்பர், காந்தியடிகள் நூல் ஒன்றை அச்சிடுவித்து அவர்கள் முன் சமர்ப்பித்தனர். அந்த நூலில் அதிக அச்சுப்பிழையைக் கண்ட காந்தியடிகள் ''இந்நூலை இப்படி வழங்கவிட்டால் நான் எனது தாய்ப்பாஷைக்கு செய்யும் அவதூறாகும்'' என்று கூறி அந்தப் புத்தகத்தின் பிரதிகள் அத்தனையையும் தீக்கிரையாக்கினர்.

### கலா நிலயம்

யாழ்ப்பாணத்தில்மொழி, கலை, சமயம் முதலியவற்றின் மறுமலர்ச்சிக்கு கலைப்புலவரவர்கள் கலா நிலயம் என்ற ஸ்தாபனம் மூலம் செய்த தொண்டுகள் யாழ்ப்பாணச் சரித்திரத்தில் இடம்பெறத் தக்கவை. கலா நிலயம் இயங்கிவந்தகாலத்தில் அது ஒரு பல்கலைக்கழகமாக விளங்கியது என்று கூறுதல் மிகையாகாது. நிலயத்துக்கென்று ஒரு நூலநிலயத்தை ஏற்படுத்தினார். இதற்கு மேலாக 'ஞாயிறு' என்னும் சஞ்சிகையையும்வெளியிட்டனர் கலா நிலயம் ஆரம்பித்த காலம் தொடக்கம் காலம்சென்ற செனட்டர் டாக்டர் சு. நடேசபிள்ளை அவர்களே தலைவராக விளங்கினர். டாக்டர் நடேசபிள்ளை அவர்களின் நுண்மாண் நுழைபுலத்தையும் பேச்சுவன்மையையும் தக்கபடி உணர்ந்து அவற்றைப் பிரயோசனப்படுத்தியபெருமை கலைப்புலவர் அவர்களையே சாரும். பிற்காலத்தில் ''சகுந்தலை வெண்பா'' என வெளிவந்த நூலின் சில பகுதிகள் 'ஞாயிறு' பத்திரிகையிலேயே வெளிவந்தன என்பது முதலில்இங்குகுறிப்பிடத்தக்கது

(VIII-ம் பக்கம் பார்க்க)

## தங்கக் கோவில்



அமிர்தசரஸ். ஆம்; சென்றவருடம் செப்டம்பரில் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையே நெருக்கடி நிலைமை ஏற்பட்டதிலிருந்து டாஷ்கண்ட் பிரகடனம் செய்யப்பட்டு, சுமுக நிலை ஏற்படும்வரை இந்த நகரின் பெயர் அடிக்கடி செய்திகளில் அடிபட்டது. அங்கிருந்த ஆஸ்பத்திரி ஒன்றுக்குப் பாகிஸ்தானியர் குண்டுவீசியதும் செய்தியில் வந்ததே.

டில்லிக்கு மேற்கே முந்நூறு மைல் தூரத்தில் பஞ்சாப ராஜ்யத்தில் உள்ள இந்த நகரம் முன்னர் அமுதக்கடல் என்றும் அழைக்கப்பட்டது. சீக்கியர்களின் புனிதஸ்தலமான இந்நகரம், பாகிஸ்தான் எல்லையிலிருந்து கிழக்கே பதினைறு மைல் தூரத்தில் உள்ளது.

இந்த நகரின் மத்தியில் உள்ளது ஒருதங்கக்கோயில். ஆம், சுமார் 480 சதுர அடி விஸ்தீரணமுடைய இந்தக் கோவில் ஏரியொன்றின் அருகே அமைந்துள்ளது. கோவிலுக்குச் செல்ல 100 அடி நீளமுடைய பாலம் ஒன்று உண்டு. பாதைகள் சலவைக் கற்களால் அமைக்கப்பட்டுள்ளன மூன்று அடுக்குகளோடு கூடிய இந்தக் கோவிலுக்கு மேல் மணிக்கூண்டு என்ற விமானம் கம்பீரமாக உயர்ந்து நிற்கிறது. கோவிலின் கதவுகள் வெள்ளியால் ஆனவை. விதானம் பொன் தகடு போர்த்தப்பட்டுபளிச்சிட்டுக் கொண்டிருக்கிறது. தரையெல்லாம் சலவைக் கற்கள், சுவர்களில் எனுமல் வேலைப்பாடுகள். இந்தக் கோவில் அமைப்பில் செலவிடப்பட்ட தங்கம் உலகில் வேறெந்தக் கோவில்அமைப்புக்கும் செலவிடப்படவில்லை. கோவில்தங்க, வெள்ளிப் பளபளப்புகள் போதாதென்று நாளும் நாலு திக்கும் விளக்கேற்றி தீபாலங்காரத்தாலும் சீக்கியமதத்தினர் அலங்கரிக்கின்றனர்.

ராமதாஸ் என்பவரின் புதல்வர் அர்ச்சுனர் கோவிலைக் கட்டுவித்தார்.

— வ. கா.

## சந்திர மண்டல வாசலைத் தொடுவானா- மனிதன்?

சென்றவார முற்பகுதியிலிருந்து லூனா 9 பற்றிய கதையே எங்கும். சந்திர மண்டலத்தில் மனிதன் இறங்குவதற்கு முதற்படியாக அமைந்துள்ள இந்த சாதனை பற்றி இங் சுருக்கமாக ஆராயப்படுகிறது.

ஆறுவருடங்களுக்கு முன்னர் சந்திரமண்டலஆராய்ச்சியில் ஒரு புதிய திருப்பமும் அதைத்தொடர்ந்து ஒருவித தென்பும்பிறந்தன. 1959-ம் ஆண்டில் ரஷ்ய விஞ்ஞானிகள் அனுப்பிய லூனா-2 செயற்கைக் கிரகம் சந்திரனில் கொடி நாட்டிவிட்டுப் பூமி திரும்பியது. அதைத் தொடர்ந்து கடந்த ஆறு வருடங்களாக ரஷ்ய விஞ்ஞானிகள் இடைவிடாது

### வளரும் விஞ்ஞானம்

செய்துவந்த முயற்சி சென்ற வாரத்தில் பெரும் பயனளித்து அவர்களுக்குப் பெருமையையும் தேடிக் கொடுத்துவிட்டது. இடைக்காலத்தில் மனிதர்களும் சந்திரனை வலம்வந்தும், அவற்றிலிருந்த வண்ணம் சந்திரனின் நிழற்படங்களை எடுத்தும் மற்றும் தகவல்களை சேகரித்து பூமிக்கு ஒலி, ஒளி அலைகள் மூலம் அனுப்பியும் வந்தனர். எனினும் லூனா-9 தானியங்கி செயற்கைக் கிரகம் ஈட்டியுள்ள சாதனை பூமி-சந்திரன் அலைவரிசைப் பாதையைத் தொடக்கி வைத்துள்ளது.

### முக்கியத்துவம்

சந்திரனுக்குத் தூரத்திலிருந்து (பூமியிலிருந்தோ அன்றி அதை அண்மித்து வலம் வந்தோ சேகரிக்கப்படும் தகவல்களைவிட, சந்திரனின் மேற்பரப்பில் இருந்துகொண்டு வெண்ணிலாவின் இயற்கைத்தன்மைகளை (Physical Conditions) பற்றி விபரமாகவும், தெளிவாகவும் அறிந்துகொள்ள முடியுமல்லவா? எனவேதான் லூனா-9 ஆற்றியுள்ளசாதனை சந்திரமண்டல ஆராய்ச்சிக்கு மட்டுமல்லாமல் வெளிமண்டல ஆராய்ச்சிக்கே ஒருமுதற்படிஎனவும், முக்கியத்துவம் வாய்ந்ததெனவும், ஆராய்ச்சிகளுக்குஅடிப்படையாக அமையும் எனவும் விஞ்ஞானிகள் அகமகிழ்கின்றனர். இது அர்த்தமுள்ளதுதான் என்பதை மறுக்க முடியாது. சந்திரனின் மேற்பரப்பு எவ்விதம் உள்ளது, அங்கு காற்று, நீர் என்பன உண்டா, உஷ்ண நிலைமை எப்படி உள்ளது என்பவற்றைக் கண்டறிய லூனா-9 பதிவுசெய்த படங்களும், தகவல்களும் பெரிதும் உதவும் என விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். கிரகங்களுக்கிடையே பறந்துசெல்லவும், கிரகங்களில் மனிதர்கள் வாழமுடியுமா என்பதைக் கண்டறியவும் வெளிமண்டல ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நிறுவக்கூட லூனா-9 பதிவு செய்த தகவல்கள் உதவலாம் என சோவியத் விஞ்ஞானிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

### எதை அத்தாட்சிப் படுத்தியுள்ளது?

"கானம்"

இவ்வருடம்ஜனவரிமாதம் 31-ந் திகதி பூமியிலிருந்து அனுப்பப்பட்ட தானியங்கி செயற்கைக்கிரகமான லூனா-9 சந்திரனின் மேற்பரப்பில் பெப்ரவரி 3-ந் திகதி பத்திரமாக இறங்கியது. திட்டமிட்டபடி அங்கிருந்து சமிக்ஞைகள் மூலம் பல தகவல்களை பூமியிலுள்ள ஆராய்ச்சி நிலையத்துக்கு அனுப்பியது. மனிதன் சந்திரமண்டல வாசலைத்தொடுவதற்கு இது ஒரு முதற்படி என்றே கூறவேண்டும். இது முதற்படியாக இருந்த போதிலும் முக்கியத்துவம் வாய்ந்ததென சோவியத் விஞ்ஞானிகள் மட்டுமல்ல சகலநாட்டு விஞ்ஞானிகளும் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும் [illegible]

(V-ம் பக்கம் பார்க்க)

## விருந்துக்குப் பின் வில்லங்கம்

வி. என். பி.

பசுபிக் சமுத்திரத்தீவுகளில் வசிக்கும் ஒருவகை சாதியினருக்கும் ஒரு வழக்கமிருக்கிறது. ஒருவருடைய வீட்டில் விருந்து நடக்கும். விருந்தாளிகள் எல்லோரும் வயிறு புடைக்க சாப்பிடுவார்கள். சாப்பாடு முடிந்ததும் ஒவ்வொருவரும்விருந்து கொடுத்தவரின் காதுகளுக்கு கேட்கக்கூடியதாக பெரியதொரு ஏப்பம் விடவேண்டும்! விருந்தை ரசித்து உண்டோம் என்பதற்கு அதுதான் அத்தாட்சி. அப்படி ஏப்பம்விடத் தவறியவர்கள் மீது, அவருக்கு அசாத்தியமான கோபம் பிறந்துவிடும். தான் உவந்தளித்த உண்டியை அவதூறு செய்வது போல, இவர்கள் ஏப்பம் விடத் தவறி விட்டார்கள் என்று அவர் கறுவியும் கொள்வார். இவர்களுக்கு நல்லபாடம் படிப்பிக்க வேண்டுமென்று நினைத்து அடுத்தமுறை இவர், அவர்களுடைய வீட்டுக்குப்போய் விருந்து உண்ட பின்பு ஏப்பம் வந்தாலும் அதைப் பலவந்தமாக அடக்கிவைத்துக் கொண்டு, மூச்சும் விடாமல் வீடுதிரும்பி விடுவார்!

விருந்து சாப்பிடுகிறவர்கள் எல்லோருக்குமே உடனடியாக ஏப்பம்வந்துவிடுமென்று நாம் எதிர்பார்ப்பதற்கில்லை. வில்லங்கத்துக்கு ஏப்பத்தை வரவழைத்துக் கொள்ளும் பொருட்டு, சிலர் இரகசியமாக ப்ளெயின் சோடா ஒருபோத்தலைவிருந்துக்குப் பிறகு குடித்துவிடுவார்களாம்!

இது எப்படியாவது இருந்துவிட்டுப் போகட்டும். நம் நாட்டில் இப்படி ஒரு வழக்கம் இருப்பதாக வைத்துக் கொள்வோம். ஒரு கல்யாண வீட்டுக்கு இரு நூறு பேர் பந்தியில்உட்காருகிறார்கள். விருந்து சாப்பிட்டபின் எல்லோரும் மண மக்கள் முன்பாக வந்து நின்று கூட்டுறவு அடிப்படையில் ஏக முயற்சியாகஏப்பம்விட்டால் எப்படியிருக்கும்?

நல்ல வேளையாக இப்படி ஒரு வழக்கம் நம் நாட்டில் கிடையாது. பழந்தமிழ்நாட்டில் கூட இருந்ததாக சங்க நூல் ஆதாரங்கள் இல்லை. ஆனல், வழக்கம் என்ற கோட்பாடு இல்லாமலே நம்மவர்களில் பலர், விருந்து சாப்பிட்ட பின்பு எழுந்து நின்று சுத்த சுதந்திரமாக வயிற்றைத் தடவிக் கொண்டே பிளிறிவிடுகிறார்கள்! வடை, பாயாசம், வாழைப்பழம், பருப்புக் குழம்பு, மோர் எல்லாம் ஒருங்கே சேர்ந்து அடிவயிற்றில் புகுந்து கொண்டால் அடக்க முடியாத வாய்வுக் குமுறல் மேலே பிறிக் கொண்டுவருவது இயற்கைதான்.

ஆயினும் இயற்கைதானே

(VIII-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(6)

# நெஞ்சிலிட்ட நெருப்பு

## குறுநாவல்

விடிந்து பொழுது மேகத்தில் தெரியவில்லை. ''மனவலின் மருமகன் அந்தோனி கொழும்பிலிருந்து வந்துசேர்ந்துவிட்டான்'' என்ற செய்தி ஊர்முழுதும் பரவிவிட்டது.

அந்தோனி, மனவலின் இரத்த உறவினன் அல்ல; எட்டத்துச் சொந்தக்காரனும் அல்ல. மனவலின் பெண்ணொன்றின் பின்னால் சிறகுகட்டி, இராப்பகலாகத் தூண்டில் போட்டுத்திரிந்த அந்தோனியைக்கண்ட ஊர்ச் சனங்கள், சும்மா 'தொடுத்து' வைத்துக் கட்டியகதை; அந்தோனி, மனவல் பெண்ணைத்தாலி கட்ட வைத்துவிட்டது.

''நெருப்பில்லாமல் புகையுமா?'' என்று அப்போது ஊரில் கதைத்துக்கொண்டார்கள். ஆனால், புகைக்காகவே நெருப்பை வைத்தது அந்தோனிதான் என்ற உண்மைஅவர்களுக்குத்தெரியாது.

ஆள் நல்ல கறுவல். மருவி வெட்டிய அரும்புமீசை. நடு உச்சிபிரித்த சுருட்டைமயிர். நெடு முரல் உயரம். கக்கத்துள் புண்ணுள்ளவன் மாதிரிச் சாடையான கைக்கிளப்பல். அண்ணந்து கேரிச்சிரிக்கும் பாவனை. அந்தோனி வீதியில் நடந்தால் புல்லுச் சாகிற கெந்தல் தெரியும்.

அவன் கொழும்பால் வந்ததும், நடுக்குறிச்சிக்குள்ளே பிரவேசித்துவிட்டானென்று ஊர்முழுதும் ஒரே குழப்பமாய்ப்போய்விட்டது. ஊர்ப் பெண்கள் ''உந்தச்செட்டுப் பிடிச்சவன், என்னவெள்ளிடி விழுத்த வந்திறங்கினானோ?'' என்று பேசிக்கொண்டார்கள்.

ஆனால், அந்தோனி எந்த 'வெள்ளிடி'யும் விழுத்தவரவில்லை என்று துரைராசா கண்டுகொண்டான்.

துரைராசா அன்றுமாலை நடுக்குறிச்சி ரத்தினம் அண்ணருக்குச்சொன்னான்:

''ரத்தினமண்ணை, மனவலின்ர மருமோன் அந்தோனி, கொழும்பாலை வந்துறங்கியிட்டானெண்டவுடன, ஊருக்குள்ள இந்த மோட்டு மனுஷியள் கிளைபுளைப்படுகுதுகள். ஆனால் எனக்கு நல்லாத் தெரியும், இந்தக் கால் சட்டைக்கை பூந்தவைக்கு துணிச்சல் எண்டது துப்பரவாக் கிடையாது. ஏனெண்டா, அவே ஓர் அந்தரச்சீவியகாறர். ஆரையேன் தூண்டிப்போட்டுப் பின்னுக்கு நிண்டு கூத்துப் பாக்கிற நரியளல்லாம, அவேயாக்கள் நேர்மையானமனிசரில்லை. ஆனால் துணிஞ்சவங்களும் நல்லநெஞ்சுள்ளவங்களும் தொழிலாளியள்தான். தொழிலாளியளாலதான் இந்த உலகம் முழுத்திலையும் சரித்திரமே உண்டாகினது. களிசானுக்குள்ள பதுங்கி, ஸ்ரையில நாலு வார்த்தையைச் சுதியாப்பேசுற ஆக்களால யல்ல...''

துரைராசா சொன்ன வார்த்தைகளை விட அவன் சொன்ன விஷயங்களே அங்கு நின்றவர்கள் மனத்தைக் கௌவிப்பிடித்தன.

கக்கத்துக்குள்மால்தடியை வைத்து முடித்துக்கொண்டிருந்த குணம் கேட்டான்:

''உலகம் முழுதையும்சரித்திரமாக்கினது தொழிலாளியெண்டு சொல்லிறியே, அப்படியெண்டா இந்த ஊருக்க இவ்வளவு கடல் தொழிலாளியள் இருந்தும் எங்களால ஒண்டையும் செய்யமுடியாமலிருக்கே?''

செய்யமுடியாமல் இல்லை. எதையும் மனிதனால் செய்யலாம். முதல்ல தொழிலாளியளுக்கஒற்றுமைவேணும். தொழிலாளியளுக்க ஒற்றுமையில்லாட்டி, அது முதலாளியளுக்குத்தான்வாசி. இதை நல்ல வடிவாய்த் தெரிஞ்சு கொண்டால், தொழிலாளியள் தாங்கள் நினைச்சதை உடனே செய்துமுடிக்கஏலும். அது எங்கட ஊருக்கு இல்லததால்தான் எல்லாம் உருப்படாமல் போகுது.

''ஒற்றுமைக்கு என்ன செய்ய வேணும்?'' என்று ஒரு கேள்வியைப் போட்டான் குணம்.

துரைராசா சொன்னான்:

''தொழிலாளியள் முதல்ல தங்களின்ர உண்மையான எதிரிகள் ஆர், சிநேகிதர் ஆர், விரோதியள் ஆர், தங்கள் அன்பர்கள்ஆர்என்பதை வடிகட்டியதண்ணிபோலசரியான தெளிவாய்த் தெரிஞ்சு கொள்ளவேணும். சில தொழிலாளியளுக்குத் தங்களின்ர உண்மையான எதிரி ஆர் எண்டு தெரியாமல், எதிரியின் கைக்குள் சிக்குப்படுகிறநேரத்திலதான் தொழிலாளியளுக்க ஒற்றுமை குலையுது.''

''தொழிலாளியளின்ர எதிரியள் ஆர்?''

''பொதுச்சொத்துக்களில் தனியுடமை; அதாவது, தனியுரிமை பேச எவன் வெளிக்கிடுகிறானோ, அவன் தொழிலாளியின்ர எதிரி. தனியுடமையாகவைத்து ஆளுவது சுதந்திரம் எண்டு சொல்றானே அவனும்எதிரி. 'அந்த மாதிரி தனியுடமையைபாதுகாக்க 'ஜனநாயகம்' பேசுகிறானே அவனும் தொழிலாளவர்க்கத்தின்ரதுரோகிஇதை எல்லாம் தொழிலாளியள் எண்டைக்கு உணருகினமோ அண்டைக்குத்தான் ஒற்றுமை உண்டாகும். அதுக்குப்பிறகுதான் விமோசனம் கிடைக்கும். ஏன், அண்டைக்குப்பாக்கலயே, சூசை அண்ணர் கூட்டத்தைக் குழப்பியடிச்சார். அது எங்கட எதிரிக்குநேராக உதவுறமாதிரிப் போச்சு. தொழிலாளியளுக்கை ஒற்றுமையில்லாவிட்டால், முதலாளியள் தாங்கள் நினைக்கிறதைத் தொழிலாளியளைக்கொண்டே சாதிச்சுக் கொள்ளுங்கள். இது எவ்வளவுபரிதாபம்தெரியுமா?''

அவன் வார்த்தைகளில் வரும் ஒவ்வொரு விஷயத்தையும் விழுங்கித்தின்றமாதிரி அங்கே அவர்கள் மத்தியில் மௌனம் நிலவியது.

''முதலாளியள் இல்லாமல் தொழிலாளியள் எப்பிடி வாழுறது?'' என்று ஒரு கேள்வியைப் போட்டார், கறுவல் சூசைமுத்து.

''இதே கேள்வியை நான் திருப்பிக் கேட்கிறன்; தொழிலாளியள் இல்லாமல் முதலாளியள் எப்பிடி வாழுறது?''

''அச்சா'' என்று சொல்லி எல்லோரும் கலகலத்துக் கொண்டார்கள்.

ஆனால், துரைராசா அப்போது குழப்பமடைந்து காணப்பட்டான். கலகலப்பு அடங்கியதும் அவன் சொன்னான்:

''கேள்விக்கு மறுமொழி சொன்னேனே தவிர, இந்த இரண்டு கேள்வியளுமே புழைதான். ஏனெண்டால் [illegible] யாயும் தொழிலாளியாயும் பிறக்[illegible]

தான்பிறக்கிறாங்கள். பலமுள்ளவன் பலவீனனை அடிச்சுப் பறிச்சுக் கொள்ளைகொண்டதும், பலவீனன்இருந்ததையெல்லாம்இதனால் இழந்ததும்தான் உலகத்தில நடந்த உண்மைவரலாறு. இதன்படி பார்த்தால், தொழிலாளர்கள் தங்கள் இழந்தசொத்துக்காகப் போராட்டம் நடத்துகிறார்களே தவிர, யாரையும் கொள்ளையடிக்கவல்ல. ஒருவன் மற்றவன்ரதயவிலவாழவிரும்புவதில்லை அதுபோலமற்றவன் அடுத்தவனைச்சுரண்டிவாழக்கூடாது சுரண்டலும் ஒழிந்து சுரண்டும் கொடுமையும் ஒழிந்தால் முதலாளியும் இல்லை; தொழிலாளியுமில்லை. அதன்பின் எல்லாரும் சமத்துவ மனிதர்களாய் வாழலாம். இப்ப புரிஞ்சுதா? இதை அடையிறத்துக்கு ஒரே வழி ஒற்றுமைதான்.''

''ஓமடாம்பி. நீ சொல்றது சரிதான். ஆனால், ஒற்றுமையாய் இருக்கவேணும், ஒற்றுமையாய் இருக்கவேணும் எண்டு பாடம் பண்ணுறதுபோல, ஒவ்வொருத்தரும் சொல்லுகினம். சொல்ற ஆக்கள்தான் ஒற்றுமையையும் குழப்பி அடிச்சுக்கொண்டு போகினம்'' என்றார், லூர்த்தையா அண்ணர்.

''பத்துப்பேருக்குள்ள ஒருத்தர் ரண்டுபேர் அப்பிடிக்குழப்பியடிக்கினம் எண்டதுக்காக, ஒற்றுமையைக் கைவிடுறது ஆகக்கூடாத சங்கதி'' என்றான், லூயிஸ்

துரைராசா, லூயிஸ்சொன்னதை, கைதட்டி 'அச்சா' என்று ஆமோதித்தான்.

அது லூயிஸ் நெஞ்சில் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கியது. சிரித்துவிட்டு சற்று வேலிஓரமாக வந்து நின்று லூயிஸ் சொன்னான்:

''சிலபேர் முதலாளியளும் தொழிலாளியளும் ஒற்றுமையாயிருக்கவேணும் எண்டு சொல்லுகினம். நாங்கள் சொல்றது அந்த ஒற்றுமையல்ல. புலியும் ஆட்டுக்குட்டியும் கலியாணம் செய்யும் பாசாங்கான ஒற்றுமை தொழிலாள வர்க்கத்துக்குச் சவக்குழி புதைக்கிற சங்கதியாகும். நாங்கள் சொல்ற ஒற்றுமை என்னெண்டால், சுரண்டப்படுகிற தொழிலாளியள்மட்டும் ஒற்றுமையாய் இருக்கவேணும். அப்பிடிஎண்டாத்தான் மனவல்போல ஆக்களைப் பணியவைக்கமுடியும். அல்லது ஏலாது. ஓர் இயக்கத்தை அழிக்கிறதுக்கு முதலாளியின்ர ஆசைவார்த்தையில் மயங்கினஒருதொழிலாளி இருந்தால் போதும்.''

லூயிஸ் தன்பேச்சைநிறுத்தவில்லை. அப்போது ஒரு செருமற்சத்தம் கேட்டது. எல்லோரும் திரும்பிப்பார்த்தார்கள்.

(தொடரும்)

**எஸ். அகஸ்தியர்**

மேற்குமருத்துவம்

## நீரிழிவு நோயிலிருந்து தப்ப உணவும் உடற்பயிற்சியும்

**196** நோயாளிகள் சிகிச்சை பெற வசதியுள்ள நவீன மருத்துவமனை மேற்கு ஜெர்மனி நகர் ஒன்றில் சமீபத்தில் திறந்துவைக்கப்பட்டது. இரண்டுஆண்டுகாலம் கட்டப்பட்ட இந்த மருத்துவ மனையை நிறுவ செலவழிக்கப்பட்ட மொத்தத் தொகை 2.25 கோடிரூபாய். இந்த மருத்துவ மனையில் உள்ள ஒவ்வொரு படுக்கை அறையையும் நிறுவ 1 இலட்சத்து 18 ஆயிரத்து 750 ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. எனவே மேற்கு ஜெர்மனியில் மிகவும் ''விலையுயர்ந்த'' மருத்துவமனை இதுதான். இவ்வளவு அதிகமான தொகையில் இந்த மருத்துவமனை நிறுவப்பட்டாலும், இங்கு சிகிச்சை பெறுகிறவர்களுக்கு பொது சுகாதார இன்சூரன்ஸ் திட்டத்தின்கீழ்வசதிகள் செய்து தரப்படுகின்றன. அதாவது தனிப்பட்ட மருத்துவமனையில் கிடைக்கின்ற வசதிகள் அனைத்தும் இந்த மருத்துவமனையில் கிடைக்கும்.

இப்புதுமையானமருத்துவமனையில் ஒவ்வொரு வார்ட்டிலும் டாக்டர்கள், நர்ஸ்கள் ஆகியோருக்கு மட்டுமன்றி, நோயாளிகளுக்கும் சிலவிதிமுறைகள்உண்டு. ஒவ்வொருநோயாளியின்வியாதியின் தன்மை என்ன என்பதுடன், அவர்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதையும் விளக்கமாக எடுத்துரைக்கிறார்கள்.

மேற்கு ஜெர்மனியில் அமைந்துள்ள இந்தப் புதுமையான மருத்துவமனை, வெளிநாட்டு மருத்துவ நிபுணர்களின் கவனத்தைக் கவர்ந்துள்ளது. இந்த மருத்துவ மனையை, சர்வதேச நீரிழிவு ஆராய்ச்சி நிலையமாக அபிவிருத்திசெய்யவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

உலகில்ஏறத்தாழ 5கோடி நீரிழிவுநோயாளிகள் இருக்கிறார்கள். 1921-ல்'இன்சுலின்' மருந்து கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்புவரை இந்நோய் மிகப்பயங்கரமானதாகக் கருதப்பட்டது. நீரிழிவுவியாதிக்கு, 'சாவே' மருந்து என்பார்கள் அந்தக்காலத்தில். ஆனால் இப்போது மருத்துவ விஞ்ஞானம் எவ்வளவோ முன்னேறிவிட்டது; முறையான ஆகாரவசதிகள் இருந்தால், நீரிழிவு நோயிலிருந்து 'விடுதலை' பெறமுடியும்.

'இன்சுலின்' மருந்து கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னர் 'நீரிழிவு' வியாதிக்காரர்களை பட்டினிகிடக்கவேண்டும் என டாக்டர்கள்ஆலோசனை கூறிவந்தனர். பட்டினியால் உடல் நலம் குன்றி நோயாளிகள் சில ஆண்டுகளில் படுத்தபடுக்கையாகவிழுந்து விடுவார்கள். ஆனால் இப்புதிய மருத்துவமனையில் அப்படியல்ல. நல்ல சுவையான உணவு நோயாளிகளுக்குப் பரிமாறப்படுகிறது. வேலை மூலமாகவும், உடல்உழைப்பு மூலமாகவும் நோயாளிகளுக்கு மனதிற்கு உற்சாகமளித்து சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஒவ்வொருநாளும் நோயாளிகள் காலாறநடக்க வேண்டும் என்றும், நீச்சல் குளத்தில் நீந்திவிளையாட வேண்டும் என்றும் கேட்கப்படுகிறார்கள்.

டாக்டர் பன்சே இந்தப் புதுமையான மருத்துவ மனையை நிறுவியுள்ளார். மருத்துவமனை கட்ட உதவிய மாநில அரசே, நோயாளிகளின் சிகிச்சைக்கு ஏற்படும் செலவினையும் ஏற்றுக் கொள்கிறது.

## தெரிந்து கொள்ளவும்

இலங்கையில் வானொலி முதன் முதல் ஒலிபரப்பியது 1924.

இலங்கையில் டீசல் புகைவண்டி கொழும்பிலிருந்து காலிக்கு ஓடியது 1924.

கொழும்பு-கண்டிவீதி திறக்கப்பட்டது 1815-1831.

இலங்கையில்முதல் தந்திச் சேவை 1858.

இலங்கை யூனிவர் சிட்டிக் கல்லூரி தொடக்கப்பட்டது 1921.

அதுசர்வகலாசாலையாக்கப்பட்டது 1942.

பர்மா இந்தியாவின்பகுதியாகவிருந்தது 1937 வரை.

இலங்கைச் சேமிப்பு வங்கி ஆரம்பம் 1882. இலங்கை அஞ்சல் சேமிப்பு வங்கி தொடக்கம் 1885.

தற்போதைய இலங்கை வங்கி திறக்கப்பட்டது ஆகஸ்ட் 1939.

ஃ ஃ ஃ

எருசலேமில் சாலமன் அரசன் கட்டிய கோவில் ஏழு ஆண்டுகளில் கட்டிமுடிக்கப்பட்டது. சுமை தூக்குவதற்கு 70 ஆயிரம் பேரும், வேலையைமேற்பார்ப்பதற்கு 3600 கங்காணிகளும் ஈடுபட்டிருந்தார்கள். தினமும் உணவின் பொருட்டு எண்ணில்லாத மாடுகளும் ஆட்டுக்கடாக்களும் கொல்லப்பட்டன.

சாதகக் கதைகள்; இவை புத்தர் தமது முற்பிறப் பொன்றில் கூறியதாக நம்பப்படும் கதைகள். இவை செய்யுள் நடையிலுள்ளன. மகிந்தன் இலங்கைக்கு வந்தபோது அவர் இக்கதைகளையும் கொண்டுவந்தார். சாதகக் கதைகளில் 550 கதைகளுள்ளன. இவை பாளி மொழியிலிருந்து சிங்கள மொழியில் பெயர்க்கப்பட்டிருந்தன. பின், புத்தகோசர் இதனை கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் சிங்களத்திலிருந்து பாளியில் மொழி பெயர்த்தார். தொடக்கத்திலிருந்த பாளி நூல் கிடைக்கவில்லை.

ஒரு யானை ஒரு நாளில் 300 றாத்தல் உணவையும், நீர் யானை 200 றாத்தல் உணவையும், காண்டாமிருகம் மூன்று புசல் உணவையும், புலி ஒரு மணி நேரத்தில் உண்ணக்கூடிய தனி இறைச்சியையும் உண்ணும்.

திரட்டு: என். எஸ். கே.

## அரும்பும் மலரும்

**வே. குமாரசாமி —**

அரும்பு:
செங்கதிர் ஒளி சிந்திடும் போதிலே
சேர்ந்திடும்நற் பொழிலிடைத் தோன்றினாய்
பொங்கிட எழிற் புன்னகை யோடுநீ
பூப்படைந்து புதுமணப் பெண்ணென
இங்கிருந் திட எங்கிருந் தோவொரு
ஈடிலாத்த லைவன்னுனைக் கண்டனன்
மங்களத் துடன் நன்மணம் கொண்டிட
மங்கைநீ செய் தமாயத் தைச்சொல்லடி.

மலர்:
இச்சைநல் கிடும் இச்சிறு வாழ்வினை
எண்ணியேங்கி இத்தல மீதிலே
பச்சிளம் புதுப் பைங்கிளி நீயடி
பாழ்படும் இப் பாரிடை நாளையே
எச்சிலே றவே ''இச்''சென்த் தேனினை
ஏப்பமிட்டு இதழ்சுவைப் பாரடி
மிச்சமே னடி சொல்லிடு வானினி
மீதி நாளை அறிந்திடு வாயடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர் சுந்தரம்

## சிறுகதை

கடந்துபோன வாழ்க்கையின் இன்பமும், துன்பமும் நிறைந்த நிகழ்ச்சிகளை, திருப்பி அசை போடுவதில் யாருக்குத்தான் விருப்பமில்லை. நினைவுகளால் இதயத்தில் ஏற்படும் இன்ப ஊற்றுக்களில் ஆழ்ந்து பூரிப்பெய்துவதில் சுந்தரம் மட்டும் விதிவிலக்கா? இல்லையே?

காலையின் புதிய ஊற்று உலகினில் இன்னும் முற்றாக வடிந்து முடியவில்லை. மலர்களுடன் இரண்டறக்கலந்துவிட்ட பனித்துளிகள் காலை வெயிலின் பொன் தூவலில் இன்னும் காயவில்லை. ஆனால் சுந்தரத்தின் 'நர்ஸிங் ஹோமிற்கு' வழக்கமாக வரும் நோயாளிகள் வந்து போய் விட்டார்கள். இனி அநேகமாகப் பத்துமணிக்குப் பின்புதான் நோயாளிகள் வருவார்கள். சுந்தரம் மேசையைத் திறந்து அன்றைய வருமானமாகிய ரூபா நோட்டுகளை எடுத்து எண்ணினான்.

'இன்றைய பொழுது உனக்கு இன்பமாகக் கழிய, எங்களைத் தியாகம் செய்யத் தயார்' என்பதுபோல் அவை படபடத்தன. பழக்கிவிடப்பட்டுள்ள கைகள் தாமாகவே பத்துரூபா நோட்டொன்றை எடுத்துப் பாக்கெட்டுக்குள் செருகின. அது அவனைப் பொறுத்தவரையில் அவனுடைய ஒவ்வொரு நாள் வாழ்க்கையின் முக்கால் பங்கைச் செழுமையாக்கும் ஒருத்திக்காக. இந்தப் பத்து வருட டாக்டர் வாழ்க்கையில் அவன் எத்தனையோ விதம்விதமான மனிதர்களைச் சந்தித்திருக்கிறான். அவர்கள் குணாதிசயங்களை அனுபவித்திருக்கிறான். ஆனால் அவளைப் போல், அவனுக்குப் பிடித்தவர்கள் யாருமேயில்லை. அவள் தான் அவனுடைய வேலைக்காரி— இல்லையில்லை, அவன் காதலி லட்சுமி.

சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்றவைத்துப் புகைச் சுருளாக ஊதி விட்டான். அந்த வட்டங்களுக்குள் அவளுடைய கெஞ்சும் குழந்தை முகம் தோன்றி ஒருமுறை நாணிக்கோணியது. தனக்குள் ஏற்பட்ட இந்தக் கற்பனைப் பிரதிபலிப்புக்குப் பதிலாக, ஒருமுறை தனக்குள் சொல்லாமல் கொள்ளாமல், மென்மையான சிரிப்புச் சிரித்தான். 'மனிதனுடைய வாழ்க்கையின் வெற்றிடங்களை எவ்வாறு கற்பனைகள் நிரப்பி வாழ்க்கையை முழுமையாக்குகின்றன' என்பதை நினைத்து டாக்டர் சுந்தரம் வியந்தான்.

என்றோ ஒருநாள் வேலைக்காரியாக இருபதுரூபா சம்பள ஒப்பந்தத்துடன் வந்தவள், இன்று அவன் இதயத்திற்கு மட்டுமல்லாது, அவன் காணும் கற்பனை உலகுக்கெல்லாம் அரசியாகிவிட்டிருந்தாள். இதை நினைத்து அவன் தனக்குள் தேவையில்லாமல் ஆச்சரியப் பட்டதுண்டு. ஆனால் காரணத்தை அவன் இதுவரை அறியவுமில்லை—அறிய முற்பட்டதுமில்லை. முப்பதுவயதாகியும் கூட அவளுக்காகவே தான் கல்யாணம் செய்யாமல் இருப்பதுபோல் அவனுக்குத் தோன்றினாலும், அதற்காக அவன் கவலைப்பட்டதுகிடையாது.

'மனிதன் என்றால், அவனுக்கு ஒரு விஷயம் நெடுகப் புளிப்பதோ - இனிப்பதோ இல்லை! ஆனால் டாக்டர் சுந்தரம் இந்த இயற்கைவிதிக்கு மாறான கருத்தோட்டத்தில் இயங்கி வந்தான். இந்த நவீன காலகட்டத்தில் ஒருத்தி பத்தாண்டுகளாகத் தொடர்ந்து, சுந்தரத்துக்குக் காதலியாக- ஆசை நாயகியாக இருப்பதைக் கண்டு மற்றவர்கள் பொறாமைப் படாமல் இருக்கவில்லை.

சுந்தரம், நினைவுகளில் ஆழ்ந்து அரைமணித்தியாலமாகியும்கூட, அவனால் அவற்றிலிருந்து விடுபட முடியவில்லை. அது மனித இயல்புதானே. சுருண்டு கிடந்த நினைவுச் சுருள்கள், படம் போல் அவன் நெஞ்சில் விரிவதைத் தடுக்க முடியாமல், சக்தியிழந்தவனாய் மௌனமாக அமர்ந்திருந்தான். ஆனால் அது அவனுக்கு அனுபவம்.

பத்தாண்டுகளுக்கு முன்னோ பின்னோ, வேலைக்காரியாக அவனுடைய வீட்டுக்கு வந்த அவளை, அவன் குறைந்த சாதியில் பிறந்தவள் என்று வீட்டு முன்படியிலேயே ஏறவிடவில்லையென்றால், அவனுடைய அன்றைய பிற்போக்கு மனப்பான்மை எவ்வளவு தூரம் விஸ்தீரணமடைந்திருக்கிறது என்று கண்டு கொள்ளலாம். முதலில் வீட்டுக்குவெளியே கூட்டுவதிலும், நர்ஸிங் ஹோமிற்கு முன்னால் பூந்தோட்டம் அமைப்பதிலும் அவளை ஈடுபடுத்திக் கொண்டாலும், பின்பு அது தன்னிடம் ஈடுபடச்செய்யும் என்பதை அவன் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

சாதியென்ற சொல்லுக்கு சவுக்கடி கொடுத்து, வேதனைப்படுத்தியசுந்தரம், அந்த வெற்றி— த்தை 'மனித அன்பு' என்ற கம்பீரமான—உண்மையான - புனிதமான சொல்லினால் நிறைவு படுத்திக் கொண்டான். அதற்குக் காரணம் இல்லாமலும் இல்லை. ஒருநாள் ஏற்பட்ட ஒரு சிறு நிகழ்ச்சி. சுருங்கச் சொல்லப் போனால் அவளிடம் அவனுக்கு ஏற்பட்ட அது. இதைப்புரியாவிட்டால் அதுக்கு சுந்தரமோ - லட்சுமியோ பொறுப்பல்ல. அன்றைய அந்தச் சிறு புரட்சி இன்று அவனுடைய அந்தரங்க விஷயங்களைப் பகிர்ந்தளிக்கும் சமதர்மனாக்கிவிட்டது. ஆனால் அதைப்பற்றிய கருத்து அவனுக்குத் தெரியாது. தன்னை நல்லவனெனக் கருதச் செய்யவும், லட்சுமியைக் கற்புக்கரசியாக மதிக்கவும், அவளுக்கு அவனே கல்யாணமும் செய்து வைத்துவிட்டான். இன்று அவள் மூன்று பிள்ளைகளுக்குத் தாயாகிவிட்டாள். என்றாலும் அவள் அழகு மங்கவில்லையென்பது சுந்தரத்துக்கு மாத்திரமே தெரிந்த பரமரகசியம்.

❀ ❀ ❀

சுந்தரம்நேரத்தைப்பார்த்தான். எட்டரைமணி. வழக்கமாக எட்டு மணிக்கு வந்துவிடும் லட்சுமி, இன்று எட்டரைமணியாகியும் வராதது அவனுக்கு என்னவோபோலிருந்தது. வி ருப்பமின்றி எழுந்து மாடியிலிருக்கும் தனது படுக்கையறையை நோக்கிநடந்தான்.

யன்னலைத் திறந்து விட்டு நீண்டு விரிந்து கிடக்கும் சாலையை நோக்கினான். இது அவனது அன்றாட நிகழ்ச்சிகளில் ஒன்று. அப்ப்பா எவ்வளவு சனங்கள். இடையிடையே இரட்டைத் தட்டு பஸ் ஒன்று சனங்களுடே ஆடி அசைந்து கஷ்டப் பட்டுச் சென்று கொண்டிருந்தது. இந்தப் பஸ்ஸை ஓட்டும்டிரைவர் எவ்வளவு கெட்டிக்காரனாக இருக்கவேண்டுமென்று நினைத்துக்கொண்டான். இந்தக் காட்சி சின்னவயதிலே, தான் கோவிலில் கண்ட தேர்த்திருவிழாக் காட்சியை நினைவூட்டியது. மௌனமாக மனதுக்குள் சிரித்துக் கொண்டான். ஆனால் அந்தச் சிரிப்பு ஒரு அர்த்தமற்ற சிரிப்புத்தான்.

தினமும் இந்தக்காட்சியை அவன் கண்டாலும், அவன் மனதுக்குள் வெறுப்பு என்ற பொருள் தோன்றியதுகிடையாது. ஆபீஸுக்கு அவசரப் பட்டுக்கொண்டு போவோரும், சந்தைக்கோ, கடைக்கோ கட்டாயமாகப் போகும் 'மணியோர்டர் பொருளாதாரக்காரர்களும்' பெருகிவழிந்துகொண்டிருந்தார்கள். அடிக்கடி போகும் கார்களுக்கோ அல்லது வேறுவாகனங்களுக்கோ அவசரப்பட்டு இடிபட்டு விலகும் அவர்கள், செயல் தேவையில்லாத ஒன்றாகத் தோன்றிய போதும், அவன் அதிலே ஒரு இன்பம் கண்டான். இந்த ஆயிரம் ஆயிரம் மக்களுடன் தன் லட்சுமியும் வரமாட்டாளா என்றுஅவன் விடுத்தசூடான ஏக்கப் பெருமூச்சு, காற்றுடன் கலந்து குளிர்ந்துவிட்டதென்றாலும், அவன் வெந்து போன சூடான நினைவுகளுடன் கட்டிலில் வந்து இருந்தான்

எண்ணங்கள் எல்லையற்று எங்கெங்கோ பறந்தாலும், அவன் கண்கள் மட்டும் சுவரிலே மாட்டியிருந்த படங்களில் சுழன்றன. அடுக்கடுக்காக ஆங்கில நடிகைகளின் அரை நிர்வாணப் படங்கள் தொங்கினாலும், அவற்றிலிருந்து வேறுபட்டுத் தனித்திருந்த படம் ஒன்று அவனைத் தன்பால் இழுத்தது. திடீரென அவனுக்குக் கடந்து போன நிகழ்ச்சி ஒன்று உதயமாயிற்று. அன்றொருநாள் அவன் வைத்தியக்கல்லூரியிலிருந்து டாக்டர் பட்டத்துடன் பிரியாவிடை பெற்ற போது, அவன் நண்பன் ஆறுமுகம் அவனுக்குக் கொடுத்த படம் அது. அன்று அவன் இந்தப்படத்தைக் கொடுக்கும் போது சொன்ன ஒருசில வார்த்தைகள் இன்றும் அவன் செவிகளில் எங்கிருந்தோ ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

''நண்பா, நாங்கள் உடலால் பிரியப்போகிறோம். ஆனால் உள்ளத்தால் பிரியமாட்டோம். என்னை நீ ஒவ்வொருநாளும் நினைப்பதற்கு இந்தா ஒரு பரிசு. அடிமையையும், சாதியையும் எதிர்த்துப்போராடிய உத்தமர் மகாத்மா காந்தியின் படம். என்றும் அவர் எங்களுக்கு வெளிச்சவீடு'' - இதுதான் அன்று ஆறுமுகம் சொன்ன வார்த்தைகள். ஒருசில சொற்கள் திரும்பத் திரும்ப அவன் செவிக்குள் ஒலித்துக் கொண்டேயிருந்தன.

''என்றும்அவர்எங்களுக்கு வெளிச்சவீடு!''

''என்றும்அவர்எங்களுக்கு வெளிச்சவீடு!''

காந்தி, சாதியையும், அடிமையையும் எதிர்த்துப் போராடிய படியால் 'அவர் ஒரு வெளிச்சவீடு' என்று சொல்லியிருக்கிறான் ஆறுமுகம். அப்படியானால் இன்றைய பிரபல அரசியல் தலைவர்களெல்லோரும் ஒவ்வொரு வெளிச்ச வீடுகளா? அப்படியானால் மக்கள் எந்த வெளிச்சவீட்டை நோக்கிப் போவது! தன்னுள் எழுந்த இந்தப் பிரச்னையான கேள்விகளுக்கு விடைகாணப் பலமற்றவனாக எழுந்து யன்னலருகே நின்று சாலையை நோக்கினான்.

அதிகமான நீர்ப்பெருக்கின்பின் வடிந்துவிட்டிருந்த ஆற்றைப்போல் சாலை மிக அமைதியாக இருந்தது. ஆனாலும் ஒருசில சொறி பிடித்த குட்டைநாய்கள், அதுவே வாழ்க்கையாக சாலையில் இடையிடையே வந்து கொண்டிருக்கும் கார்களுக்குள் அடிபடாமல் தப்பி ஓடிக்கொண்டிருந்தன

❀ ❀ ❀

''ஐயா'' -என்றஇலட்சுமியின் குரல் கேட்டு, சுந்தரம் வாசல்படிக்கு இறங்கி வந்தான். லட்சுமி ஒரு குழந்தையுடன் நின்றுகொண்டிருந்தாள்.

''ஏன் லட்சுமி இவ்வளவு லேட்?'' என்றான் சுந்தரம்.

''குழந்தைக்குச்சுகமில்லை; அதுதான் நேரத்துக்கு வர முடியவில்லை ''

சுந்தரத்துக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

''என்னிலும் பார்க்க உனக்குக் குழந்தைதான் பெரிது. இல்லையா?'' -என்றான்.

அவள் அவனை மௌனமாகப் பார்த்தாள். அந்தப் பார்வை 'நான் யாரையும் வித்தியாசமான நிலையில் வைத்திருப்பதில்லை' என்பது போல் தோன்றினாலும், சுந்தரத்தால் அதை உணர முடியவில்லை.

''அப்படியானால் ஏன் இங்கு வந்தனீ... குழந்தையுடன் வீட்டிலே இருக்கலாமே.''

— ச. சுப்பிரமணியம் —

''குழந்தைக்கு மருந்து வாங்கத்தான் வந்தேன்''- என்றாள், மெதுவாக லட்சுமி. சுந்தரத்துக்கு லட்சுமியை விடவும் மனம் இல்லை.

''அப்படியா! மருந்து வேணுமானால் குழந்தையை வெளியே கிடத்திவிட்டு, நீ மாத்திரம் உள்ளே வா'' என்று கட்டளையிட்டான் சுந்தரம்.

''ஏன் குழந்தையை உள்ளே கொண்டுவந்தால் என்ன?'' - திருப்பிக் கேள்வி கேட்டாள் லட்சுமி.

சுந்தரத்துக்குக் கோபம் வந்துவிட்டது.

''என்னையா கேள்வி கேட்கிறாய்? பதில் சொல்ல வேண்டுமானால் இதோ சொல்கிறேன் கேள். அந்தக் குழந்தை சாதி குறைந்தது. வீட்டுக்குள்வரக்கூடாது.'' - என்று சொல்லிவிட்டு, மருத்துவ அறையை நோக்கிநடந்தான் சுந்தரம்.

''கொஞ்சம் நில்லுங்கள்'' -- லட்சுமியின் குரல் கேட்டு சுந்தரம் திரும்பி நின்றான்.

''உங்கள் சுயநலத்துக்காகச் சாதிவேற்றுமை பார்க்கும் நீங்களும் ஒரு மனிதரா? உங்கள் மருந்துவேண்டாம். அதிலே கூட உங்கள் சாதித்துவேஷம்கலந்துதான் இருக்கும். நான் போகிறேன். இனிமேல் இந்தநரகத்துக்கு வரவேமாட்டேன்.'' - படபடவென்றுசொல்லிவிட்டு, லட்சுமி குழந்தையை அணைத்தபடி தெருவிலே இறங்கி நடந்தாள்.

சுந்தரம் ஏதோ சொல்ல வாயெடுத்தான். கொஞ்சநேரத்துக்குள் எவ்வளவோ நடந்துவிட்டதுமல்லாமல், தான்இழக்கக்கூடாததொன்றையும் இழந்துவிட்டது போல் தோன்றியது. ஆனால் அதற்காக அவன் வருத்தப்படவில்லை. பேசாமல் படுக்கையறையில்போய் கட்டிலில் உட்கார்ந்தான்.

நண்பன் ஆறுமுகம் சொன்னவார்த்தைகள், ஒவ்வொன்றாக அவன் காதுகளில் ஒலித்தன.

'அடிமையையும், சாதியையும் எதிர்த்துப் போராடிய உத்தமர் மகாத்மா காந்தியினுடைய படம்.

என்றும் அவர் எங்களுக்கு வெளிச்சவீடு!,

சுந்தரம் எதிரேதொங்கிய காந்தியின் படத்தை உற்று நோக்கினான். அவருடைய அந்த அடங்காத சிரிப்பிலே கண்ணும், இதயமும் கூசச் சுந்தரம், கண்களை மூடியபடி படுக்கையில் சரிந்தான்.

'கேவலம் சுயநலத்துக்காகத் தோலிலே வேற்றுமை கொண்டாடிய அவனுடைய பேதமையைக்கண்டு, உத்தமர் காந்தி சிரித்துக்கொண்டிருந்தார். ஆனால் அவன் அழுதான்.

(யாவும் கற்பனை)

## காவிய வாழ்வு

— மு. கனகராசன் —

என்னிதயச் சோலையிலே உன்னைக் கண்டேன்
எழில் மணக்கும் பூக்களிலே எண்ணந்தம்முள்
தென்றல்தேர் ஏறிவரும் பெண்மை கண்டேன்
தேனிலவே உனைக் கண்டேன் எங்கும் கண்டேன்.

○

கனல்மூளும் இதயத்தில் காதல் தந்தாய்
கவிதைக்குப் பொருளும் உன்விழியில் வைத்தாய்
மனமேடை தனிலாடும் எந்தன் அன்பே
மாசற்ற கலையாகித் தருவாய் இன்பம்.

○

மதுவூறும் உடலிற் சிற்றின்பம் தேங்க
மாளாத துயரமுஞ் சேர்ந்தே பொங்கும்
எதுவந்தும் எம்மோடே சாம்பல் ஆகும்
எனவேதான் வாழ்வை நாம் கவிதை செய்வோம்.

○

காதல்மிகு யிதயத்து ஏக்கமெலாம்
கவிதைக்குச் சிறப்பீனும் அணியானாலும்
சாதனை என்பதை அதுவே இழக்க
சாவினை ஏவுமே உலகந் துணிந்து.

○

புவியெங்கும் அன்பிற்கோ இடமேயில்லை
புனிதத்தைப் போற்றாது புதைத்தார் மண்ணில்
கவிபேணும் மாந்தரைக் காணோம் எனவே
காவிய வாழ்வை நாம் செய்வோம் விண்ணில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'என்னைக் கவர்ந்த பாடல்'



நான் கதாநாயகியாக நடித்து வெற்றிப் படமாக அமைந்த "தெய்வத்தாய்" படத்திலே ஒரு பாடல். படத்தில் என் காதலர் மாறன் "இந்தப் புன்னகை என்ன விலே?" என்று பாட, அதற்குப் பதிலளிக்கும்வகையில் நான் "என் இதயம் சொன்ன விலே?" என்று பதிலளிப்பேன். அப்பாடலும் ரசிகர்களுக்குப் பிடித்தமான பாட்டாக அமைந்தது.

## கவர்ந்தது

ஒரு விதத்தில் பார்க்கப் போனல், அப்பாடல் ரசிகர்களை மட்டும் கவரவில்லை. என்னையுமே கவர்ந்துவிட்டது "புன்னகை என்ன விலே?", "என் இதயம் சொன்னவிலே" — இவ்வடிகளை பலமுறை நானே தனிமையில் என் வாய்க்குள்ளேயே முணுமுணுத்திருக்கிறேன்.

பாடலாசிரியர் வாலி, இப்பாடலை எந்த அர்த்தத்துடன் எழுதினரோ எனக்குத் தெரியாது. ஆனால் என்னைப் பொறுத்த வரையில், வாழ்க்கையின் பெரிய வேதாந்த தத்துவமே இவ்வடிகளில் அடங்கியிருப்பதாகத்தான் எனக்குப் படுகின்றது.

— சரோஜாதேவி

## ஆங்கிலப்படத்தில் இந்தியச் சிறுமி!

12 வயதே நிரம்பாத இந்தியச்சிறுமி ஆங்கிலப் படத்தில் பிரதானபாகம் ஒன்றில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிருள். ஜூலியஸ் சீசர் ஜோன்ஸ் என்ற ஆங்கிலப் படத்தில் நடிக்கும் இந்திய பேபிநட்சத்திரத்தின் பெயர் சந்திரிகா அங்காடி. ஆசிய சங்கீதக் குழுவின் தலைவராயுள்ள அயன தேவ அங்காடியின் மகள்தான் இந்தப் பேபி நட்சத்திரம்!

## அத்திப்பூ

முன்பெல்லாம் திரைப் படங்களின் பெயரை நீளமாக வைப்பதில் சிலர் ஆர்வம் கொண்டிருந்தார்கள். இப்போது அது மாறிவிட்டது. இப்பொழுது மலர்களுக்கு அதிர்ஷ்டம் பிறந்திருக்கிறது. அதன் பெயர்கள் இப்போது திரைப்படங்களின் பாடல்களில் மட்டுமல்ல படங்களின் பெயராக அதையே சூட்டிவிடுகிறார்கள். அந்த வரிசையில் 'அத்திப்பூ' வந்திருக்கிறது.

எஸ். எஸ். ஆர். பிக்சர்சார், பிலஹரி கதைவசனமெழுதியுள்ள 'அத்திப்பூ' வைத் திரைப்படமாக்கப் போகின்றனராம். படத்தின் பெயரும் இதுவாகத்தானிருக்குமாம்.

## நாடோடி!

பத்மினி பிக்சர்சாரின் நாடோடி வேகமாக வளர்ந்துவருகிறது. இதில் எம். ஜி. ராமச்சந்திரன், சரோஜாதேவி, வி. கே. ராமசாமி, நம்பியார், பி. கே. சரஸ்வதி, சகிலா, பி. எஸ். செல்வராசா ஆகியோர் நடிக்கின்றனர்.

ஒரு மாராட்டிய படத்தைத் தழுவலாகக்கொண்ட இப்படத்தின் திரைக்கதையை ஜி. பாலசுப்பிரமணியம் எழுதி வருகிறார். வசனத்தை ஆர். கே. சண்முகம் எழுதியுள்ளார். பாடல்கள்: கண்ணதாசன், இசை: விஸ்வநாதன், டைரக்‌ஷன் பி. ஆர். பந்துலு.

## 'சித்திரா பௌர்ணமி'

தோடி ராகத்தில் மிக இனிமையாக சுசீலா பாடிய பாட்டொன்று வேல்முருகன் பிலிம்சாரின் 'சித்திரா பௌர்ணமி' எனும் படத்துக்காகப் பதிவாகியது. வாலி எழுதிய இப்பாடலுக்கு எம். எஸ். விசுவநாதன் இசையமைத்திருக்கிறார்.

விஜயகுமாரி இப்படத்தில் ஒருபாடகியாக நடிக்கிறார்.

'நான் பாடும் தமிழ்ப்பாட்டின் தலைவனே
நாள்தோறும் நான் போற்றும் இறைவனே'

இப்பாடலோடு விஜயகுமாரி படத்தில் அறிமுகமாகிறார்.

பாடகியான விஜயகுமாரியின் இதயத்தில் இடம் பெறும் வாடகைக்காரோட்டியாக எஸ். எஸ். ராஜேந்திரன் நடிக்கிறார். மற்றும் நாகேஷ், மனோரமா, சிவகுமார் ஆகியோரும் நடிக்கின்றனர்.

கிருஷ்ணன் பஞ்சு டைரக்ட் செய்யும் இப்படத்தை நிமாய்கோஷ் படமாக்குவார்.

## பத்மஸ்ரீ சிவாஜிக்கு பாராட்டு

'நடிகர் திலகம்' சிவாஜி கணேசனுக்கு ஜனாதிபதி, பத்மஸ்ரீ பட்டம் வழங்கியுள்ளதற்கு பிரமுகர்களும், நடிகர்களும் நேரிலேயும், தந்திகள் மூலாகவும் வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளனர்.

மத்திய உள்துறை மந்திரி திரு. நந்தா, சென்னை கவர்னர் திரு. பி. சந்திராரெட்டி ஆகியோர் சிவாஜிக்குக் கிடைத்த கௌரவத்தைப் பாராட்டி கடிதங்கள் எழுதியுள்ளனர்.

நடிகர்கள் எம். ஜி. ராமச்சந்திரன், ஜெமினிகணேசன், சாவித்திரி, தேவிகா மற்றும் ஏ. எல். ஸ்ரீனிவாசன், பி. நாகிரெட்டி, எஸ். எஸ். வாசன், கவிஞர் கண்ணதாசன் ஆகியோர் பாராட்டுச்செய்திகள் அனுப்பியுள்ளனர்.

வடநாட்டு நடிகர்களான ராஜ்கபூர், சுனில் தத், அசோக்குமார், பின்னணிப் பாடகிகள்லதா, உஷா, ஆஷா மற்றும்பலர் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.



தேவிகாவின் கவர்ச்சித் தோற்றம்.

## திரைப்படம் மூலம் காரோட்டிகளுக்குப் போதனை

நாள்தோறும் போக்குவரத்து விபத்துக்கள் ஏற்பட்டு, அனியாயமாக உயிர்ச்சேதமும், பொருட்சேதமும், ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. போக்குவரத்து விபத்துக்களைத் தவிர்க்க மேற்கு ஜெர்மனியில் புதுமையானமுறை கடைப்பிடிக்கப்படுகிறது

ஒழுங்காகக் காரோட்டாமல், தவறு செய்கிற காரோட்டிகளுக்கு பிராங்க்பர்ட் பொலிசாரிடமிருந்து 'அழைப்பு வருவதுண்டு. "அன்புமிக்க காரோட்டி, தாங்கள் போக்குவரத்து விதிகளைப் பின்பற்றுவதாகத் தெரியவில்லை. எனவே பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதி, நாங்கள் நடத்தும் போக்குவரத்து போதனை வகுப்பில் கலந்துகொள்ள தங்களை அழைக்கிறோம்" என்று அழைப்பில் எழுதப்பட்டிருக்கும்.

காரோட்டிகள், மோட்டார் சைக்கிள் ஓட்டிகள், சைக்கிள் ஓட்டிகள் ஆகியோரை 25 பேர் கொண்ட தனித் தனிக் கோஷ்டியாகப் பிரித்து, பொலிசார் "பாடம்" நடத்துவார்கள். காரோட்டிகள் இன்னும் சிறிது கட்டுப்பாடுடனும், நிதானமாகவும் கார்களை ஓட்டியிருந்தால், பெரும்பாலான விபத்துக்களைத் தவிர்த்திருக்கலாம். எனவே காரோட்டிகளுக்குப் போக்குவரத்து விதிகளைப் பொலிசார் போதிப்பதில்லை. காரோட்டிகள் எப்படித் தன் பகுத்தறிவைப் பயன்படுத்தி, நிதானத்துடன் நடந்துகொண்டிருந்தால் விபத்துக்களைத் தவிர்த்திருக்கலாம் என்பதை போக்குவரத்து பொலிஸ் அதிகாரி, "குட்டி" பிரசங்கம் செய்வார். அதன் பின்னர் ஒரு திரைப்படம் காண்பிக்கப்படும். பலவித சூழ்நிலைகளில் எவ்விதம் போக்குவரத்து விதிகளை மீறி காரோட்டிகள் நடக்கிறார்கள் என்பதை இத்திரைப்படம் சித்தரிக்கும்.

காரோட்டிகள்மட்டும்தானா தவறு செய்கிறார்கள்? இல்லை! பாதசாரிகளும் குறிப்பாக வயதானவர்கள் தற்போதைய போக்குவரத்து நெரிசல் சிக்கலைப்பற்றி அறியாமல், சடாரென்று சாலையில் குறுக்கே பாய்ந்து விடுகிறார்கள். இதுபோன்றவர்களையும் பொலிஸ் அதிகாரிகள் தங்கள் கார்களில் ஏற்றி, முக்கிய நாற்சந்திகளுக்குக் கொண்டுசென்று போக்குவரத்து நிலைமையை நேரில் விளக்குகிறார்கள்.

# கலை அரங்கம்

## 'ஆண்டவன் படைப்பில் இரகசியமில்லை'

உமையாள் புரொடக்‌ஷன்சாரின் 'அவன் பித்தனா' படத்துக்காகபுதுமுகம்உதய சந்திரிகா ஆடும் நடனமொன்று சாரதா ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது.

எஸ். எஸ். ராஜேந்திரனை மயக்கவைக்க அவர் பாடும் பாடல் கண்ணதாசனால் எழுதப்பட்டது.

'ஆண்டவன் படைப்பில்
இரகசியமில்லை
அதனாலே ஆடை
குறைந்தது
அழகிய உடலும் பலவகை
யானது...'

இப்படி எழுதப்பட்டிருக்கிறது பாட்டு.

இப்பாடலை எல். ஆர். ஈஸ்வரி பாடியுள்ளார். ஆர். பார்த்தசாரதி இசையமைத்துள்ளார்.

விஜயகுமாரி, டி. எஸ். பாலையா, எஸ். வி. சகஸ்ரநாமம், நாகேஷ், ஏ. கருணாநிதி, சரஸ்வதி, டி. பி. முத்துலட்சுமி, சி. டி. ராஜகாந்தம் ஆகியோர் இப்படத்தில் நடித்துவருகின்றனர்.

மு. கருணாநிதி வசனமெழுத பா. நீலகண்டன் டைரக்ட் செய்யும் இப்படத்தை சுந்தரபாபு ஒளிப்பதிவு செய்ய, கலை நிர்மாணஸ்தர் அங்கமுத்து தயாரிக்கிறார். இப்படம் இன்னும் சில மாதங்களில் வெளிவருமெனஎதிர்பார்க்கபடுகிறது.

## தேவர் படத்தில் ஜெமினி நடிக்கிறார்

தேவர் பிலிம்சாரின் 'முகராசி' படத்தில் ஒரு முக்கியமான கட்டத்தில் ஜெமினி கணேசன் நடிக்கவிருக்கிறார். தேவரின் படத்தில் இவர் நடிப்பது இதுவே முதல் தட வையாகும்.

இப்படத்தில் ஜெமினி கணேசனுடன்ஜயந்திஜோடியாக நடிப்பார்.

மற்றொரு ஜோடியாக எம். ஜி. ராமச்சந்திரனும், ஜெயலலிதாவும் நடிக்கின்றனர்.

ஜயந்தியும் ஜெயலலிதாவும் [illegible] னர். இவர்களின் தந்தையாக நம்பியார் நடிக்கிறார்.

## சிவாஜி கருத்து

'பத்ம ஸ்ரீபட்டம்எனக்குக் கிடைத்ததைப்பெரியகௌரவமாகக் கருதுகிறேன். கலைத்துறையிலும், நாட்டிற்கான சேவைபுரிவதிலும்தொடர்ந்துபணிபுரிய இக்கௌரவம் என்னை நிச்சயமாக ஊக்குவிக்கும் என நம்புகின்றேன்' என்று சிவாஜி தெரிவித்துள்ளார்.

## 'கமலம்' எதிராஜ் மூவிஸார் தயாரிப்பு

எதிராஜ் மூவிஸார் 'கமலம்' என்ற பெயரில் ஒரு புதுமை நிறைந்த கதையைத்தயாரித்து வருகின்றனர். இதில் முத்துராமன் பிரதான பாகமேற்று நடிப்பார். கல்பனா ஜோடியாக நடிப்பார். பாலையா, சுப்பையா, எம். என். ராஜம் ஆகியோரும்நடிக்கின்றனர்.

## மேசையில்லாத நடிகர்

ஒரு காரியாலயத்தில் என்னால் திறமையாகக் கடமையாற்றமுடியாது. என்னிடம் மேசையும் இடையாது; காரியாலமும் இடையாது. இதெல்லாம் எனக்கு சரிப்பட்டுவராது என எனது ஆரம்ப வாழ்க்கையிலேயே அறிந்துகொண்டேன்.

ஏழ்மையில் பிறந்து வறுமையில் அடிபட்டு இப்போது பிரபல்யமாகத் திகழும் ஹலிவூட்டின் பெரும் நடிகர் ஹேர்க்டக்ளஸ் இவ்வாறு கூறியுள்ளார்.

## நம்நாடு எம். ஜி. ஆர்- சரோஜாதேவி ஜோடி

விஜயா கம்பைன்சார் தயாரித்துவரும் வண்ணப் படமான 'நம்நாடு' வேகமாக வளர்ந்துவிட்டது.

இப்படத்தில் எம். ஜி. ஆரும் சரோஜாதேவியும் நடிக்கின்றனர்.

சாணக்யா டைரக்ட்செய்கிறார்.

## தேவரின் 'முகராசி'

தேவர் தயாரித்துவரும் 'முகராசி'யில் எம். ஜி. ஆர்., ஜெயலலிதா ஜோடிசேர்ந்து நடித்துவருகிறார்கள்.

# நாலு புறம் நோக்கி . . .



வசந்தியின் தளிர்க் கரங்கள் தம்ளரில் தண்ணீரை ஊற்ற, [illegible] கமலங்கள் வேறு வழிநோக்கி நிற்கும் காரணம் என்னவோ? [illegible]
(படம்: என்னதான் முடிவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமேடை

## ஏடன் தளம்

ஏடனிலிருந்துபிரிட்டிஷ் தளங்களை வாபஸ் பெற்றுக் கொள்ள பிரிட்டன் இணங்கியிருப்பது, ஒருவேளைதென் அரேபிய சம்மேளனத்திற்கு திருப்தியளித்திருக்கும். அந்த நாட்டில்பிரிட்டனுக்கு கடும் எதிர்ப்பு இருந்து வருகிறது. அதே சமயம், பிரிட்டன் அங்கு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை பல உலகநாடுகளுக்கும்அதிருப்தியை உண்டுபண்ணியிருக்கிறது.

ஆனல் ஏடனிலிருந்து பிரிட்டன் வெளியேறினலும் அதற்குப்பதிலாக மற்ருேர் இடத்தில் தனது தளங்களை அமைத்துக்கொள்ளும் என்பதால் இது வரவேற்கக்கூடியசெய்தியாக இருக்கவில்லை.

பிரிட்டிஷ்மந்திரிசபையும், பாதுகாப்பு உயர் அதிகாரிகளும் சமீபத்தில் நடத்திய தீவிர ஆலோசனைக்குப்பின் இந்த முடிவு செய்யப்பட்டது.

சூயஸுக்கு இப்பால் பிரிட்டிஷ் பாதுகாப்பு கொள்கை பற்றி பலகாலமாகவே கடுமையான ஆலோசனைகள் நடைபெற்று வந்திருக்கின்றன. முன்னைய கன்சர்வேட்டிவ் ஆட்சிக் காலத்திலும், தற்போதைய தொழிற்கட்சி ஆட்சியிலும் இவ்விஷயம் முக்கிய இடம்பெற்றுவந்தது என்பதைப் பலர் மறந்திருக்கமாட்டார்கள். பிரிட்டிஷ் தளங்கள்பற்றிதீவிரஎதிர்ப்பு இருக்கும் இடங்களில் புதிய கொள்கை ஒன்றை அது அனுசரித்து வருவதையும் அவர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

திருக்கோணமலையிலுள்ள பிரிட்டிஷ் தளங்கள் அகற்றப்பட்ட பின், அது மாலைதீவுக்குமாற்றப்பட்டது. இப்போது ஏடனுக்குப்பதில் மற்ருேர் கோடன்வரும்.

அதே சமயம் மொரீஷியஸிலுள்ள கார்ஸியா தீவுகளில் பிரிட்டன், அமெரிக்காவுடன் ஒன்றுசேர்ந்து ராணுவத்தளங்களைஅமைக்கஇருப்பதையும் மறக்கவேண்டாம்.

பிரிட்டன் இப்போது பெரிய ஏகாதிபத்திய நிலையிலிருந்து, 3-ம் தர வல்லரசாக மாறிவிட்டிருக்கிறது. எனவே, பெரிய பாதுகாப்பு நிறுவனங்களைப் பராமரிக்கும் பொருளாதார வசதி அதற்கு இல்லை. அதனல்தான் இப்போது பிரிட்டன் தென்கிழக்காசியாவில்தனது ராணுவ பராமரிப்பை அமெரிக்காவுடன் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்திருக்கிறது சுருக்கமாகச்சொன்னல் ஒரு நாட்டுராணுவத்தளத்துக்கு பதில் இரு நாடுகளின் ராணுவத்தளங்கள் இப்போதுஆசியாவில் ஏற்பட்டுவருகின்றன. தான் வெளியேறும் இடங்களிலெல்லாம், பிரிட்டன் அமெரிக்காவை இழுத்துவிட்டிருப்பதுஇதற்குஉதாரணம்.

மொரீஷியஸில் ராணுவத் தளங்கள் இன்னும் அமைக்கப்படவில்லை. ஆனல் உரிய தருணம் வரும்போது அங்கு ஆங்கிலோ - அமெரிக்கப் படைகள் செயல்படும் என்பதை பிரிட்டிஷ் பாதுகாப்பு மந்திரி சமீபத்தில் அறிவித்திருக்கிருர்.

சூயஸ்கால்வாய்க்கு இப்புறத்தில் பிரிட்டனுக்குப் பாதுகாப்புக்கடமைகள் இருக்கின்றன என்பதையும், அதைஉதாசீனம் செய்யமுடியாது என்பதையும் பிரிட்டன் சமீபத்தில் அமெரிக்காவுடன் பேச்சு நடத்திய பின் வெளியிட்டது.

ஆனல் இந்தப் பெரும் பாரத்தைத் தன்னல் தனியாகச் சுமக்க முடியாது என்பதையும், அமெரிக்காவுடன் அதைப் பகிர்ந்துகொள்ள வேண்டியிருக்கிறது என்பதையும் பிரிட்டிஷ் அரசாங்கம் சூசகமாகத் தெரிவித்தது.

பிரிட்டன் 1980-ம் ஆண்டு வரை சிங்கப்பூரிலுள்ள தனது தளத்தை வைத்திருக்கப்போவதாய்த் தெரிகிறது. அதற்குப்பின் அது உண்மையில் அங்கிருந்து வெளியேறுமா அல்லது, அதற்குப்பதிலாக வேறு இடம் ஒன்றைத் தெரிவு செய்யுமா என்பதை உயிரோடிருந்தால் நாம் பார்க்க முடியும். சிங்கப்பூர், தூரகிழக்கில் பிரிட்டனுக்கு மிக முக்கியமான ஒரு தளம். எனவே அதன் எதிர்காலம் அரசியல் துறையிலும், ராணுவத்துறையிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்.

முன்னள் ஏகாதிபத்திய நாடுகளில் பிரிட்டனுக்கு மட்டுமே தூரகிழக்கில் முக்கிய ராணுவத் தளங்கள் உண்டு. எனவே பிரான்ஸ், போர்த்துக்கல், ஸ்பெயின், ஹாலந்து ஆகிய நாடுகளைப் போல் அன்றி பிரிட்டனுக்கு பாதுகாப்புச் சுமை அதிகம். முன்னள் வந்த ஏகாதிபத்தியங்கள் போய்விட்டன. கடைசியாக வந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இப்போது போய்க்கொண்டிருக்கையில், அதன் நிழலான தளங்கள்மட்டும் இடம்மாறிவருகின்றன. அதே சமயம் அமெரிக்கத் தளங்கள் உலகம் முழுதும் உருவெடுத்து வருகின்றன.

அமெரிக்காவின் பாதுகாப்புச் செலவு ஆண்டு ஒன்றுக்கு 25000 கோடியை மிஞ்சியிருக்கிறது. போதாததற்கு பாதுகாப்புச் செலவுக்கு மேலதிக உபமான்யங்களை ஜனதிபதிகள் கோரி வருகிருர்கள்.

உலகத்தின் தர்மகர்த்தா பொறுப்பை கடவுளிடமிருந்து அமெரிக்கா ஏற்றுக் கொண்டுவருவதற்கு இது உதாரணம். இவ்வித இராணுவத்தளங்களுக்குபாபேல் கோபுரத்தின் கதி ஏற்படாமல் இருக்கவேண்டும்.

---

**பூஜ்யம் தபால்**

## ராஜாஜி அவர்கள், சென்னை.

பாரத ரத்னம் அவர்களே!

வணக்கம். சென்னையிலே ஒரு கூட்டத்தில் பேசுகையில், ரஷ்யப்பிரதமர் கோஸிஜினுக்கு சமாதான நோபல் பரிசுஅளிக்கவேண்டுமென்று சிபார்சு செய்தீர்களாம். டாஷ்கண்டைத்தவிர வேறு எந்த நாட்டில் கூடியிருப்பினும் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இவ்வித சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டிருக்க முடியாதென்றும் தாங்கள் கூறியிருக்கிறீர்கள். மிகவும் சரி. தங்களதுயோசனையை பீக்கிங்கைத்தவிர மற்றவர்கள் எல்லோருமே ஆதரிப்பார்கள்.

டாஷ்கண்ட் ஒப்பந்தம் உருப்படுமா? இந்தியாவும் பாகிஸ்தானும் நட்புடன் ஒத்துழைக்க வெளிவல்லரசுகள் விட்டுவைக்குமா அல்லது மித்ரபேதம் செய்யுமா என்று இங்கு பல அன்பர்களுக்கு மனதில் சந்தேகம். பாரதப்பிரதமர் இந்திராஜி, இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றிவைக்க உண்மையில் முனைந்துள்ளதாக அவரது பேச்சிலிருந்து தெரிவதாயும், அவர் டெலிவிஷனில் அளித்த முதல்பேட்டி மிகவும் நம்பிக்கையளிப்பதாக இருப்பதாகவும் பாராட்டியிருக்கிறீர்கள். 'வசிஷ்டர் வாயாலே பிரம்மரிஷி என்று கதையுண்டு. தங்களதுஆசீர்வாதம், பிரதமர் இந்திராஜி வெற்றிகரமாகத் தன் கடமையைச் செய்ய பெரிதும் உதவும்.

காலஞ் சென்ற பிரதமர் சாஸ்திரிடாஷ்கண்டிலிருந்து கடைசியாகத் தங்களுக்கு எழுதிவைத்திருந்த கடிதத்தைப் பார்த்தேன். தாங்கள் எதிர்க் கட்சியிலிருப்பினும், பிரதமருடன் மிகநெருங்கிய தொடர்புகொண்டு, அவ்வப்போது தக்க யோசனைகளைக் கூறி வருவதை அறிய மிக மகிழ்ச்சி. தங்களது தீர்க்கதரிசமான யோசனைகளை மதித்து, அவற்றை இந்தியப் பிரதமர் சாஸ்திரி பயன்படுத்திக்கொண்டு வந்தார். அதைப்போல் இப்போது இந்திராஜிக்கும் தொடர்ந்து உதவி செய்வீர்களென்று நம்புகிறேன்.

தாங்கள் எழுதிய ஒரு கட்டுரையைப் பிரசுரித்ததற்காக 'ஸ்வராஜ்யா', 'கல்கி' இவ்விரு சஞ்சிகைகள்மீதும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததைக் கேட்டுத் திடுக்குற்றேன். பாரதரத்னமும், முன்னள் கவர்னர் ஜெனரலும், முதுபெரும் அரசியல் ஞானியும், தியாகியுமான தங்கள் எழுத்துக்குமா இந்த நடவடிக்கை என்று கவலைப்பட்டேன். அரசாங்கத்துக்குத் தாங்கள் ஏதோ கடிதம் எழுதியதன் மீது, அந்த நடவடிக்கைகள் வாபஸ்பெறப் பெற்றுவிட்டதாம். என் பாராட்டுகள்.

ஜனநாயகம் வெற்றிபெற வேண்டுமானல் தேச நன்மைக்கான எல்லாக்கருத்துக்களையும் தெரிவிக்க சுதந்திரமிருக்கவேண்டும். இப்போது நிலைமை மாறிவிட்டதால், இந்தியாவில் அவசரகால நிலைமையை நீக்குவதுடன் வேறு பத்திரிகைகள் மீது தொடரப்பட்டுள்ள வழக்குகளையும் வாபஸ் பெறுவரென நம்புகிறேன்.

இப்படிக்கு,
பூஜ்யம்.

குறிப்பு:

காலஞ்சென்ற கம்யூனிஸ்ட் தோழர் ஜீவானந்தத்தின் உருவச்சிலை திறப்பு விழாவிலே தாங்களும் பெரியார் ஈ. வெ. ரா., காமராஜர், அறிஞர் அண்ணு, மா. பொ. சி. முதலியவர்களும் ஒரே மேடையில் சேர்ந்து இருந்து, ஜீவாவைப் பாராட்டியுள்ளதை அறிய மிக வியப்பாயும் மகிழ்ச்சியாகவுமுள்ளது. ''கம்யூனிஸ்டுகள் தான் எனது முதல்நம்பர் எதிரி'' என்று முன்னர் தாங்கள் கூறியதாக ஞாபகம். ஆனல் இப்போது, தாங்கள் கம்யூனிஸ்ட் தலைவர் கோஸிஜினுக்கு சமாதான நோபல் பரிசுஅளிக்கவேண்டுமென்று கூறியுள்ளதுடன், தோழர் ஜீவாவின் உருவச்சிலைத் திறப்புவிழாவில் கலந்துகொண்டு அவரைப் பாராட்டி இருக்கிறீர்கள். சில நண்பர்களுக்குத் தங்கள் போக்குப் புரியவில்லை. விருப்பு வெறுப்புகளின்றி குணம் கண்ட இடத்துப் போற்றவும், குற்றம் கண்ட இடத்துத் தூற்றவும் கூடிய பண்பு எவ்வளவு [illegible] வரும்!

தாங்கள் நீடூழி தேகசுகத்துடன் வாழ்ந்து, உலக சமாதானத்துக்குக் கூடுமான பணியைச் செய்யவேண்டுமென்பது எனது பிரார்த்தனை.

---

## சந்திர மண்டல வாசலைத் தொடுவான?

(I-ம் பக்கத் தொடர்ச்சி)

டுமே இந்தச் செயற்கைக்கிரகம் இறங்கி, அந்தப்பகுதிபற்றிய தகவல்களை மாத்திரம் அனுப்பியுள்ளதால் இந்தத் தகவல்களைக்கொண்டு சந்திரனின் இயற்கைத்தன்மைகள் பற்றிப் பரிபூரணமாகக் கண்டறியமுடியாது என்பது உண்மையே. வெண்மதியின் தன்மையைக் கண்டறிய இதுபோன்று இன்னும் பல தடவைகள் சந்திரனில் இறங்கி பரிசோதனைகளும், ஆராய்ச்சிகளும் நடத்த வேண்டுமெனினும் லூனு ஒன்பதின் வெற்றி, சந்திர மண்டலத்தில் பத்திரமாக இறங்கலாம்என்பதை அடிப்படையில் அத்தாட்சிப்படுத்தியுள்ளது; நிரூபித்துவிட்டது என்பது உண்மையே. லூனு ஒன்பதின் பயணம் வெற்றியளிக்கப் பாடுபட்ட சோவியத் விஞ்ஞானிகள் இதை முதற்படியாகக் கொண்டு மனிதன் சந்திர மண்டல வாசலைத்தொடுவதற்கு வழிசெய்வார்கள் என்பதில் நம்பிக்கை வைக்க இடமுண்டு.

### பூமியிலிருந்து செய்யப்பட்ட முயற்சிகள்

சந்திரமண்டலத்தைப் பற்றிக் கண்டறியபூமியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பற்றிச்சுருக்கமாக ஆராய்வது பொருத்தமுடையதாகும். சூரியன் வெவ்வேறு உயரங்களில் (Altitudes) நிற்கும்போது சந்திரனில்படும் ஒளியின் தன்மையைக் (Brightness) கொண்டு செய்யப்பட்ட ஆராய்ச்சி சந்திரமண்டலத்தின் மேற்பரப்பில் மலைகள் போன்ற இடங்கள் இருக்கும் எனவும் அவை துவாரத்தன்மை (Porous) வாய்ந்தவை எனவும் முடிவு கட்ட வழிவகுத்தன. மேற்பரப்பின் சகலஇடங்களினதும் கூறுபாடுகள் (Composition) ஒரேதன்மையனவாக இருக்கும்எனவும் ஊகிக்கப்பட்டது. சந்திரனின் மேற்பரப்பில்சுமார் 5சதவிகிதம்பற்றி மட்டுமே எதுவும் தெரிந்துகொள்ளப்படாதிருந்த போதிலும், பூமியிலிருந்துகொண்டே செய்யப்பட்ட முடிவுகள் சந்திரனின் மேற்பரப்பு எத்தன்மையது அதன் இரசாயன கூறுகள் என்ன, ஒரு சதுரஅடி எவ்வளவு எடையைத் தாங்கும் என்பன குறித்து போதுமான, நம்பிக்கையான விபரங்களை தீர்க்கமாக கொள்வதற்கு வகைசெய்யவில்லை. இதனலேயே சந்திரனில் ஒரு செயற்கைக் கிரகத்தை இறக்கி அங்கிருந்து நேரடியான தகவல்களைப் பெற்று ஆராய்ச்சிநடத்த விஞ்ஞானிகள் முற்பட்டனர்.

### எத்தனை கஷ்டங்கள்!

பூமியில் பத்திரமாகஇறங்குவதைவிட சந்திரனில் பத்திரமாக இறங்குவதென்பது மிகவும் கடினமான காரியமாகும். அப்படியானல் சோவியத் விஞ்ஞானிகள் இந்த இடர்ப்பாடுகளையெல்லாம் சமாளித்துத் தங்களது 'தானியங்கி லூனு ஒன்பதை' சந்திரனில் இறக்குவதற்கு எவ்விதம் செயலாற்றினர்கள்? பூமிக்குத் திரும்பும் செயற்கைக் கிரகங்களின் வேகம் பவன இழுப்பு விசையால் (Aerodynamic drag) மெது மெதுவாகக் குறைக்கப்படுகின்றது. பவன இழுப்பு விசையில்லாத அதி உயரத்துக்கு அப்பால் ரீட்ரோ (Retro) இயந்திரங்களைப் பாவித்து செயற்கைக் கிரகங்களை அனுப்பலாம். இவை கணக்கிடப்பட்ட நிமிட நேரத்தில் செலுத்தப்பட்டு, கணக்கிடப்பட்ட நேரத்திலேக் நிறுத்தப்படவேண்டும். உயரம், நேரம் ஆகிய கணக்கெடுப்புகளில் சிறு தவறு ஏற்பட்டுவிட்டால்கூட செயற்கைக் கிரகம் சந்திரமண்டலத்துக்குச் செல்லாமல் வேறுதிசை திரும்பிவிடும். சுருக்கமாகச் சொன்னல் பூமியிலிருந்து செலுத்தப்பட்ட நேரத்தில், குறிப்பிட்ட தூர மைல்களை அது கடந்து சென்று தனது தள்ளுவிசையை முற்ருகப் பயன்படுத்தி முடித்துவிடவேண்டும் என்பதே. இந்த ரீட்ரோ இயந்திரங்கள் பவன இழுப்பு விசையின் சக்தியில்லாத உயரத்தில் பறந்து கொண்டு இருக்கும்போது தனது விசையை நிமிடத்துக்கு 2 கிலோ மீட்டராகப் படிப்படியே குறைத்துக் கொண்டுவர வேண்டும். இல்லாவிடில் இலக்குத் தவறிவிடும். இந்த ரீட்ரோ இயந்திரங்கள் புறப்பல்சன் (Propulsion) தள்ளுவிசையாலேயே மேலே உந்தித்தள்ளப்படுகிறது லூனு ஒன்பது பத்திரமாகச் சந்திரனில் இறங்கியது என்ருல், அது சோவியத் விஞ்ஞானிகளின் சிறிதும் பிசகாத கணக்கெடுப்பை அவர்கள் செயல்வன்மையையே எடுத்துக்காட்டுகிறது எனலாம். சந்திரமண்டலத்தில் இறங்கி, தானக இயங்கி அங்கிருந்து தகவல்களை அனுப்புவதற்கு மிகவும் சிக்கலானதும், நுணுக்கமானதுமான தொழில் நுட்ப இடையூறுகளைச் சமாளிக்கவேண்டும். உந்தித்தள்ளும் ராக்கெட்டுகள், தானக இயங்குவதைக் கட்டுப்படுத்தும்சாதனங்கள் தேவையான சக்தியை விநியோகிக்கும் சாதனங்கள் என்பன சம்பந்தப்பட்ட இந்த இடர்ப்பாடுகள் வெற்றிகரமாகச் சமாளிக்கப்பட்டுள்ளன என்பதற்கு லூனு-9 தின் சாதனை சான்ருகும்.

### லூனு அனுப்பிய தகவல்கள்

லூனு ஒன்பது சேகரித்தனுப்பிய தகவல்களும், படங்களும் சந்திரனின் மேற்பரப்பு எத்தன்மையது என்பது பற்றிக் கண்டறிய உதவியாக இருக்கும் எனவே விஞ்ஞானிகள் நம்புகின்றனர். லூனு ஒன்பது அனுப்பிய தகவல்களை ஆராய்ந்து முடிவுக்குவரச்சிலமாதங்கள் கூட எடுக்கலாம் என சோவியத் விஞ்ஞானி ஒருவர் தெரிவித்துள்ளார். இந்தப்படங்களை, முன்னர் சந்திரனை வலம் வரும்போது எடுத்த படங்களுடன் ஒப்பிடவும் முடியுமல்லவா?

### சந்திரமண்டலம் எத்தன்மையது?

சந்திர மண்டலத்தில் மனிதன் இறங்கி ஆராய்ச்சி நடத்தக்கூடியவாறு விஞ்ஞான சாதனைகள் ஏற்படுத்தப்படுமா என்பதே இப்பொழுது எல்லோர் மனத்திலும் எழும் ஐயமாகும்.

மனிதன் சந்திரனில் இறங்கினல் அவனுக்கு எல்லாமே வித்தியாசமாகத்தோன்றும்.

(VIIIம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பூங்கா



ஒரு கற்பனைக் கதை

## அளந்தது அளந்ததுதான்

க. கனகலிங்கம் —

கைலைமலையில் எம்பெருமானும் தேவியும் பூவுலகைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது, "ஆண்டவா, ஏழைக்கிரங்குமையா; என் குறைதீருமையா நானும்தான் வேளைதவறுது கத்துகின்றேன்; கருணை வள்ளலாகிய நீர் மௌனம் சாதிக்கிறீர். இது ஏனோ" என்று ஒருகுரல் ஒலிக்கின்றது. உமாதேவியார் பூவுலகைப்பார்கின்றார். வழமையாக கத்தும்மானிடன்தான் என்பதைக் கண்டுகொண்ட உமாதேவியார், இன்றுஇதற்கோர் முடிவுகாணத்தான் வேண்டுமென்று திடசங்கற்பம் கொண்டவராய், போலி நித்திரை செய்யும் எம்பெருமான் காதில் விழும்படியாக "பிரபோ" என்று அழைக்கின்றார். எம்பெருமான்விழித்துக்கொண்டார். "பிரபோ, அதோபாருங்கள், அந்தப் பக்தனை. அவன் தான் மூன்றுவேளையும் எங்களைக் கூப்பிட்டு, எங்கள் மேல் பாமாலை தொடுத்து, கண்ணீர்விட்டுக் கதறியழுகின்றான். அவன் படும் வேதனை கண்டும், தாங்கள் அனுக்கிரகம்செய்யாது களிப்பதும்ஏனோ?" என்று கெஞ்சினார். "எம்பெருமான் சிரித்தார். பேதைப் பெண்ணே! அம்மனிதனின் பூர்வீகத்தைப்பற்றிச்சிந்தித்தாயா?" என்று தேவியைப்பார்த்துக் கேட்டார்.

"பிரபு, சிந்தித்தேன்; இருந்தபொழுதிலும் அம்மனிதன்மேல் தாங்கள் சற்றுக்கருணை காட்டத்தான் வேண்டும்" என்று அடம் பிடித்தார் தேவி.

"தேவி, அதோபார்' என்று சுட்டிக்காட்டி "அங்கு நடப்பதைக்கவனி" என்றார் சிவன். தேவி, பூவுலகை நோக்கினாள். அப்பொழுது அந்த மனிதன் ஆலயதரிசனத்தை முடித்துக்கொண்டு வீடுதிரும்பிக்கொண்டிருந்தான் "இதோபார்" என்று கூறி, இறைவன் ஒரு பணமுடிப்பை அவன் வரும் வழியில் சற்றுத்தூரத்தில் விழும்படி எறிந்தார். தேவியின் உள்ளம் மகிழ்ச்சியில் பொங்கியது. அதில் வெற்றிப்பெருமிதம் காணப்பட்டது. மகிழ்ச்சியுடன் எம்பெருமான் முகத்தை நோக்கிய தேவியிடம், "நீ காணவேண்டிய கட்டம் இதோ நெருங்கிவிட்டது" என்றார். தேவி பூவுலகைநோக்கியவண்ணம் இருக்கின்றார். அப்பொழுது அம்மனிதன்பணமுடிப்பைக் கண்டதும், அது பணமுடிப்பென்று அறியாது காலால் தட்டிவிட்டு நடக்கலானான். தேவியின் முகம் சுருங்கியது மேலும் நடப்பதைக்கவனி என்றார் சிவன். அப்பொழுது அம்மனிதன் பின் வந்த மற்றுமோர் மனிதன் வீதியில் பணமுடிப்பைக் கண்டு, அதனை எடுக்கின்றான். எம்பெருமான் தேவியைப் பார்த்து, "அம்மனிதனுக்கு அருள் புரியென்று கேட்டாயே, பார்த்தாயா? ஒருவனின் பூர்வீகத்திற்கேற்ப அளந்தது அளந்ததுதான்" என்றார்.

சாப்பிட வந்தவர்-முந்தா நாள் இட்லி ரொம்ப ரொம்பப் பிரமாதமாயிருந்தது. இன்று ஏன் மோசமாயிருக்கிறது?

சர்வர்:- இது முந்தா நாள் போட்ட இட்லி தான் ஐயா, மோசமா யிருக்காதே!

—இணையன்,
2, அப்பாசாமிபிள்ளைகந்து
சென்னை-21

விஞ்ஞானப்புதுமைகள் (1)

## தொங்குபாலம்

பல மைல்களுக்கு அப்பால் நடுக்கடலிலிருந்து பார்த்தாலும் தெரிகிறது. ஆகாயத்தில் ஏதோ ஆடிக்கொண்டிருப்பது போல் முதல் தோன்றும். கிட்ட நெருங்க நெருங்க, மாபெரும் வெற்றிவளைவு போல், கலையழகு தவழ, கண்ணையும் கருத்தையும் கவர்ந்து நிற்கிறது.

இதுதான் வெராஸானே-நேரோஸ் பாலம்; நியூயோர்க் துறைமுகத்தின் அற்புதங்களில் புத்தம் புதியஒன்று. ஸ்டேட்டன் தீவையும், நியூயார்க் மாநகரின் புரூக்ளீன பகுதியையும் இணைக்கும் இப்பாலம், துறைமுகத்துள் நுழையும் இடத்தின் குறுக்கே வானளாவி வழிவிட்டு நிற்கிறது.

நியூயார்க் வளைகுடாவை முதல்முதலாகக் கண்டுபிடித்த ஐரோப்பியர் 1954-ல் அங்குசென்ற இத்தாலியமாலுமி வெராஸானே என்பவரே. இவர் பெயரால்தான் பாலம் வழங்கப்படுகிறது.

சென்ற ஆண்டுதான் இந்தப் பாலம் திறந்து வைக்கப்பட்டது. இதைக் கட்டி முடித்தது உலக பொறிஇயல் வரலாற்றிலேயே மிகவும் கடினமான ஒரு வேலை. தற்காலத்தில், 20-ம் நூற்றுண்டில் மனிதன் ஆக்கிய மாபெரும் கலைப்படைப்புகளில் இதுவும் ஒன்று என்றால் மிகையாகாது.

கிட்டத்தட்ட 2 1/2 மைல் நீளமுள்ள இந்தத் தொங்குபாலத்துக்கு வடிவம் அமைத்தவர் ஆத்மர் எச். அம்மன் என்னும் நிபுணராவர்.

பாலத்தின் நடு வளைவு 4, 260 அடி நீளம் உடையது. நான்கு தொங்கு கம்பிகளிலிருந்து தொங்க விடப்பட்டுள்ளது. இரு புறமும் கோபுரங்கள் உள்ளன. இடையில் தூண் ஏதும் இல்லை. இதற்குமுன் உலகத்திலேயே பெரிய தொங்கு பாலமாக விளங்கிய சான்பிரான்சிஸ்கோ கோல்டன்கேட்பாலத்தை விட இது 60 அடி அதிக நீளம்.

பாமா

## கொடியின் விலை ரூ. 72 ஆயிரம்!

அமெரிக்கக் கொடி ஒன்று ரூ 72 ஆயிரத்துக்கு விற்கப்பட்டுள்ளது. 18-ம் நூற்றுண்டைச்சேர்ந்த அக்கொடியை லண்டன் சோதிபை ஏலக்கடையில் நியூயோர்க்கிலுள்ள கால்வெல்ட்டிஸ்டிலர்ஸ் கம்பெனியின் அதிபரான எட்கார் எம். பிரான் ஃப்மான் வாங்கினார்.

15 நட்சத்திரங்களையும், 8 வெள்ளைப் பட்டைகளையும், 7 நீலப்பட்டைகளையும் கொண்ட அக்கொடி முன்னர் திருமதி பி. சோம்சுக்கு சொந்தமாக இருந்தது.

## கடல்

— மு. சடாட்சரன் —

கடலே கடலே பெருங்கடலே!
கண்ணன் நீலக் கருங்கடலே!
அலைகள் எழுப்பும் ஆழ் கடலே!
அழகு மீன்கள் வாழ் கடலே!

புரண்டு புரண்டு வருகின்றாய்!
பொழுதெல் லாம் நீ சுழல்கின்றாய்!
கதறிக் கதறி அழுகின்றாய்!
கடவுளை நினைத்தோ தொழுகின்றாய்!




## இதுவும் ஒருவகைத் திருமணம்

இரு மனங்கள் இசைவினால் திருமணம் நடைபெறுகிறது. திரு என்ற சொல் அழகு, செல்வம் ஆகிய கருத்துக்கள் உடைய உயர்ந்த சொல்லாகும். உலகில் நடைபெறும் ஒவ்வொரு வகைத் திருமணத்தில் அந்தமான் தீவில் நடைபெறும் திருமணவைபவ முறையை இங்கு காண்போம்.

திருமணத்தின் போது நன்கு அலங்கரிக்கப்பட்ட மணப்பெண், பலர் மத்தியில், தரையில் தன் இரு கால்களையும் நீட்டிய வண்ணம் அமர்ந்திருப்பாள். ஒரு சில நிமிடங்கள் கழித்து மாப்பிள்ளை அவளருகில் வருவார். வந்தவர் மணப்பெண்ணின் முன் அமர்ந்து கொண்டு தன் இரு கால்களையும் அவள் கால்கள் மீது போட்டு உட்காருவார். இப்படிச் செய்வதால் மாப்பிள்ளைக்கு அப்பெண்ணை மணக்க பூரண சம்மதம் என்று பொருளாகுமாம். அத்துடன் கல்யாணமும் முடிந்துவிட்டதாகக் கருதுகிறார்கள்.

## "தீயகறியா தூயகறியா?"

புலால்உணவு கொள்ளாத நாட்களில் காய்கறிகளைச் சமைத்துச் சாப்பிடுகிறோம். பேச்சுவாக்கிலே யாரிடமாவது, "இன்று எங்கள் வீட்டிலே 'தீய' கறி; மச்சமாமிசமில்லை" என்கின்றோம். இது சரியா?

புனிதமான காய்கறி உணவைத் "தீய" கறி எனலாமா? காய்கறி உணவு 'தீய'கறியாயின் தூய்மையான கறிஎது? எனவே நாம் காய்கறி உணவைத் 'தீய' என்று அழையாமல் 'தூய' என்ற நற்பதத்தை வைத்து 'தூயகறி' என அழைப்பதே சிறப்பு.

— "வரணியூர்ச் சிவன்"

## நடுவிரல் மோதிரம்

ஜெனிவாவில் உள்ள பெண்கள் இடதுகை நடுவிரலில் மோதிரம் அணிவதில் பெரிதும் நாட்டம்செலுத்தி வருகின்றனர். பெண் மணமானவளா, திருமணப்பதிவு செய்துகொண்டவளா என்பதைக் குறிப்பிடாது அப்பெண் ஓர் ஆண்மேல் நாட்டம் கொண்டுள்ளாள் என்பதனை நடுவிரல் மோதிரம் குறிப்பிடுகிறது. ஒரு பாம்பு வைரத்தினாலான அப்பிள் பழத்தை வைத்திருப்பது போன்று அம்மோதிரம் செய்யப்பட்டுள்ளது.

ஒரு பெண் தன் அந்தரங்கத்திலிருக்கிற உண்மையை உலகத்திற்குப் பகிரங்கமாகத் தெரிவித்துக் கொள்ளத்தான் எத்தனை ஆயிரம் தடைகள்.

—மணிவண்ணன்



பாவைப்பிள்ளைகளுக்கு (பொம்மைகள்) ஆடை அணிகள் தயாரிப்பது ஒரு தனிக்கலை. குழந்தைகளின் விருப்பு வெறுப்புகளை நன்கு அறிந்தவையற் கலைஞர்கள், காலப் போக்கை அனுசரித்து 'பாஷன்' மிளிர ஆடைகளைத் தயாரித்தால்தான் வெற்றி பெறுவார்கள். லண்டனில் உள்ள பிளேவெயர் மனுபாக்ஷரிங் கம்பனியார்தயாரித்த சில கவர்ச்சியான ஆடைகளைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்தியில் இவர்

"ஸி. எஸ்." என்ற இரண்டெழுத்துப் பெயர் இந்தியா முழுவதிலும் நன்கு தெரிந்த பெயராகிவிட்டது. முன்பு தமிழ்நாட்டில்தான் இது பிரபலமடைந்திருந்தது. இன்று இந்தியாவுக்கு வெளியிலும் அது பிரபலமடைந்துள்ளது. சி. சுப்பிரமணியம் என்ற பெயர்தான் அது. 'தமிழ் நாட்டின் தங்கமூளை' எனக் கருதப்பட்ட இந்த இரண்டெழுத்துப் பெயருக்குரியவர் இன்று இந்தியாவின் உணவுப் பஞ்சத்தைத் தீர்ப்பதிலும் ஆளும் கட்சிக்குள்ளேயும் வெளியேயும் இருந்து வரும் எதிர்ப்புக்களைச் சமாளிப்பதிலும் தனது மூளையைச் செலவிட்டுக் கொண்டிருக்கிறார். ஒரு வாரத்தில் ஒரு நேரம் பட்டினி கிடப்பது போதாது, இரண்டு நேரம் பட்டினி கிடவுங்கள் என்று பஞ்சத்தைப் போக்க யோசனை கூறுகிறார். புளியங்கொட்டையையும் பருத்திக்கொட்டையையும் சாப்பிடுங்கள் என்று கூறிய முன்ஷியைவிட இரு நேரம் பட்டினி கிடவுங்கள் என்று கூறுவது தவறான யோசனையல்ல! தமிழ் நாட்டில் காமராஜ் மந்திரிசபையில் நிதி, கல்வி முதலிய பல்வேறு அமைச்சுகளையும் தனது தோளில் சுமந்துகொண்டு வெற்றிகரமாகச் சமாளித்ததுமட்டுமல்ல அண்ணா, கலியாணசுந்தரம், கருணாநிதி போன்ற எதிர்க்கட்சிப் பீரங்கிகளின் கண்டனங்களுக்கெல்லாம், அதிகம் பேசாத காமராஜருக்காக, ஈடுகொடுத்து உடனுக்குடன் பதிலளித்துச் சமாளித்தவரும் இந்த சி. எஸ், தான்! காமராஜரையே கண்டனங்களிலிருந்து காப்பாற்றிய சி. எஸ். இப்பொழுது காமராஜரின் 'சொல்லடி' யையும் சமாளிக்கவேண்டியிருக்கிறது. இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிச் சம்பவங்களைத் தொடர்ந்து மந்திரிப் பதவியை உதறித் தள்ள முன்வந்த சி. எஸ். பின்னர் சாஸ்திரியின் வற்புறுத்தலின்மீது அதை வாபஸ் பெற்றார். எனினும் தமிழ் நாட்டார் பதவியை உதறித்தள்ள எப்பொழுதும் தயார் என்பதை அடிக்கடி சி. எஸ். நினைவூட்டி வருபவர். உணவுக் கொள்கை பற்றி காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து "ராஜினாமாச் செய்வதுதான் வழி" என்று சி. எஸ். கூறியபோது, "ராஜினாமா என்று மிரட்டாதீர்கள். வேண்டுமானால் வெளியேறுங்கள்" என்று பச்சைத் தமிழர் காமராஜர் பச்சையாகச் சொன்னது, சுப்பிரமணியத்துக்கு நல்லதல்லத்தான்!

வெளிநாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்திருக்கும் சுப்பிரமணியம் தமது வெளிநாட்டுப் பயணம்பற்றி எழுதியுள்ள பிரயாணக்கட்டுரைகள் அவரது தமிழ் எழுத்து வன்மைக்கும் ஒருசான்று. அமெரிக்காவுக்குச் சமீபத்தில்சென்று உணவும்பெற்றிருக்கிறார்.

நாவன்மையும் எழுத்தாற்றலும் எதற்கும் தளராத உறுதியும் உடையவர் சி. எஸ்.

— தேனீ

## நோயும் சிகிச்சையும்—15

# இரத்தசோகை எனப்படும் பாண்டு

எங்கள் தேகத்திலே இரத்தமானது உடலில் எல்லாத் திசுக்களும் தத்தமது கடமையைச் சரியாக ஆற்றத் தேவையான சத்துப் பொருள்கள்- யாவற்றையும் உடலில் எல்லா மூலைமுடுக்குகளிலும் உள்ள திசுக்களுக்கு எடுத்துச் செல்லுகின்றது. அங்கு ஏற்படும் கழிவுப் பொருள்கள் யாவற்றையும் இதயத்தின் வழியாக நுரையீரலுக்கு எடுத்துச்சென்று அங்கிருந்து வெளியே அகற்றப் பெரிதும் துணைசெய்கிறது. இத்தன்மையுள்ள இரத்தத்தில் விசேடமான பொருள் ஹீமோகுளோபின் (Haemoglobin) ஆகும். இந்த ஹீமோகுளோபின் செவ்வையாகத் தன்னுடையபணியை ஆற்றவேண்டுமானால், இதற்குத் தேவையான சத்துப் பொருள்களை உடலில் ஊட்டிக் கொள்ளவேண்டும். நாம் உண்ணும் உணவில் தேவையான அளவில் சிலவகைச் சத்துள்ள உணவுப்பொருள்கள் குறைவதால், இரத்தத்திலுள்ள பொருள்களின் திறனானது தடைசெய்யப்பட்டு பாண்டுநோய் உண்டாகின்றது. இதைத்தான் பலர் இரத்த சோகை அல்லது பாண்டுரோகம் (Anaemia) என அழைக்கின்றனர். நம் நாட்டில் அதிகமானோருக்கு இந்நோய் இருப்பதைக் காண்கின்றோம். இவை எல்லாவற்றிற்கும் காரணம் வறுமையேயாகும்.

பாண்டுநோய் என்றால் என்ன?

இந்தக்கேள்வி பலரிடமும் எழுகின்றது. இரத்தத்தின் அளவிலோ அல்லது தன்மையிலோ குறைவு ஏற்படும் பொழுதுதோன்றும்நோயை பாண்டு அல்லது இரத்த சோகை என்று சொல்லுகின்றனர்.

பாண்டுரோகத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்

1. தேகத்தில் இரத்தத்தின் அளவு குறைவதால் உண்டாவது.

2. இரத்தத்திலுள்ளசெவ் அணுக்களும் ஹீமோகுளோபின் உற்பத்திக்கு வேண்டிய பொருள்கள் உணவில்குறைவதால் உண்டாவது.

1-இரத்தஅளவு குறைவதால் ஏற்படல்

பல சமயங்களில் விபத்தினாலோ அல்லது பெரும் பெரும் காயங்களினாலோ இரத்தத்தை அதிக அளவில் நம் உடலிலிருந்து இழக்க நேரிடுகிறது. இதனால் இரத்தத்தின் அளவானது மிக மிகக் குறைகிறது. செவ்வணுக்களின் எண்ணிக்கைக்கு ஒக்சியின் (Oxygen ஈர்க்கும் தன்மை குறைந்து பாண்டு நோய் ஏற்படுகிறது.

2-சத்துப்பொருள் குறைவால் ஏற்படுவது

இரத்தத்தில் ஹீமோகுளோபின் உற்பத்தியாவதற்கு முக்கியபொருளாகிய புரதம், (Protein), இரும்பு (Iron முதலிய சத்துப் பொருள்கள் குறைவதால் பாண்டுநோய் ஏற்படலாம்.

இரத்தத்திலுள்ள செவ்வணுக்களை உற்பத்திசெய்யும் மூலப்பொருட்கள்குறைவதால் உண்டாகலாம்.

மாதவநிதானப்படி

பாண்டுரோகம் பிரதானமாகப் பித்தத்தினாலேயே உற்பத்தியாவதாகக் கூறுவர். இவை 5 வகைப்படும்.

குழந்தைப்பருவத்தில் உண்டாகும் பாண்டுரோகம்

தாயார் கர்ப்பமுற்ற காலங்களில் போதிய புரதம் இரும்புச்சத்துள்ள உணவுகளைச் சாப்பாட்டில் சேர்க்காவிடில், கர்ப்பம் தாயின் உடலிலிருந்து, இரத்தம் பெறுவதால் இவ் இரத்தத்திலுள்ள இரும்புச்சத்தை தேவைக்கு எடுப்பதை -எடுத்து மிகுதியை, கல்லீரலில் (Liver) சேமித்துவைக்கின்றன. அவ்வாறு சேமிப்பான சத்தானது பிறந்த பின்னரும் 3 அல்லது 4 மாதங்களுக்கு குழந்தைகள் சீவிக்க உதவுவது. எனவே தாய் அச்சத்துள்ள உணவுகளைச் சாப்பிடாவிட்டால் பிள்ளையும் தாயும் பாண்டுரோகத்தால் பீடிக்கப்படுகின்றனர்.

வாலிபத்தில் உண்டாகும்பாண்டு

இளமைப் பருவங்களில் அதிகமாக ஆண்களைவிடப் பெண்கள்தாம் இலங்கையில் இந்நோய்க்கு கூடுதலாக ஆளாகிறார்கள். காரணம் யாதெனில் மாதவிடாய் உள்ள நேரத்தில் வெளியா

**க. வேல்மணி**

கும் இரத்தத்தில் இரும்புச் சத்து அதிமாக வெளியாகின்றது. மேற் குறிப்பிட்ட இத்தகைய உணவுகளைப் பெண்கள் சாப்பிடாது விட்டுவிடுவதால் பாண்டு ரோகத்துக்கு ஆளாகிறார்கள்.

25-35 வயதில் உள்ள பெண்கள் தாய்மைப் பேற்றை அடைந்த காலங்களில் நாளொன்றுக்கு 3 மில்லிகிராம் வீதம் பெண்கள் இழக்கின்றனர். இத்தகைய இழப்பைப்பெண்கள் ஈடுசெய்யாதபோது பாண்டு நோய்க்கு வசப்படுகின்றனர்.

நல்லஆகாரமற்ற ஏழைமக்களிடத்தும்அதிகசிற்றின்பத்தில் ஈடுபடுபவர்களுக்கும் பாண்டுரோகம் மிக விரைவில் உண்டாகின்றது.

பாண்டுரோகத்தில் வயிற்றுப் பொருமல், இரைப்பு, பசியின்மையின்போது உபயோகிப்பது:

பேய்த்தும்மட்டி - 4 களஞ்சு' கடுகுரோகணி - 4 களஞ்சு, கோரைக்கிழங்கு - 4 களஞ்சு. வெண்கோட்டம்-8 களஞ்சு, தேவதாரு-8 களஞ்சு, வெட்பாலரிசி-4 களஞ்சு.

இவைகளை நன்கு இரவில் வைத்ததன் பின்னர் பஸ்பமாக இடித்து அரித்துக் காலை, மாலை தேனில் உட்கொள்ளக்கொடுக்கவும்.

பாண்டுவினால் மண், பென்சில் உண்ணும் தாபமுள்ள குழந்தைகளுக்கு உபயோகிப்பது

வாய்விடங்கம், சித்திரமூலம், வேப்பம்பூஇவற்றைச் சமஎடைஎடுத்துத் தூளாக்கி காலை, மாலை சுடுநீரில்கலந்து கொடுக்கவும். (பிரமாணம் 3 விரல் அளவு)

பாண்டு ரோகியின் உபத்திரவம்

பலவீனம், அஜீரணம், பசியின்மை, வாந்தி, மலக்கட்டு, ஓயாநித்திரை. அரை அல்லது முழுமயக்கம், சிற்சில சமயம் மலப்போக்கு, கணுக்கால்களில்வீக்கம், நாவறட்சி வாய் நாற்றம், மூத்திரம், கண்சலம் வெளிறல், மனச்சோர்வு, மண். கல், சீனி, பென்சில் முதலியன உண்ண விடுப்பம்.

இலங்கையில் பாண்டு உண்டாவதின் காரணம்

1. இரத்த மூலக்காரருக்கும் - 2. அதிக மாதவிடாய்க்காரருக்கும் - 3. நீடித்தசுரம் இருப்பவனுக்கும் - 4. சுத்த காற்று தடமாடாதஇருண்ட வீடுகளில் சீவியம் கழிப்போருக்கும் - 5. இரத்த வங்கிகளில் இரத்தம் கொடுப்போருக்கும் - 6. உபவாசம் [illegible] சாப்பிடாதுவிடுபவருக்கும்- 7. நாளொன்றுக்கு 3 நேரம் சாப்பிடாது 1 நேரம் சாப்பிடுபவர்களுக்கும் பாண்டு ரோகம் மிக எளிதில் உண்டாகின்றது.

பாண்டு ரோகிக்கு கொடுக்கும் மருந்துகள்

அயச்செந்தூரம் அல்லது மண்டூரச்செந்தூரம் 1 குன்றி பிரமாணப்படி காலை, மாலை தேனில் உட்கொள்ளக் கொடுக்கவும். (பத்தியம்) உப்புப் புளி நீக்குதல்வேண்டும்.

பாண்டுவில் சுரம் இருக்குமாயின்

1. சீதோ இராம குளிகையை அல்லது 2. தங்க ஏலாதி முதலியவற்றில் ஒரு மருந்தை எடுத்து, காலை மாலை 2 குளிகைவீதம் இஞ்சிச்சாற்றில் கொடுக்கவும்.

பாண்டுநோயைக்குணப்படுத்தும் உணவு வகைகள்

எமது அன்றாட உணவில் அதிக அளவு இரும்புச் சத்தும், புரதமும் (Protein) நிறைந்த பொருள்களை நிறையச் சாப்பிடுதல் வேண்டும்.

நாள்வீதம் சேரும் உணவில் கல்லீரல் (Liver) முக்கியமான கறியாக இருத்தல் வேண்டும்.

இறைச்சிவகை- கோழி முட்டை-உருளைக்கிழங்கு - பால்-உழுந்து-பயறு- கடலை- இதயம் - மூளை - சூப்புவகைகள்-கீரை வகைகள் அதிக அளவில் சேர்ந்திருத்தல் வேண்டும். மேல் குறிப்பிட்ட உணவுவகைகளை நாள்வீதம் உணவில் சேர்த்தல் நன்று.

காலையில் படுக்கைவிட்டெழுந்ததும் நன்கு மிளகு போட்டுக்காய்ச்சிய பாலை நோயாளிக்குக் கொடுக்கவும். பின்பு 10-11 மணி மத்தியான நேரத்தில் (Marmite) மார்மைட் சூப்புத்தவறாது கொடுக்கவும். இரவில் படுக்கப்போகும்பொழுது ஏதும் எலும்புச் சூப்புவகைகளைக் கொடுத்தல் நல்லது.

நோயாளிக்கு மலச்சிக்கல் இருந்தால்

1. சூரத்தாமரையும் கடுக்காயும் அவித்த கசாயத்தையோ அல்லது. 2. கொன்றைப்புளியையோ அல்லது, 3. திரிபலைச்சூரணத்தையோ இலகு மலகாரியாகக் கொடுக்கலாம்.

நோயாளிக்கு நோய் குணமடைந்து வரும் சமயம் நல்ல அயலேகியம் காலை, மாலை தூதுவளங்காய்ப் பிரமாணங் கொடுத்தல்வேண் வேண்டும்.

வாயில் மணம் வீசக்கண்டால்

மஞ்சள் அவித்த நீரால் வாயைக் கொப்பளிக்கவும் அல்லது நீர் கலந்த டெற்றோலால் வாயைச் சுத்தம் செய்யவும்.

நோயாளிக்கு வயிற்று முறுக்கல் இருந்தால்

வெள்ளாட்டுப் பாலை நன்கு சூடாக்கி கொதித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் ஓர் எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து சுடச்சுடக்குடிக்க எந்த வயிற்று முறுக்கல் உள்ளவருக்கும் சில நிமிடத்துள் வயிற்று முறுக்கு அகலும். வெள்ளாட்டுப்பாலை ஆறவிட்டு நேரஞ்சென்று குடித்தால் எலுமிச்சம் பழச்சாறு பாலை கட்டியாக்கி தயிராக்கும்தன்மையுடையதால் சுடச்சுடக் குடிக்கவும்.

## நம்பலாம் நடந்தது!

தந்தை வழியை வாழ்விலேதான் கடைப்பிடிப்பார்கள் தனயன்மார்கள் என்கிறீர்களா? அப்படியில்லை; சாவிலே கூடப் பெற்றவரின் பணியைப் பின்பற்றியிருக்கிறான் ஒரு தகப்பன்சாமி.

தந்தை ஒரு திருடன்; அகப்பட்டுக்கொண்டான்; திருடிய குற்றத்துக்காகத் தண்டனை விதிக்கப்பட்டான்! விசித்திரமான தண்டனை. சாகுமளவும் தலைகீழாக நின்று தீர்க்கவேண்டும்!

இது நடந்து இருபது ஆண்டுகள் கழிந்தது! அந்தத் திருடனுடைய மகன் குற்றவாளியானான், திருட்டுக் குற்றத்துக்காகவே!

வழக்கு நடந்தது; தூக்குத் தண்டனை வழங்கினார்கள் நீதிபதிகள். ஆனால் அவனோ தனக்கும் தன் தந்தைக்கு வழங்கியதைப் போலவே தண்டனை தரவேண்டுமென்று மன்றாடினான். அவனது விசித்திரமான வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தலைகீழாக நின்றே உயிர் விட்டான்!

அவன் பெயர்: ஜான் பார்டிகின்; அது நடந்த ஆண்டு: 1816; நியூகாசில் சிறைச்சாலை, இங்கிலாந்து.

**சர்ச்சிலின் நா நயம்!**

துணிவும் ஆற்றலும் நிரம்பிய சர்ச்சில் கேட்போரை உணர்ச்சிவசப்படுவதுபோல மட்டும்தான் பேசத் தெரிந்தவர் என்பதில்லை. மற்றவர்கள் வாயடைத்துப் போகும்படி செய்ய நகைச்சுவை ததும்பப் பதில் சொல்லவும் வல்லவர்.

உலக சரித்திரத்திலேயே முதலாவதாக 1919-ல் லேடி ஆஸ்டர் என்ற பெண்மணி ஹவுஸ் ஆப் காமன்ஸ் அங்கத்தினராக நுழைந்தாள். ஒரு பெண் அங்கத்தினராவது அப்போது சர்ச்சிலுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. ஆஸ்டரைக் கண்டபோதெல்லாம் சீறிவிழுந்தார்.

"பெண்கள் அங்கத்தினராவது ஏன் உங்களுக்குப் பிடிக்கவில்லை?" என்று அவள் இவரைக் கேட்டாள்.

"நான் தனியாகக் குளித்துக்கொண்டிருக்கும்போது ஒரு பெண் குளியலறைக்குள் வந்துவிட்டால் எவ்வளவு கஷ்டமாக இருக்குமோ, அவ்வளவு கஷ்டமாக அருவருப்பாக இருக்கிறது, நீர் இங்கே வந்திருப்பது என்றார் சர்ச்சில்.

"குளிக்கும்போது பெண்கள் பார்க்கவிரும்புவது போல நீங்கள் அவ்வளவு அழகாக இல்லையே!" என்று கிண்டலாகப் பதில் சொல்லிவிட்டாள் லேடி ஆஸ்டர். அப்பொழுது சர்ச்சில் எதுவித பதிலும் சொல்லாவிட்டாலும், வேறு ஒரு சமயத்தில் லேடி ஆஸ்டரை வாயடைக்கச் செய்துவிட்டார்.

"நீங்கள் மட்டும் என் கணவனாக இருந்தால் உங்களுக்குக் கொடுக்கும் காப்பியில் விஷம் கலந்து கொடுத்துவிடுவேன்" என்றாள் லேடி ஆஸ்டர் எரிச்சலோடு, சர்ச்சிலைப் பார்த்து.

உடனே சர்ச்சில் சொன்னார்; "நீர்மட்டும் என் மனைவியாக இருந்தால், வாங்கிக் குடித்துவிடுவேன்!"

—ராஜன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உங்கள் இராசி பலன்

எழுதுவது

சோதிட ஆசான் செ. தெல்லியூர்

Colombo Studio

[விசுவாவசு வருடம் மாசித் திங்கள் 9-ந் திகதி ஞாயிறு முதல் (20-2-66) 15-ந் திகதி சனிக்கிழமை (26-2-66) வரை]

**மேட இராசி**

குடும்பச் சிறப்பு, பெருள் வரவு, செய்காரிய வெற்றி, தொழிற் சிறப்பு, பதவி மாற்றம், புதிய அந்தஸ்துப் பெறுதல், வாக்குச் சிறப்பு, அதிகாரப் பேறு, கீர்த்தி, கல்விச் சீர்சிறப்புப் பெறுதல், கமத்தொழில் மேன்மை, வர்த்தக முயற்சி பலிதம்.

**இடப இராசி**

ரோகம், ஆயுதகோர பயம், சத்துருக்களால் கஷ்டம், தொழில் சமலாபம், பெண்களால் உதவிகிட்டல், தனலாபம், ஊழியர் உதவி, மனத்தில் ஆதங்கம், பிதா வழிக் கஷ்டம்.

**மிதுன இராசி**

நிலை மாற்றம், அவமானச் சொற் கேட்டல், பொருள் வீண் அழிவு, பிணைப்போவதால் கஷ்டம் விழைதல், கொடுத்த பொருள் வராமை, செய்காரியத் தடை, பாடுபடுவதற்குப் பலன் கிட்டாமை, வர்த்தக மந்தம்.

**கடக இராசி**

பழிச்சொற் கேட்டல், அவமானகரமான நிகழ்ச்சிகளில் ஈடுபாடு, தாரபுத்திர கஷ்டம், குடும்ப சச்சரவு, களத்திரவழிப் பகைமை, ரோகபீடை காணல், வர்த்தக மத்திம பலன், கமத்தொழில் கஷ்டம், வித்தைச் சிறப்பு,

**சிங்க இராசி**

வீண் அலைச்சல்தரும் பிரயாணங்கள் ஏற்படல், செய்காரிய விக்கினம், தொழில் மந்த நிலைமையடைதல், நண்பர் - குடும்பம் - புத்திரரால் மனச்சஞ்சலம் ஏற்படல், தொழில் அல்லது அந்தஸ்தில் மாற்றம் நிகழ்தல், எதிலும் கஷ்டம் கண்டு மனம் மடிதல்.

**கன்னி இராசி**

உயர்வான சிந்தனைகள், தொழிலில் ஊக்கம் மிகுதல், வருவாய் அதிகரிப்பு, பண வரவு, தனதானியச் சிறப்பு, கமத்தொழில் விருத்தி, தேகாரோக்கியச் சிறப்பு, குடும்ப சுகம், வாக்கு மேன்மை.

**துலா இராசி**

ஆயுத-சோர - சத்துரு பயம் காணல், ரோகபீடை, குடும்பத்தில் நிம்மதியீனம் நண்பர் வெறுப்பு, பாடுபடுவதற்குப்பயன்கிட்டாமை, வர்த்தகம்-கமம்-நலம் இழத்தல், சரீர மெலிவு.

**விருச்சிக இராசி**

நீசர்சேர்க்கை, பணச் செலவு, உடல்நலம்குன்றல், பழைய கடன், வரவு, களத்திர புத்திர சுகம், புதிய அந்தஸ்து, சௌகரியங்கள் தாமதப்பட்டு நிறைவேறல், பந்துக்களால் மனத்தில் சஞ்சலம்.

**தனு இராசி**

செய்தொழில் சிறப்பு, பொருள் வரவு, முதியோர்-நண்பர் உதவி, சத்துரு ஜெயம் உத்தியோகபதவிச் சிறப்பு, ஊழியர் உதவி, அதிகாரவிருத்தி, கமத்தொழில் மேன்மை, வர்த்தகச் செழிப்பு.

**மகர இராசி**

பேச்சுக்கலகம், குடும்பப் பிரச்னை உருவெடுத்தல், பண முடை, கொடுக்கல் வாங்கல் பிணக்கு, பழிச்சொற்கேட்டல், அபவாதம்கேட்டல், மனச்சஞ்சலம், பயன்தராத முயற்சிகளில் ஈடுபாடு, கமத்தொழில்-வர்த்தகம் பயனின்மை.

**கும்ப இராசி**

கஷ்டமான பலன்கள்நடத்தல், நம்பியோர் ஏமாற்றுதல், பணமுடை, சரீராரோக்கியக்குறைவு, வாக்குக் கலகலகம், வியாச்சிய வம்பு வழக்குகள், பொருள்அழிவு, செய்காரியத்தடை.

**மீன இராசி**

பழிச்சொல் கேட்டல், செய்காரியத்தடை, பாடுபடுவதற்குப்பயன் கிட்டாமை, வாக்குச் சச்சரவு, இனபந்துக்கள் பீடை, சத்துருக்களால் கஷ்டம் விழைதல், கமம்-வர்த்தகம்- உத்தியோகம்நற்பயன்தராமை, சயன-போசன சுகக்குறைவு.

## கலைப்புலவர் . . .

(I-ம் பக்கத் தொடர்ச்சி)

### புரவலர்

கலைப்புலவர் அவர்கள்எத்தனையோ அறிஞர்களை ஆதரித்து, அவர்கள் சிறந்த தொண்டுகள்இயற்றுவதற்கு வசதி செய்துகொடுத்தனர். சுவாமி உருத்திரகோடீஸ்வரர் என்னும் தமிழறிஞர் நெடுங்காலமாகக் கலாநிலைய மண்டபத்தில் வசித்து, தமிழ்த்தொண்டு புரிந்ததை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறோம். கலைப்புலவர் அவர்கள் "தென்னிந்திய சிற்ப வடிவங்கள்" என்னும் நூலை எழுதியபொழுது மேற்படி சுவாமிகள் தமிழிலக்கியத்தில் இருந்து மேற்கோளை எடுத்துக் கொடுத்ததோடு, நூலின் கையெழுத்துப்பிரதியையும் பார்வையிட்டுக் கொடுத்தனர்.

டாக்டர் பிற்ஸ் என்னும் ஜெர்மனிய அறிஞர், கலைப்புலவரின் ஆதரவில் மேற்கூறப்பட்ட கலாநிலைய மண்டபத்தில் வசித்துவந்தார். அவரைக்கொண்டு ஜெர்மன் பாஷையில் டாக்டர் ஷொமரஸ் என்பவரால் எழுதப்பெற்ற சிறந்த சைவசித்தாந்த நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பித்தார்.

### சமூகத்தொண்டு

இளம்வயதிலிருந்தேகலைப்புலவரவர்கள் சமூகத் தொண்டில் ஈடுபட்டிருந்தார். 1920-ம் ஆண்டளவில்யோகசுவாமிஅவர்களது ஆசியோடு மதுவிலக்குஇயக்கத்தில். தீவிரமாக ஈடுபட்டார். 1930-ம் ஆண்டளவில் யாழ்ப்பாண வாலிப மகாநாடுமூலம் தீண்டாமையை இந்நாட்டிலிருந்து போக்குவதற்கு அரும்பாடு பட்டார். சைவசமயத்தில் தீண்டாண்மக்கு இடமில்லை என்பதை பல சான்றுகளோடு எடுத்துக் காட்டிய பெருமை இவர்களையே சாரும். கலைப்புலவரவர்கள் செய்த தொண்டுகளுக்கெல்லாம் சிகரமாக விளங்கியது 1951-ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் விழாவாகும். அதற்கு உயிர் நாடியாகவிளங்கியவர் கலைப்புலவராவர். அதுபோன்ற ஒரு தமிழ் விழா தமிழ் நாட்டிலோஅன்றி ஈழநாட்டிலோ இதுவரைநடைபெறவில்லை.

### நூலாசிரியர்

கலைப்புலவர் அவர்கள்தமிழிலும், ஆங்கிலத்திலும் பல நூல்களை இயற்றியுள்ளார். அவருடைய ஒவ்வொரு நூலும் தனிச்சிறப்புவாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. அவர் இறந்ததன்பின் வெளிவந்த இந்துசமயம் பற்றி (Studies in Hinduism) நூல்உலகப் பேரறிஞர்களின் பாராட்டைப் பெற்றுவருகிறது.

## சந்திரமண்டல வாசலை

(Vம் பக்கத் தொடர்ச்சி)

வானம் கறுப்பாகத் தோன்றும். காற்றில் சூரியனின் ஒளிக்கற்றைகள் விழுந்து ஏற்படும் நீலப்பின்னணி இல்லாததால், சந்திரனில் சூரிய ஒளி பூமியை விடப் பிரகாசமாக இருக்கும். சூரியனின் ஏழு நிறக்கதிர்களில் இரு புறங்களிலும் உள்ள கதிர்கள் துலாம்பரமாகத்தெரியும். சூரியனின் வெள்ளியமானவெளிப்புறத் தோற்றவண்ணத்தை (Silver Corona) பூமியில் சூரிய கிரகணம் ஏற்படும்பொழுது பார்க்கமுடிகிறதல்லவா? அதுபோல சூரியனின் உட்புறத்தோற்றத்தையும்விசேட கருவிகொண்டே பூமியிலிருந்துபார்க்கமுடியும். ஆனல் சந்திரனில் இறங்கினல், சூரியனின் இவ்விரண்டு தோற்றங்களும்மிகவும் துலக்கமாகத்தெரியுமாம். பகல் நேரத்தில்கூட அங்கு நட்சத்திரங்கள் கண்வெட்டி இமைக்குமாம். நாங்கள்பூமியிலிருந்து சந்திரனைப் பார்க்கும்போது தெரியும் சந்திரனின் தோற்றத்தைவிட சந்திரனிலிருந்து பார்க்கும்போது எமது பூமி 13.7 தடவைகள் பெரிதாகத்தோன்றும். பூமியின் பரப்பு மங்கல் நீலமாகத் தெரியும். சந்திரனிலிருந்து பார்க்கும்போது சூரியன் மெதுவாக நகர்வதாகத் தோன்றுவதால் 15 நாட்களுக்கு வெளிச்சமும், 15 நாட்களுக்கு இருட்டுமாக இருக்கும். சந்திரனைப் பற்றி இதுவரை தெரிந்து கொள்ளப்பட்ட விபரங்கள் இவை. இனிமேல் லூனு-9 அனுப்பிய தகவல்களைக் கொண்டு மேலும் விபரங்களை அறியலாம்.

### சந்திரனில் மனிதன் இறங்க முடியுமா?

சந்திரனின்மேற்பரப்பு குண்டுகுழியுடனும், கரடுமுரடானதாகவும்இருப்பதால் அதில் நடப்பது கடினமாயிருக்கும். எனினும் அங்கு மனிதன் நடக்க புதிய வழிவகைகளை கையாளலாம் என விஞ்ஞானிகள் நம்புகின்றனர். ஏன், சந்திரமண்டலத்திலே ஆராய்ச்சிசாலைகளும், வானிலை அவதான நிலையங்களும் கூட நிறுவலாமாம். இப்படிச் செய்வதினுல் பூமியில் உள்ள மக்களுக்கு அபாயமான வானிலைகள்பற்றிஎச்சரிக்கைசெய்யவும் முடியும்

### பூமி அம்புலியாகுமா?

சந்திரனில் மனிதன் இறங்கி இவ்வித ஆராய்ச்சிகளை நடத்தி பூமியில் வாழும் மக்களுக்கு நன்மைபயக்கும் நாள் வெகு தூரத்திலில்லை. மனிதன் அங்கு வாழக்கூடியதாக இருப்பின் ஜனப்பெருக்கத்தால் கஷ்டப்படும் பூலோக மக்கள் இங்கிருந்து ரூக்கெட்டுகளில் 'படை'யெடுக்கும் காலம்கூட விரைவில் வரும் என்று எமது மனத்தில் நம்பிக்கை ஏற்படுகிறதல்லவா? கற்பனைப் பொருளாக, அம்புலியாக இருந்த சந்திரனிலும் மனிதன் வாழத்தொடங்கிவிட்டால் அங்கிருந்து பூமியைத் தான் அம்புலியென்று அழைக்கவேண்டும்!"

## விருந்துக்குப்பின் வில்லங்கம்

(Iம் பக்கத் தொடர்ச்சி)

என்று நினைத்துக் கொண்டு, அண்டங்கள் அதிரும்படி ஏப்பம்விடுவது என்னவோ அசிங்கமாகத் தோன்றுகிறது. இயற்கையாக உண்டாகும் எத்தனையோ உடல் உள்ளங்களைக் கட்டுப்படுத்த நாகரிகம் நம்மைப் பழக்கியிருக்கிறது. அவை இன்ன இன்னவை என்று சொல்லாமலே விளங்கும். பிறக்கும் போது இயற்கையாகவே இருந்த நிலையிலா இப்பொழுது இருக்கின்றோம்? உடலையும் உள்ளத்தையும் பிடுங்கித் தின்னும் எத்தனையோ இச்சைகளைக் கட்டுப்பாடு செய்யக் கற்றுக் கொண்டோம். பிறருக்கு அசிங்கமாகத் தோன்றக்கூடிய இந்த ஏப்பத்தையும் ஏன் கட்டுப்படுத்தக்கூடாது?

பசுபிக்தீவு வாசிகளின் வழக்கம் எவ்வளவு தான் அசிங்கமானதாகத் தெரிந்தாலும், சமயா சமயங்களில் அது நல்ல பலன்களைத் தரக்கூடிய ஓர் உத்தி என்பதையும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. வீட்டில் இன்று சமையல் சரியில்லையாக்கும். சாப்பிட்டு முடிந்த பின்பு மனைவிக்கு முன்னல் போய் நின்றுகொண்டு ஒரு மாபெரும் மௌனம்சாதிக்கலாம். வழக்கமாக கேட்கும் ஏப்பவெறியைக் காணுமே என்று மனைவி விஷயத்தை உணர்ந்துகொள்வாள்.

இதில் ஆபத்துக்கும் இடமுண்டு. மனைவி, தான் சமைத்த படையல் அற்புதமானதென்று அடம்பிடிக்கலாம். இப்படி அடிசிற்கினியாள் அபிப்பிராயபேதப்பட்டால் அதை முன்கூட்டியே உணர்ந்து கொண்டு சாப்பாடு முடிந்தவுடனே பச்சைத்தண்ணீருக்குப்பதிலாக அவளுக்குத் தெரியாமல் கொழும்புச்சோடாவை உடனடியாக விழுங்கிவிட வேண்டும். நிச்சயமாக ஏப்பம் பொத்துக்கொண்டுவருமென்று உறுதிசெய்து கொள்ளலாம்.

[illegible] வழிக்குக்கொண்டு வருவதற்கும் இந்தமுறை பயன்படும். ஹோட்டலில் சாப்பிடுகிறவர்கள் எல்லோரும் சேர்ந்து கொண்டு சாப்பாடு மகா மோசமாயிருக்கும் பட்சத்தில் அவருக்கெதிரே கூட்டமாய் குழுமி நின்று மௌன சத்தியாக்கிரகம் புரியவேண்டும். சாப்பாடு நன்ருயிருந்தாலென்ன, கெட்டதாயிருந்தாலென்ன, ஏப்பம் விட்டே தீரும் ஆசாமிகளை இந்தக் கோஷ்டியில் சேர்த்துக் கொள்ளப்படாது. அவர்கள் சங்கதியை வெளிப்படுத்தி திட்டத்தைப் பாழாக்கிவிடுவார்கள்.

என்னதானிருந்தாலும் கூட்டத்தில் பெரிய அதர்வெடி ஏப்பங்களை விட்டு, கலாட்டா செய்துவிடாதீர்கள். ஏப்பம் விடாவிட்டால் ஒருவர் குறை நினைத்துக் கொள்வார்என்றுகண்டால், வீட்டுக்குப் போனவுடனே விருந்து அபாரமாயிருந்ததென்று ஒரு நீண்ட கடிதம் வரைந்துவிடுங்கள். அதுவே போதும்.

## ஒட்டாண்டிகள் ஆகிறுர்கள்

கிராமங்களுக்குப் போய் நேரில்பார்க்கும்சிரமமெடுத்துக்கொள்ளும் யாரும் கிராமவாசிகள் நாளுக்குநாள் ஒட்டாண்டிகளாகிக்கொண்டுவருகிறுர்களென்ற உண்மையை அறிந்துகொள்ளலாம். மக்கள் பொருளாதாரத்திலும் அறிவிலும், ஒழுக்கத்திலும் ஏழ்மையாகிக்கொண்டேபோகிறுர்கள். கதர் இவர்களுக்கு வேலையையும் கருவிகளையும் கொடுத்து அவர்கள் தயாரிப்பவைகளை உடனேவிற்றுவிடுவதற்கான வசதியையும் அளிக்கிறது நேற்றுவரை ஏங்கிக்கொண்டிருந்தவர்களுக்குநம்பிக்கை அளிக்கிறது.

— காந்திநூல்(5)

## வரப்பெற்ருேம்

**தாலிசிரித்தது** (சிறுகதைத் தொகுதி) ஆசிரியர்: "மலையமான்." வெளியிட்டோர்: தேனருவி பிரசுராலயா, 20, ரோகிணி வீதி, வெள்ளவத்தை. பக்கம்: 125. விலை: ரூ. 2-00.

**சைவத்தொண்டன்** மாசி இதழ் (மகா சிவராத்திரி சிறப்பிதழ்). வெளியிட்டோர்: ஆசிரியர் ஆ. கந்தையா, கைதடி.

**கலைச்செல்வி** ஜனவரி 1966 பொங்கல் மலர். ஆசிரியர்: 'சிற்பி'. வெளியிட்டோர்: கலாதேவி அச்சகம், சுன்னுகம். பக்கம்: 120. விலை:50 சதம்.

**விவேகி** (திங்கள்வெளியீடு) ஜனவரி இதழ்.

**சுடர்** (பலாலி அரசினர் ஆசிரியர் கலாசாலை விஞ்ஞான கணித கைப்பணிக் கழக வெளியீடு-1965)

**ஞானக்கவிஞன்** (நாடகம்). எழுதியவர்: "சொக்கன்." வெளியிட்டோர்: ஆசீர் வெளியீடு, 32, கண்டி வீதி, யாழ்ப்பாணம். பக்கம்: 102. விலை: ரூபா இரண்டு.

SRILA SRI ARUMUGA NAVALAR-
The Champion Reformer of the Hindus. A Biographical study by V. Muttucumaraswamy B.A., Navalar Kottam, Vannarponnai, Jaffna. Pages: 125.

THAMIL AND SPHERE OF ORIGIN PART I, By A. Appathurai (Proctor S.C.) 'Tamil-Akam', Mallakam, Jaffna. Pages; 141

### யாழ். பொது நூல் நிலையம்

மக்கள் படித்து நற்பயனடையப் பல புதிய நூல்களை யாழ்ப்பாண பொது நூல் நிலையம் வரவழைத்துள்ளது. வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழி பெயர்ப்பு நூல்களை வெளியிட்டுவரும் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் நூல்கள் பல நூல் நிலையத்தில் இருக்கின்றன.

**இந்தியாவின் சிறப்பு வரலாறு**

ஆசிரியர்கள்:- ஆர். சி. மஜூம்தார், எச். சி. ராய் சௌதுரி, கே. தத்தா.

தமிழாக்கம்:- தி. வெ. குப்புசாமி.

வெளியீடு:- தமிழ் வெளியீட்டுக்கழகம், தமிழ்நாடு-அரசாங்கம்.

இந்நூல், இந்திய வரலாற்றை அறியவிரும்புவோருக்கும் சிறப்பாக வரலாறு கற்கும் மாணவர்களுக்கும் மிக்க பயனளிக்கும். மற்றுமோர் நூல்.

**நூல்:- பித்தரின் உள்ளங்கள்**

ஆசிரியர்:- பெர்னர்டு ஹார்ட், தமிழாக்கம்:- அ. பெசன்ட் கிரீப்பர்ராஜ். வெளியீடு:- தமிழ்வெளியீட்டுக்கழகம்.

இம்மொழிபெயர்ப்பு நூல் உளவியல் ஆராய்ச்சிக் கருத்துக்கள் பலவற்றை விளக்குகிறது.

## தியானம்

அடிமை மனப்பான்மையை அடியோடு ஒழி! நீ உனக்கு அரசன்; நீ உன் விண்; நீ உன் உலகம்; நீயே உன் கடவுள்; சுத்த சக்தி இறைவன் என்னுள் இருப்பது-போல் உன்னுள் இருக்கிறுன்; இதோ நெஞ்சைத் தொட்டுணர், தியானி. தியானத்தால் அருளும் பொருளும் உணர்வாகும்.

— சுத்தானந்தபாரதியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org